## பகுதி IV

# மத்திய வங்கியினதும் இலங்கையிலுள்ள வங்கித்தொழில் நிறுவனங்களினதும் கடமைகளும் தொழிற்பாடுகளும் தொடர்பான 1992 ஆம் ஆண்டின் முதன்மைச்சட்டவாக்கங்கள்


பக்கம்

**(அ) – சட்டங்கள்:**

1. 1992 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க இலங்கைத் தேசிய அபிவிருத்தி வங்கி (திருத்தச்) சட்டம் — i
2. 1992 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டம் — xiii
3. 1992 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க ஊழியர் சகாயநிதிய (திருத்தச்) சட்டம் — xxxi
4. 1992 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பிரெற்றன் வூட்ஸ் உடன்படிக்கைகள் (திருத்தச்) சட்டம் — xxxiii
5. 1992 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க நிதி (திருத்தச்) சட்டம் — xxxv
6. 1992 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வரி மன்னிப்பு (வீடமைப்பும் வர்த்தகக் கட்டிடங்களும்) சட்டம் — xxxvii
7. 1992 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க மொத்த விற்பனை வரவு வரி (திருத்தச்) சட்டம் — XLvii
8. 1992 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க வருமானவரி மீதான மிகைவரி (திருத்தச்) சட்டம் — L
9. 1992 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க உள்ளூர் திறைசேரி உண்டியல்கள் (திருத்தச்) சட்டம் — Liv
10. 1992 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க பாதுகாப்புஅறவீட்டு (திருத்தச்) சட்டம் — Lv
11. 1992 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க ஏற்றுமதிக் கமத் தொழில் ஊக்குவிப்புச் சட்டம் — Lx
12. 1992 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க மா கொழும்பு பொருளாதார ஆணைக்குழு (திருத்தச்) சட்டம் — Lxvii
13. 1992 ஆம் ஆண்டின் 62 ஆம் இலக்க பணிக்கொடைக் கொடுப்பனவு (திருத்தச்) சட்டம் — Lxxi
14. 1992 ஆம் ஆண்டின் 63 ஆம் இலக்க உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டம் — Lxxiii
15. 1992 ஆம் ஆண்டின் 66 ஆம் இலக்க பாதுகாப்பு அறவீட்டு (திருத்தச்) சட்டம் — Cxii
16. 1992 ஆம் ஆண்டின் 67 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டம் — Cxiii

**(ஆ) - ஒழுங்கு விதிகள்:**

1. பணச் சட்டத்தினைத் திருத்துவதற்காகப் பொது மக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்கு விதி — Cxvii
2. 1992 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க அவசரகால (பணச் சட்ட) ஒழுங்குவிதி — Cxix

# 1992 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, இலங்கைத் தேசிய அபிவிருத்தி வங்கி (திருத்தச்) சட்டம்.

*[1992, மார்ச் மாதம் 06 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

## 1979 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, இலங்கைத் தேசிய அபிவிருத்தி வங்கிச் சட்டத்தை திருத்துவதற்கானதொரு சட்டம்

1. இச்சட்டம் 1992 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, இலங்கைத் தேசிய அபிவிருத்தி வங்கி (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

2. இதனகத்துப் பின்னர் ''முதன்மைச் சட்டவாக்கம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும் 1979 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க இலங்கைத் தேசிய அபிவிருத்தி வங்கிச் சட்டத்தின் 5 ஆம் பிரிவானது, இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் (அ) என்னும் பந்தியில் ''நடுத்தரக் காலக் கடனுக்கும், நீண்ட காலக் கடனுக்கும் ஏற்பாடு செய்வதன்மூலம்'' என்னும் சொற்களுக்குப் பதிலாகக் ''கடன் ஏற்பாடு செய்வதன் மூலம்'' என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப் படுகின்றது.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவானது இத்தால் பின் வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) அப்பிரிவின் (அ) என்னும் பந்தியில் ''எவையேனும் தொழில் முயற்சி களுக்குக் கடன்களும் முற்பணங்களும் வழங்குவதற்கான தத்துவம்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''எவையேனும் தொழில் முயற்சி களுக்குப் பிணைப் பொறுப்புடன்'' அல்லது பிணைப் பொறுப்பின்றி கடன்களும் முற்பணங்களும் வழங்குவதற்கான தத்துவம்'' என்னும் சொற்களை இடுவதன் மூலம்; அத்துடன்

(2) பந்தி (ஒ) வை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்து வதன் மூலம்—

''(ஓ) அவற்றைப் பொறுப்பேற்றலானது விரும்பத்தக்கதாகக் காணப் படும் ஏதேனும் நம்பிக்கைப் பொறுப்புக்களில் பொறுப்பேற்று நிறைவேற்றுவதற்கான தத்துவம்.''.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (இ) என்னும் பந்தியில் ''வங்கியினுல் வேலைக்கமர்த்தப்பட்டுள்ள ஆட்களுக்குச் சகாய நிதியமொன்றைத் தாபிப்பதற்கும்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''அதன் அலுவல்களதும் சேவையாளர்களதும் நன்மைக்காகச் சகாய நிதியமொன்றையும் ஓய்வூதிய நிதியமொன்றை அல்லது முறைமையொன்றையும் தாபிப்பதற்கும் ஈடுசெய்வதற்கும் வங்கியினுல் வேலைக்கமர்த்தப்பட்டுள்ள ஆட்களும்'' என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவானது இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவானது இடப்படுகின்றது:—

''பணிப்பாளர்கள் சபை

8. (1) வங்கி, விடயத்திற்கேற்றாற்போன்று 8அ அல்லது 8ஆ என்னும் பிரிவுகளின் கீழ் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட அல்லது தெரிவு செய்யப்பட்டவர்களான ஐந்திற்குக் குறையாததும் பத்து உறுப்பினர்களுக்கு மேற்படாததுமான பெயர் குறித்து நியமிக்கப்பட்டவர்களும் தெரிவு செய்யப்பட்டவர்களுமான இரு பேரையும் கொண்ட பணிப்பாளர் சபையொன்றையும் உடையதாகவிருத்தல் வேண்டும்.

(2) பொது முகாமையாளர் அத்தகைய பணிப்பாளர் சபையின் ஏதேனும் கூட்டத்தில் வாக்களிக்கும் உரிமையின்றி, பணிப்பாளர் சபையின் பதவி வழி வந்த உறுப்பினர் ஒருவராகவிருத்தல் வேண்டும்.''.

6. பின்வரும் பிரிவுகள் 8 ஆம் பிரிவை உடனடுத்து இத்தால் உட்புகுத்தப்படுகின்றதுடன், முதன்மைச் சட்டவாக்கத்தின் 8அ, 8ஆ அத்துடன் 8இ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதல் வேண்டும்:—

''பெயர் குறித்து நியமிக்கப்பட்ட பணிப்பாளர்கள்.

8அ. (1) அமைச்சர் பணிப்பாளர் சபையின் உறுப்பினர்களாகப் பின்வருவோரைப் பெயர் குறித்து நியமித்தல் வேண்டும்:—

(அ) இலங்கை அரசாங்க அல்லது மத்திய வங்கி அல்லது இரண்டு திறத்தவர்களும் சேர்ந்து வங்கியின் வழங்கப்பட்ட பங்கு மூலதனத்தில் இருபத்தைந்து சதவிகிதத்தை அல்லது அதிலும் அதிகமாக வைத்திருக்கின்றவிடத்து, மூன்று ஆட்கள் இவர்களுள் ஒருவர் மத்திய வங்கியின் சிரேட்ட அலுவலர் ஒருவராகவிருத்தல் வேண்டும்; அல்லது

(ஆ) இலங்கை அரசாங்கம் அல்லது மத்திய வங்கி அல்லது இரண்டு திறத்தவர்களும் சேர்ந்து வங்கியில் வழங்கப்பட்ட பங்கு மூலதனத்தின் இருபத்தைந்து வீதத்திற்கும் குறைவாக வைத்திருக்கின்றவிடத்து, இரண்டு ஆட்கள், இவர்களுள் ஒருவர் மத்திய வங்கியின் சிரேட்ட அலுவலர் ஒருவராகவிருத்தல் வேண்டும்.

இவ்வுட்பிரிவின் கீழ்ப் பணிப்பாளர் ஒருவராகப் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட ஆள் ஒருவர் இதனகத்துப் பின்னர் ''பெயர் குறித்து நியமிக்கப்பட்ட பணிப்பாளர் ஒருவரென'' குறிப்பீடு செய்யப்படுவார்.

(2) பெயர் குறித்து நியமிக்கப்பட்ட பணிப்பாளர் ஒருவர் நாலாண்டுகள் கொண்ட காலப் பகுதியொன்றிற்குப் பதவி வகித்தல் வேண்டும்.

ஆயின் எவ்வாறாயினும், இலங்கை அரசாங்கத்தினுல் அல்லது மத்திய வங்கியினுல் அல்லது இரண்டு திறத்தவர்களினுலும் சேர்த்து வைத்திருக்கப்படும் பங்குகளின் நூற்றுவீதம் (1) ஆம்

உட்பிரிவின் கீழ் அத்தகைய பணிப்பாளர்களைப் பெயர் குறித்து நியமித்ததன் பின்னர் தெரிவு செய்யப்பட்ட பணிப்பாளர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பொன்றைத் தேவைப்படுத்துகின்றவாறான அத்தகைய அளவுக்குக் குறைக்கப்படுகின்றவிடத்து, அமைச்சரானவர், விடயத்திற்கேற்றாற்போல் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட பணிப்பாளர்களுள் ஒருவரை அல்லது இருவரைப் பதவியிலிருந்து விலகுமாறு தேவைப்படுத்துதல் வேண்டும். அத்துடன் விடயத்திற்கேற்றாற்போல அத்தகைய பணிப்பாளர் அல்லது பணிப்பாளர்கள் பதவியிலிருந்து விலகத் தவறுகின்றவிடத்து அத்தகைய பணிப்பாளரை அல்லது பணிப்பாளர்களைப் பதவியிலிருந்து அகற்றலும் வேண்டும்.

(3) அமைச்சர் அதற்கான காரணம் எதுவும் குறித்தொதுக்காமல் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட பணிப்பாளர் ஒருவரைப் பதவியிலிருந்து அகற்றலாம்.

(4) பெயர் குறித்து நியமிக்கப்பட்ட பணிப்பாளர் ஒருவர் அதன் சார்பில் அமைச்சருக்கு, முகவரியிடப்பட்ட கடிதமூலம் தமது பதவியிலிருந்து விலகலாம்.

(5) பெயர் குறித்து நியமிக்கப்பட்ட பணிப்பாளர் ஒருவர் சுகவீனம் காரணமாக அல்லது வேறு இயலாமை காரணமாக அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாகத் தமது பதவிக்குரிய கடமைகளைத் தற்காலிகமாகப் புரிய முடியாதவராக இருக்கின்றவிடத்து அமைச்சர் அவருக்கு மாற்று ஆளாகச் சபைக் கூட்டங்களில் செயலாற்றுவதற்கென வேறோர் ஆளைப் பெயர் குறித்து நியமிக்கலாமென்பதுடன் அவ்வாறு நியமிக்கப்பட்ட ஆள் அத்தகைய கூட்டங்களில் வாக்களிப்பதற்கு உரிமையுடையவராதல் வேண்டும்.

(6) பெயர் குறித்து நியமிக்கப்பட்ட பணிப்பாளர் ஒருவர் இரண்டாம் உட்பிரிவுக்கான காப்பு வாசகத்தின் கீழ்ப் பதவி விலகுதல் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுவதன் மூலம் அல்லது வேறு வகையாக இறப்பதன் மூலம் பதவி விலகுவதன் மூலம் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுவதன் மூலம் பதவியை வறிதாக்கும் பட்சத்தில் அமைச்சர் அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கென வேறோர் ஆளைப் பெயர் குறித்து நியமித்தல் வேண்டும். பெயர் குறித்து நியமிக்கப்பட்டவாறான ஆள், அவர் எவ்வுறுப்பினரை அடுத்துறுகின்றாரோ அவ்வுறுப்பினரின் பதவிக் காலத்தில் முடிவுறாதெஞ்சியுள்ள காலப் பகுதிக்குப் பதவி வகித்தல் வேண்டும்.

தெரிவு செய்யப்பட்ட பணிப்பாளர்கள்

8ஆ. (1) சபையின் தெரிவு செய்யப்பட்ட பணிப்பாளர்கள் வங்கியின் பங்குதாரர்களின் ஒவ்வொரு வருடாந்தப் பொதுக் கூட்டத்திலும், இலங்கை அரசாங்கமும் மத்திய வங்கியும் தவிர்ந்த வேறு ஆட்களினால் சொந்தமாக வைத்திருக்கப்படும் வங்கியின் மொத்த வழங்கப்பட்ட பங்கு மூலதனத்தின் ஒவ்வொரு

அத்தகைய பத்து வீதத்திற்கும் ஓர் உறுப்பினர் என்ற அடிப் படையில், (இலங்கை அரசாங்கமும் மத்திய வங்கியும் தவிர்ந்த) வங்கியின் பங்குதாரர்களினுல் தெரிவு செய்யப்படுதல் வேண்டும்; ஆயின், எவ்வாறாயினும் அவ்வாறு தெரிவு செய்யப்பட்ட பணிப் பாளர்களின் எண்ணிக்கை 8 ஆம் பிரிவின் கீழ்க் குறித்துரைக்கப் பட்ட பணிப்பாளர் சபையின் பணிப்பாளர்களின் ஆகக் கூடிய எண்ணிக்கைக்கும் 8அ என்னும் பிரிவின் கீழ் அமைச்சரினால் பெயர் குறித்து நியமிக்கப்படக் கூடிய பணிப்பாளர்களின் எண் ணிக்கைக்கும் இடையிலுள்ள வித்தியாசத்தை விஞ்சுதலாகாது.

உதாரணம்

(அரசாங்கமும் மத்திய வங்கியும் தவிர்ந்த) பங்குதாரர்களினதும் சொந்தமாக வைத்திருக்கப்படும் வங்கியின் மொத்த வழங்கப் பட்ட பங்கு மூலதனத்தின் நூற்றுவீதம் நாற்பது வீதமாக இருந்தால் அத்தகைய பங்குதாரர்கள் நான்கு உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கு உரித்துடையவர்களாதல் வேண்டும்.

(2) (இலங்கை அரசாங்கமும் மத்திய வங்கியும் தவிர்ந்த) வங்கியின் பங்குதாரர்கள் அத்தகைய பங்குதாரர்களுள் ஐவரின் அல்லது அதற்கு மேற்பட்டவர்களின் வேண்டுகோளின் பேரில் தவிசாளரினால் கூட்டப்பட்ட அத்தகைய பங்குதாரர்களின் கூட் டமொன்றில் தெரிவு செய்யப்பட்ட பணிப்பாளர் ஒருவரைப் பதவியிலிருந்து அகற்றி அவரின் இடத்தில் வேறோர் பணிப்பாள ரைத் தெரிவு செய்யலாம்.

(3) தெரிவு செய்யப்பட்ட பணிப்பாளர் ஒருவர் அதன் சார்பில் தவிசாளருக்கு முகவரியிடப்பட்ட கடிதம் மூலம் அவரது பதவியி லிருந்து விலகலாம்.

(4) தெரிவு செய்யப்பட்ட பணிப்பாளர் ஒருவர் சுகவீனம் காரணமாக அல்லது வேறு இயலாமை காரணமாக அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாகத் தமது பதவிக்குரிய கடமை களைப் புரிவதற்குத் தற்காலிகமாக இயலாதவராக இருக்கின்ற விடத்து அத்தகைய பணிப்பாளர், பணிப்பாளர் சபையின் ஒருப் பாட்டுடன் சபைக் கூட்டங்களில் அவரது மாற்றாளாகச் செய லாற்றுவதற்கென வேறோர் ஆள் நியமிக்கலாம் என்பதுடன் அவ்வாறு நியமிக்கப்பட்ட ஆள் அத்தகைய கூட்டங்களில் வாக் களிப்பதற்கு உரிமையுடையவராதலும் வேண்டும்.

(5) இறப்பதன் மூலம் அல்லது பதவி துறப்பதன் மூலம் தெரிவு செய்யப்பட்ட பணிப்பாளர் ஒருவர் தமது பதவியை வறிதாக்குகின்றபட்சத்தில் அல்லது (இலங்கை அரசாங்கமும் மத் திய வங்கியும் தவிர்ந்த) பங்குதாரர்களின் பங்குக் கையிருப்புகளி லான அதிகரிப்பின் விளைவாகத் தெரிவு செய்யப்பட்ட பணிப் பாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும் பட்சத்தில் பணிப் பாளர்கள் சபையானது அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற் கென வேறோர் ஆளை நியமிக்கலாமென்பதுடன் அவ்வாறு

நியமிக்கப்பட்ட ஆள் அத்தகைய வெற்றிடம் சம்பவித்ததன் பின்னர் நடைபெறவுள்ள வங்கியின் முதலாவது ஆண்டுப் பொதுக் கூட்டம் வரை பதவி வகித்தல் வேண்டும் என்பதுடன் அத்தகைய கூட்டத்தில் பணிப்பாளர் ஒருவராகத் தெரிவு செய்யப்படுவதற்கு அவர் தகுதியுடையவராதலும் வேண்டும்.

(6) வங்கியின் பங்குதாரர்களின் ஆண்டுப் பொதுக் கூட்டம் ஒவ்வொன்றினதும் தெரிவு செய்யப்பட்ட பணிப்பாளர்களில் மூன்றிலொரு பகுதியினர் அல்லது தெரிவு செய்யப்பட்ட பணிப்பாளர்களின் எண்ணிக்கை மூன்றாகவோ மூன்றின் பெருக்கமொன்றாகவோ இராதவிடத்து, அவ்வெண்ணிக்கையின் மூன்றில் ஒன்றிற்கு ஆகக்கிட்டிய எண்ணிக்கை கொண்ட பணிப்பாளர்கள் பதவியிலிருந்து இளைப்பாறுதல் வேண்டும் என்பதுடன் (இலங்கை அரசாங்கம் அல்லது மத்திய வங்கி தவிர்ந்த) பங்குதாரர்கள் அத்தகைய வெற்றிடத்தை அல்லது வெற்றிடங்களை நிரப்பாது விடுவதற்கு வெளிப்படையாகத் தீர்மானித்திருந்தால் ஒழிய, அல்லது விடயத்திற்கேற்றாற்போல் அத்தகைய இளைப்பாறுகின்ற தெரிவு செய்யப்பட்ட பணிப்பாளரை அல்லது பணிப்பாளர்களை மீளத் தெரிவு செய்வதற்கான தீர்மானமொன்று அத்தகைய கூட்டத்தில் அத்தகைய பங்குதாரர்களுக்கு விடப்பட்டு அது தோற்கடிக்கப் பட்டாலொழிய அல்லது அத்தகைய கூட்டத் தேதிக்கு நேர் முந்திய நாளன்று (இலங்கை அரசாங்கம் அல்லது மத்திய வங்கி தவிர்ந்த) பங்குதாரர்களின் பங்குக் கையிருப்பானது அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதனை நியாயப்படுத்தாதிருந்தாலொழிய விடயத்திற்கேற்றாற்போல அத்தகைய வெற்றிடத்தை அல்லது வெற்றிடங்களை நிரப்புவதற்குப் புதிய உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட வேண்டும்.

(7) ஆறாம் உட்பிரிவின் கீழ் இளைப்பாறுகின்ற தெரிவு செய்யப்பட்ட பணிப்பாளர் அல்லது பணிப்பாளர்கள் அவ்வுட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட வருடாந்தப் பொதுக் கூட்டத் தேதியன்றுள்ளவாறு பதவியில் மிக நீண்ட காலத்திற்குச் சேவையாற்றியுள்ள பணிப்பாளர் அல்லது பணிப்பாளர்களாதல் வேண்டும். ஆனால் அத்தேதியன்றுள்ளவாறாகச் சம அளவு காலப் பகுதிக்குச் சேவையாற்றியுள்ளவர்களான தெரிவு செய்யப்பட்ட பணிப்பாளர்களிடையே இளைப்பாற வேண்டியவரான பணிப்பாளர் அக்கூட்டத்திற்குத் தலைமை தாங்குபவரால் இழுக்கப் படும் திருவுளச் சீட்டு மூலம் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(8) இளைப்பாறுகின்ற தெரிவு செய்யப்பட்ட பணிப்பாளர் மீளத் தெரிவு செய்யப்படுவதற்குத் தகுதியுடையவராதல் வேண்டும்.

முதலாவது பணிப்பாளர் சபை

8இ. (1) இப்பிரிவு நடைமுறைக்கு வரும் தேதிக்குப் பின்னர் நடாத்தப்படவுள்ள வங்கியின் பங்குதாரர்களின் முதலாவது ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் (இப்பிரிவில் ''முதலாவது சபை'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) பணிப்பாளர் சபை ஒன்று 8அ

எனும் பிரிவின் (1) ஆம் உட்பிரிவிலும் 8ஆ எனும் பிரிவின் (1) ஆம் உட்பிரிவிலும் குறித்துரைக்கப்பட்ட முறையில் அமைக் கப்படுதல் வேண்டும்.

(2) முதலாவது சபையின் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர் கள் (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட வருடாந்த பொதுக் கூட்டத்தை உடனடுத்துவரும் வங்கியின் பங்குதாரர் களின் அடுத்த வருடாந்தப் பொதுக் கூட்டத் தேதி வரை பதவி வகித்தல் வேண்டும்.

(3) இறப்பதன் மூலம் பதவி விலகுவதன் மூலம் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுவதன் மூலம் பதவியை வறிதாக்குதல் அத்துடன் சபை உறுப்பினர் ஒருவரின் தற்காலிக இல்லாமை என்பன தொடர்பில் 8அ அத்துடன் 8ஆ எனும் பிரிவுகளின் ஏற்பாடுகள் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய முதலா வது சபையின் உறுப்பினர்களுக்கும் உறுப்பினர் தொடர்பிலும் ஏற்புடையனவாதல் வேண்டும்.''.

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவிலுள்ள ''அமைச்சரினல் தீர்மானிக்கப்படக் கூடியவாறான'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''காலத் துக்குக் காலம் வங்கியின் பங்குதாரர்களினது ஆண்டுப் பொதுக் கூட்டம் ஒன்றில் அத்தகைய பங்குதாரர்களினல் தீர்மாணிக்கப்படக் கூடியவாறான'' என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

8. முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவானது இத்தால் பின்வரு மாறு திருத்தப்படுகின்றது:—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலம்:—

''(1) பணிப்பாளர் சபையானது தமக்குள்ளிருந்து தவிசாளர் ஒரு வரைத் தெரிவு செய்தல் வேண்டும்.'';

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் ''நியமனத் தேதியன்று'' எனும் சொற்களுக்குப் பதிலாக, ''தெரிவு தேதியன்று'' எனும் சொற்களை இடுவதன் மூலம்;

(3) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில், ''அப்பதவியை வகிப்பதற்கென வேறு ஆள் ஒருவர் நியமிக்கப்படுதல் வேண்டும்'' எனும் சொற்களுக்குப் பதிலாக ''அப்பதவியை வகிப்பதற்கென வேறு ஆள் ஒருவர் தெரிவு செய்யப்படுதல் வேண்டும்'' எனும் சொற்களை இடுவதன் மூலம்;

(4) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவில், ''மீள நியமிக்கப்படுவதற்குத் தகுதியுடையவராதல் வேண்டும்'' எனும் சொற்களுக்குப் பதிலாக, ''மீளத் தெரிவு செய்யப்படுவதற்குத் தகுதியுடையவராதல் வேண் டும்'' எனும் சொற்களை இடுவதன் மூலம்; அத்துடன்

(5) அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவை நீக்கிவிடுவதன் மூலம்.

9. முதன்மைச் சட்டவாக்கத்தின் 16 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் ''பொது முகாமையாளரதும் அல்லது பதிற் பொது முகாமையாளரதும் இரு பணிப்பாளர்களதும் முன்னிலையிலன்றி சாதனம் எதிலும் பொறிக்கப்படலாகாது. அவர்கள் அனைவரும்'' எனும் சொற்களுக்குப் பதிலாக, ''பொது முகாமையாளரதும் அல்லது பதிற் பொது முகாமையாளரதும் ஒரு பணிப்பாளரதும் முன்னிலையிலன்றிச் சாதனம் எதிலும் பொறிக்கப்படலாகாது. அவர்கள் இருவரும்'' எனும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

10. முதன்மைச் சட்டவாக்கத்தின் 21 ஆம் பிரிவானது, இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவானது இடப்படுகின்றது:—

"வங்கியின் மூலதனம்

21. (1) வங்கியின் அதிகாரமளிக்கப்பட்ட மூலதனமானது இருநூறு கோடி ரூபாவாதல் வேண்டும். இது ஒவ்வொன்றும் பத்து ரூபாப் பெறுமதி கொண்ட இருபது கோடிப் பங்குகளாகப் பிரிக்கப்படல் வேண்டும்.

(2) வங்கியானது, 22 ஆம் பிரிவின் கீழ்க் குறித்தொதுக்கப்படாதவாறான (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள அத்தகைய பங்குகளைப் பணிப்பாளர் சபையினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய நேரத்தில் அல்லது நேரங்களிலும் அத்தகைய தொகையில் அல்லது தொகைகளிலும் அத்தகைய முறையிலும் ஒப்பப் பணத் தொகைகளுக்கெனப் பொது மக்களுக்குக் கொடைமுனையலாமென்பதுடன் அத்தகைய பங்குகளுக்குக் கொடுப்பனவு செய்யப்பட்டதன்மேல், 22 ஆம் பிரிவின் (2ஆ) எனும், உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, அவ்வவ் கொள்வனவாளர்களுக்கு அத்தகைய பங்குகளைக் குறித்தொதுக்குதல் வேண்டும்.''.

11. முதன்மைச் சட்டவாக்கத்தின் 22 ஆம் பிரிவானது. இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலம்:—

''(2)ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள பங்குதாரர்கள்—

(அ) வங்கியிலுள்ள அவர்களின் எல்லா அல்லது ஏதேனும் பங்குகளை விற்பதற்கும்;

(ஆ) அமைச்சரினால் அங்கீகரிக்கப்படக் கூடியவாறான அத்தகைய நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைய வங்கியினால் வழங்கப்பட்ட முறிகளாகவும், தொகுதிக் கடன் முறிகளாகவும் அல்லது முன்னுரிமைப் பங்குகளாகவும்

வங்கியிலுள்ள அவர்களின் எல்லா அல்லது ஏதேனும் பங்குகளை அமைச்சரின் அங்கீகாரத்துடன் மாற்றுவதற்கும்,

தத்துவமுடையவர்களாதல் வேண்டும்''.

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவுகளை உட்புகுத்துவதன் மூலம்:—

''(2அ) பணிப்பாளர் சபையானது அமைச்சரின் ஒருப்பாட்டுடன் (1) ஆம் உட்பிரிவின் (ஆ), (இ) அத்துடன் (ஈ) எனும் பந்திகளில் குறிப்பீடு செய்யப்பட்ட எவரேனும் பங்குதாரர்களினால் வழங்கப்பட்ட ஏதேனும் வாக்குறுதிப் பத்திரங்களை இல்லா தாக்கலாமென்பதுடன் அத்தகைய இல்லாதாக்குகையின்மேல் வங்கியின் வழங்கப்பட்ட பங்கு மூலதனமானது இல்லாதாக்கப்பட்ட வாக்குறுதிப் பத்திரங்களின் பெறுமதியின் அளவுக்குக் குறைக்கப்பட்டதாகக் கருதப்படுதலும் வேண்டும்.

(2ஆ) வங்கியானது—

(அ) ஏதேனும் குறித்தொதுக்குகை அல்லது பதிவாவது, வங்கியின் மொத்த வழங்கப்பட்ட பங்கு மூலதனத்தின் பதினைந்து சதவீதத்திற்கும் அதிகமானதை அத்தகைய கம்பெனி கூட்டிணைக்கப்பட்ட குழு அல்லது தனியாள் சொந்தமாக வைத்திருப்பதற்கு இட்டுச் செல்லுமானால் ஏதேனும் கம்பெனியின் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் அல்லது தனியாளின் பெயரில்;

(ஆ) அத்தகைய குறித்தொதுக்குகை அல்லது பதிவானது வங்கியின் மொத்த வழங்கப்பட்ட பங்கு மூலதனத்தின் பதினைந்து சத விகிதத்திற்கும் அதிகமானதனை அத்தகைய கம்பெனியும் (i) ஆம் (ii) ஆம் (iii) ஆம் அத்துடன் (iv) ஆம் உட்பந்திகளில் குறிப்பீடு செய்யப்பட்ட ஓராள் அல்லது ஒருவருக்கு மேற்பட்டவர் கூட்டு மொத்தமாகச் சொந்தமாக வைத்திருப்பதற்கு இட்டுச் செல்லுமானால் ஒரு கம்பெனியின் பெயரிலும் பின்வரும் ஏதேனும் அல்லது பலவற்றின் பெயரிலும்—

(i) அதன் துணைநிலைக் கம்பெனிகளுள் ஏதேனும் ஒன்று;

(ii) அதன் கொளிக் கம்பெனி;

(iii) அதன் கொளிக் கம்பெனியில் துணைநிலைக் கம்பெனி ஒன்று; அல்லது

(iv) அத்தகைய கம்பெனி அல்லது அதன் துணைநிலைக் கம்பெனி அல்லது அதன் கொளிக் கம்பெனி அல்

லது அதன் கொளிக் கம்பெனியின் துணைநிலைக் கம்பெனி கணிசமானளவு அக்கறை கொண்டுள்ள ஒரு கம்பெனி.

(இ) அத்தகைய குறித்தொதுக்குகை அல்லது பதிவு செய்தலானது வங்கியின் மொத்த வழங்கப்பட்ட மூலதனத்தின் பதினைந்து சதவீதத்திற்கு அதிகமானதனை அத்தகைய தனியாளும் (i) ஆம் (ii) ஆம் (iii) ஆம் (iv) ஆம் (v) ஆம் (vi) ஆம் (vii) ஆம் உட்பிரிவுகளில் குறிப்பீடு செய்யப்பட்ட ஒராள் அல்லது ஒருவருக்கு மேற்பட்டோர் கூட்டு மொத்தத்தில் சொந்தமாக வைத்திருப்பதற்கு இட்டுச் செல்லுமானால் தனியாளின் பெயரிலும் பின்வரும் எவரேனும் ஒருவரின் அல்லது ஒன்றுக்கு மேற்பட்டோரின் பெயரிலும்—

(i) அவரது ஆகக் கிட்டிய உறவினர்கள்;

(ii) அவர் கணிசமானளவு அக்கறை கொண்டுள்ள அல்லது அவரது ஆகக் கிட்டிய உறவினர் கணிசமானளவு அக்கறை கொண்டுள்ள ஒரு கம்பெனி;

(iii) உட்பந்தி (i) இல் குறிப்பீடு செய்யப்பட்ட கம்பெனி ஒன்றின் துணை நிலைக் கம்பெனி;

(iv) உட்பந்தி (ii) இல் குறிப்பீடு செய்யப்பட்ட கம்பெனி ஒன்றின் கொளிக் கம்பெனி;

(v) உட்பந்தி (ii) இல் குறிப்பீடு செய்யப்பட்ட கம்பெனி ஒன்றின் கொளிக் கம்பெனியின் துணை நிலைக் கம்பெனி;

(vi) உட்பந்தி (ii) இல் குறிப்பீடு செய்யப்பட்ட கம்பெனி ஒன்றில் அல்லது அதன் துணைநிலைக் கம்பெனியில் அல்லது அதன் கொளிக் கம்பெனியில் அல்லது அதன் பங்கு வைத்திருக்கும் கம்பெனியின் துணைநிலைக் கம்பெனியின் கணிசமான அக்கறை கொண்டுள்ள கம்பெனி;

(vii) அத்தகைய தனியாள் அல்லது அவரது ஆகக் கிட்டிய உறவினர் கணிசமானளவு அக்கறை கொண்டுள்ள கம்பெனி ஒன்று தவிர்ந்த கூட்டிணைக்கப்பட்ட குழு ஒன்று.

பிரிவு 21 இன் (2) ஆம் உட்பிரிவின் கீழ் ஏதேனும் பங்குகளைக் குறித்தொதுக்குதலோ ஏதேனும் பங்குகளைப் பதிவு செய்தலோ ஆகாது;

ஒரு கம்பெனி அல்லது தனியாள் அத்தகைய கம்பெனி யின் அல்லது விடயத்திற்கேற்றாற்போன்று கூட்டிணைக் கப்பட்ட குழுவின் பங்குகளில் ஐம்பத்தொரு வீதத்திற்கு அதிகமானதைச் சொந்தமாக வைத்திருக்கின்றவிடத்து, இவ்வுட்பிரிவின் கருத்திற்குள்ளாக அக்கம்பெனி அல்லது அத்தனியாள் ஒரு கம்பெனியில் அல்லது ஒரு கம்பெனி தவிர்ந்த கூட்டிணைக்கப்பட்ட குழுவின் கணிசமானளவு அக்கறை வைத்திருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.''.

*(3)* அப்பிரிவின் *(4)* ஆம் உட்பிரிவில் ''இப்பிரிவின் அல்லது 57 ஆம் பிரிவின் ஏற்பாடுகளைப் பின்பற்றியல்லாது செய்யப்படல் அல்லது ஏற்றுக் கொள்ளப்படல் ஆகாது'' என்னும் சொற்களுக்கும் எண்களுக் கும் பதிலாக ''*21* ஆம் பிரிவின் அல்லது இப்பிரிவின் ஏற்பாடுகளைப் பின்பற்றியல்லாது செய்யப்படல் அல்லது ஏற்றுக் கொள்ளப்படல் ஆகாது; அத்துடன்'' எனும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம்;

*(4)* அப்பிரிவின் *(4)* ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவைச் சேர்ப்பதன் மூலம்:—

''*(5)* உட்பிரிவு *(2ஆ)* இன் நோக்கத்திற்காக—

''ஆள் ஒருவர் தொடர்பில் ஆகக் கிட்டிய உறவினர்'' என்பது அவ்வாளின் பெற்றார், வாழ்க்கைத்துணை அல்லது பிள்ளை அல்லது அவ் வாளின் பிள்ளையின் வாழ்க்கைத்துணை என்று பொருள்படும்;

''துணைநிலைக் கம்பெனி'' என்பது 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கிச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் *(1)* ஆம் உட்பிரிவினால் குறித்தொதுக்கப்பட்ட கருத்தைக் கொண்டுள்ளது''.

*12.* முதன்மைச் சட்டவாக்கத்தின் *26* ஆம் பிரிவானது இத்தால் பின்வரு மாறு திருத்தப்படுகிறது:—

*(1)* அப்பிரிவின் இறுதியில் பின்வரும் புதிய உட்பிரிவைச் சேர்ப்பதன் மூலம்—

''*(3)* ஓராம் *(2)* ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எப்படியிருப்பினும் வங்கியானது காலத்திற்குக் காலம், ஏதேனும் உரிமம் பெற்ற வர்த்தக வங்கியிடமிருந்து அவர்களுக்கிடையில் பரஸ்பரம்உடன் பட்டுக் கொள்ளக்கூடிய அத்தகைய நியதி நிபந்தனைகளின்மீது பணத்தொகைகளைக் கடன் பெறலாம்.'';

*(2)* இப்பிரிவை உடனடுத்துப் பின்வரும் பந்தியைச் சேர்ப்பதன் மூலம்:—

''இப்பிரிவின் நோக்கத்திற்காக'' ''உரிமம் பெற்ற வர்த்தக வங்கி'' என்பது 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கிச் சட்டத்தின் கருத்திற்குள் உரிமம் பெற்ற ஒரு வர்த்தக வங்கி என்று பொருள் படும்.''.

(3) அப்பிரிவிற்கான ஓரக் குறிப்புக்குப் பதிலாகப் பின்வரும் ஓரக் குறிப்பை இடுவதன் மூலம்:—

''மத்திய வங்கியிடமிருந்தும் உரிமம் பெற்ற வர்த்தக வங்கியிடமிருந்தும் தற்காலிகக் கடன் பெறுதல்''.

13. முதன்மைச் சட்டவாக்கத்தின் 36 ஆம் பிரிவானது இத்தால் நீக்கஞ் செய்யப்படுகின்றது.

14. முதன்மைச் சட்டவாக்கத்தின் ivஆம் பாகம் இத்தால் நீக்கஞ் செய்யப்படுகின்றது.

15. பின்வரும் புதிய பிரிவுகள் 66 ஆம் பிரிவை உடனடுத்து இத்தால் உட்புகுத்தப்படுகின்றதுடன் அவை முதன்மைச் சட்டவாக்கத்தின் 66அ அத்துடன் 66ஆ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும்:—

''வங்கியானது சான்றுக் கட்டளைச் சட்டத்தின் கருத்திற்குள் வங்கியொன்றாகக் கருதப்படல்

66அ. வங்கியானது கோரிக்கை வைப்புக்களை ஏற்றுக்கொள்வதில்லை என்னும் நிகழ்வு எப்படியிருப்பினும் சான்றுக் கட்டளைச் சட்டத்தின் vi ஆம் அத்தியாயத்தின் கருத்திற்குள் வங்கியொன்றாகக் கருதப்படல் வேண்டும் என்பதுடன் அவ்வத்தியாயத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்க வங்கிக்கும் வங்கி தொடர்பிலும் ஏற்புடையனவாதலும் வேண்டும்.

ஆண்டுப் பொதுக் கூட்டம்

66ஆ. வங்கியின் ஒவ்வொரு நிதியாண்டும் முடிவடைந்த பின்னர் ஒன்பது மாதங்களுக்குள், வங்கியின் பங்குதாரர்களினது ஆண்டுப் பொதுக் கூட்டம் நடைபெறல் வேண்டும். அக்கூட்டத்திலேயே பணிப்பாளர்களின் சபையினால் சமர்ப்பிக்கப்படும் ஆண்டறிக்கையும் கணக்குகளும் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படுதல் வேண்டும் என்பதுடன் பங்கிலாபத்தின் வெளிப்படுத்துகை பற்றிய முடிவுகளும் எடுக்கப்படுதல் வேண்டும். ஆண்டுப் பொதுக் கூட்டத்தைக் கூட்டும் முறையும் அத்தகைய கூட்டத்தில் அலுவல்களைக் கையாளுவதற்கான நடவடிக்கை முறையும் விதித்துரைக்கப்பட்டவாறாகவிருத்தல் வேண்டும். ஒவ்வொரு ஆண்டுப் பொதுக்கூட்டத்திலும் அத்தகைய கூட்டத் தேதியின் நேர் முந்திய நாளன்று வங்கியிலுள்ள பங்குக் கையிருப்புகளுக்கிணங்கப் பணிப்பாளர்கள் சபைக்குத் தெரிவு செய்யப்பட்ட பணிப்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்படல் வேண்டும்.''.

16. முதன்மைச் சட்டவாக்கத்தின் 79 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்படுகின்றது:—

17. முதன்மைச் சட்டவாக்கத்தின் அட்டவணை இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) அவ்வட்டவணையின் படிவம் 'அ' வில் ''வங்கிப் பொது முகாமையாளராகிய'' என்பதில் தொடங்கி ''கீழ் அளிக்கப்பட்டது'' என்பது வரையுள்ள எல்லாச் சொற்களையும் விட்டு விடுவதன் மூலம்; அத்துடன்

(2) அவ்வட்டவணையின் படிவம் ‘ஆ’ வில் ‘‘வங்கிப் பொது முகாமையாளராகிய’’ என்பதில் தொடங்கி ‘‘கீழ் அளிக்கப்பட்டது’’ என்பது வரையுள்ள எல்லாச் சொற்களையும் விட்டு விடுவதன் மூலம்.

18. இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர் முந்திய நாளன்று பதவி வகிக்கும் பணிப்பாளர் சபையின் உறுப்பினர்கள் முதன்மைச் சட்டவாக்கத்தில் உள்ள எது எப்படியிருப்பினும் இச்சட்டத்தின் தொடக்கத் தேதிக்குப் பின்னர் நடைபெறவுள்ள வங்கியின் பங்குதாரர்களின் முதலாவது ஆண்டுப் பொதுக் கூட்டத் தேதியிலிருந்து பதவி வகிக்காதொழிதல் வேண்டும்.

19. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

# 1992 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டம்

*[1992, மார்ச் மாதம் 06 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

**1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.**

1. இச்சட்டம், 1992 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

2. (இதனகத்துப் பின்னர் ''முதன்மைச் சட்டவாக்கம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்கக் கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்துக்கான விரிவுப் பெயர் ''கூட்டுறவுச் சங்கங்களின் அமைப்பு கட்டுப் பாடு'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''கூட்டுறவின் அமைப்பும் நிருவாக மும்'' என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:—

''பதிவு செய்யப்படக் கூடிய சங்கங்கள்

3. இதனகத்துப் பின்னர் அடங்கியுள்ள ஏற்பாடுகளுக் கமைய—

(அ) கூட்டுறவு நெறிகளுக்கிணங்க, தனது உறுப்பினர்களின் பொருளாதார, சமூக, நல்விசார், கலாச்சார நல்வாழ் வுக்கு உதவுகின்ற சிறப்பான சேவைகளை அளிப்பதனைத் தனது குறிக்கோளாகக் கொண்டுள்ள சங்கமொன்று;

(ஆ) பந்தி (அ) என்பதில் குறிப்பீடு செய்யப்பட்ட சங்கங் களின் செயற்பாட்டினைத் துரிதப்படுத்தும் குறிக்கோளு டன் தாபிக்கப்பட்ட பதிவு செய்யப்பட்ட சங்கங்களைத் தனது உறுப்பினர்களாகக் கொண்டிருக்கின்ற சங்க மொன்று,

வரையறுக்கப்பட்ட பொறுப்புடனோ அல்லது அவ்வாறின் றியோ, சட்டத்தின் கீழ்ப் பதிவு செய்யப்படலாம்;

ஆயின், பதிவு செய்யப்பட்ட சங்கமொன்று எந்தச் சங்கத்தில் உறுப்பினராக உள்ளதோ அந்தச் சங்கத்தின் பொறுப்பு வரை யறுக்கப்பட்டதாக இருத்தல் வேண்டும்.''.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) அதன் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும்:—

"(1) இச்சட்டத்தின் கீழ்ச் சங்கம் எதுவும் பின்வரும் நிலைகளில் பதிவு செய்யப்படலாகாது:—

(அ) அச்சங்கம் உறுப்பினர்களை மட்டுமே கொண்டதாகவும் பதினெட்டு வயதுக்கு மேற்பட்டவர்களும் சங்கம் இயங்கும் இடப்பரப்பிற்குள் வதிபவர்களும் அல்லது தொழில் புரிபவர்களும் அல்லது அசைவற்ற ஆதனத்தைச் சொந்தமாகக் கொண்டிருப்பவர்களும், அத்துடன் சங்கத்தினால் அளிக்கப்படும் சேவைகளைப் பயன்படுத்தும் ஆற்றல் உள்ளவர்களுமான ஆட்களில் குறைந்தபட்சம் பத்துப் பேர்களையாவது கொண்டிராதுமிருப்பின்; அல்லது

(ஆ) அச்சங்கம் பதிவு செய்யப்பட்ட சங்கங்களை மட்டுமே கொண்டதாயும் குறைந்த பட்சம் மூன்று உறுப்பினர்களையாவது கொண்டிராமலும் இருப்பின்;

(இ) (i) அச்சங்கம் ஈடுபடுவதற்கு உத்தேசித்துள்ள நடவடிக்கைகள் பொருளாதார வகையில் சாத்தியமானவையென்னும்;

(ii) அச்சங்கங்களின் உத்தேச துணைவிதிகள், இச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் அல்லது அதன் கீழ் ஆக்கப்பட்ட எவையேனும் விதிகளுடன் ஒவ்வாதவையாக இல்லையென்னும்;

பயன்படவமைந்த அறிக்கையொன்றினை அல்லது விதப்புரையொன்றினை விதித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய ஆளிடமிருந்து அல்லது நிறுவனத்திடமிருந்து அது பெற்றிருக்காவிடின்;

(ஈ) உத்தேச துணைவிதிகள் அந்நோக்கத்துக்கென முறையாக அழைக்கப்பட்ட பொதுக் கூட்டமொன்றில் ஏற்றங்கீகரிக்கப்பட்டில்லாதிருப்பின்;

(உ) சங்கத்தின் குழு உறுப்பினர்களுள் ஆகக் குறைந்தது இரண்டு உறுப்பினர்களாவது பதினெட்டு வயதுக்கும் முப்பத்தைந்து வயதுக்கும் இடைப்பட்ட ஆட்களாயிருத்தல் வேண்டும் என்ற ஏற்பாட்டை அதன் உத்தேச துணை விதிகள் கொண்டிருக்கவில்லை;

(ஊ) பதிவு செய்தலுக்கான விண்ணப்பத்தில் ஒப்பமிடுகின்ற உறுப்பினர்கள் எல்லாரும் அவர்களது உறுப்பாண்மை தொடர்பிலான கொடுப்பனவுகளைப் பூர்த்தி செய்திராவிடின்; அல்லது

(எ) பதிவு செய்யும் நோக்கத்திற்கெனப் பதிவாளரினால், தேவைப்படுத்தப்படக் கூடியவாறான எல்லாத் தகவலை

யும் அத்தகைய சங்கம் கொடுத்துதவுவதற்குத் தவறி யிருப்பின்.''. அத்துடன்

(2) அதன் (2) ஆம் உட்பிரிவில் உள்ள ''எவரேனுமாளின் அல்லது வதிவிடம், தொழில் அல்லது ஆதனத் தகைமை பற்றிய ஏதேனும் பிரச்சினை எழுமிடத்து'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''முற் போந்த ஏற்பாடுகளில் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகள் திருப்திப் படுத்தப்பட்டுள்ளனவா அல்லவா என்பது பற்றி ஏதேனும் பிரச்சினை எழுமிடத்து'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) அதன் (1) ஆம் உட்பிரிவிலுள்ள ''பதிவாளருக்குச் செய்யப்படுதல் வேண்டும்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''விதித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய படிவத்தில் பதிவாளருக்குச் செய்யப்படுதல் வேண்டும்'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) அதன் (2) ஆம் உட்பிரிவிலுள்ள—

(i) பந்தி (அ) என்பதிலுள்ள ''4 (1) ஆம் பிரிவின் தேவைப்பாடு களுக்கு'' என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக ''4 (1) (அ) என்னும் பிரிவின் தேவைப்பாடுகளுக்கு'' என்னும் சொற் களையும் எண்களையும் இடுவதன் மூலமும்; அத்துடன்

(ii) பந்தி (ஆ) என்பதிலுள்ள ''அத்தகைய பதிவு செய்யப்பட்ட ஒவ்வொரு சங்கத்தின் சார்பிலும் முறையாக அதிகாரமளிக்கப் பட்ட ஆளொருவரினாலும்'' எனத் தொடங்கி அப்பந்தியின் முடிவு வரையிலும் உள்ள எல்லாச் சொற்களுக்கும் பதிலாக, ''அத்தகைய ஒவ்வொரு சங்கத்தினாலும் முறையாக அதிகார மளிக்கப்பட்ட ஆளொருவரினாலும் வேறு எல்லா உறுப்பினர் களாலும் ஒப்பமிடப்பட்டிருத்தல் வேண்டும்'' என்னும் சொற் களை இடுவதன் மூலமும்.

(3) அதன் (3) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும்:—

''(3) விண்ணப்பம் ஆனது, பின்வருவனவற்றுடன் இணைக்கப்படுதல் வேண்டும்:—

(அ) உத்தேச துணைவிதிகளின் இரண்டு பிரதிகள்;

(ஆ) சங்கம் ஈடுபடுவதற்கு உத்தேசித்துள்ள பொருளாதார நடவடிக்கைகள் பற்றிய நடைமுறைச் சாத்திய அறிக்கை;

(இ) சங்கத்தைப் பதிவு செய்வதற்கான தீர்மானம் எந்தப் பொதுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டதோ அந்தப் பொதுக் கூட்டம் பற்றிய நிகழ்ச்சி நிரலின் சான்றுப் படுத்தப்பட்ட பிரதிகளும் அக்கூட்டத்தில் ஏற்றங்கீகரிக் கப்பட்ட துணைவிதிகளும் அவற்றுடன் சேர்த்துக் கூட் டத்துக்குச் சமுகமளித்தவர்கள் பற்றிய விபரமும்;

(ஈ) விண்ணபபத்தில் ஒப்பமிடுகின்ற உறுப்பினர்களினால் உறுப்பாண்மைக் கட்டணக் கொடுப்பனவு செய்யப்பட் டதையும் அத்துடன் அத்தகைய பணம் சங்கத்தின் குழு வினது கட்டுக்காப்பில் உள்ளது பற்றிய நிகழ்வினையும் உறுதிப்படுத்தி அத்தகைய குழுவினால் அளிக்கப்படும் சான்றிதழ்.''.

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) அப்பிரிவை, அதன் (1) ஆம் உட்பிரிவு என்றவாறு மீளவிலக்கமிடு வதன் மூலமும்; அத்துடன்

(2) மீளவிலக்கமிடப்பட்ட (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவைச் சேர்ப்பதன் மூலமும்:—

''(2) பதிவாளர் ஆனவர், 6 ஆம் பிரிவின் கீழ்ச் சங்கமொன்றைப் பதிவு செய்வதன்மேல், பதிவு பற்றிய சான்றிதழொன்றை அத்தகைய சங்கத்துக்கு வழங்குதல் வேண்டும்.''.

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவு அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:—

''(2அ) பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றின் துணைவிதியொன்றுக் கான திருத்தம் எதுவும், அத்தகைய திருத்தம் 4 (1) (இ) (ii) என்னும் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட அறிக்கையொன் றுடன் இணைக்கப்பட்டிருந்தாலொழியப் பதிவு செய்யப்பட லாகாது.''.

8. முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) அதன் (1) ஆம் உட்பிரிவிலுள்ள ''பொதுக் கூட்டமொன்றில் சமுக மாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் அல்லது கையளிப்பு ஏற் றோர்களின்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''பொதுக் கூட்ட மொன்றில் சமுகமளித்து வாக்களிப்பதற்குத் தகவுடையவர்களான உறுப்பினர்களின் அல்லது கையளிப்பு ஏற்றோர்களின்'' என்னும் சொற் களை இடுவதன்மூலம்;

(2) அதன் (2) ஆம் உட்பிரிவிலுள்ள ''பொதுக் கூட்டமொன்றில் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் அல்லது கையளிப்பு ஏற்றோர்களின்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''பொதுக் கூட்டமொன்றில் சமுகமளித்து வாக்களிப்பதற்குத் தகவுடையவர்களான உறுப்பினர்களின் அல்லது கையளிப்பு ஏற்றோர்களின்'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(3) அதன் (3) ஆம் உட்பிரிவில்—

(அ) அவ்வுட்பிரிவை அதன் (அ) என்னும் பந்தி என்றவாறு மீள விலக்கமிடுவதன் மூலமும்; அத்துடன்

(ஆ) மீளவிலக்கமிடப்பட்டதான (அ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியைச் சேர்ப்பதன் மூலமும்:—

''(ஆ) ஏதேனும் சங்கம் அதன் சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வேறு ஏதேனும் பதிவு செய்யப்பட்ட சங்கத்துக்குக் கைமாற்றுவதற்கு அல்லது அச்சங்கம் தன்னையே இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட சங்கங்களாகப் பிரிப்பதற்கு அல்லது இன்னொரு பதிவு செய்யப்பட்ட சங்கத்துடன் தன்னை இணைத்துக் கொள்வதற்கு—

(i) உத்தேச கைமாற்றம், பிரித்தல் அல்லது இணைத்தல் பற்றிய பொருளாதார சாத்தியம் தொடர்பில் விதப்புரை செய்யும் அறிக்கையொன்று, விதித்துரைக்கப்பட்டவாறான ஒரு ஆளிடமிருந்து அல்லது நிறுவனத்திடமிருந்து பெறப்பட்டிருக்காவிடின்;

(ii) பதிவு செய்யப்பட்ட சங்கம், விடயத்துக்கேற்றவாறு எந்தச் சங்கங்களாகப் பிரிக்கப்பட்டதோ அல்லது எந்தச் சங்கங்களுடன் இணைக்கப்பட்டதோ அந்தச் சங்கங்களின் துணை விதிகளானவை, அவற்றின் கீழ் ஆக்கப்பட்ட சட்டங்களின் அல்லது ஏதேனும் விதியின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாக இல்லையெனக் கூறுகின்ற அறிக்கையொன்று, 4ஆம் பிரிவின் நோக்கங்களுக்காக ஒரு நிறுவனத்திடமிருந்து அல்லது பதவிப் பெயர் குறிப்பிடப்பட்ட ஆளிடமிருந்து பெறப்பட்டிருக்காவிடின்,

பதிவாளரினால் அங்கீகாரம் எதுவும் வழங்கப்படுத்தலாகாது.''.

9. முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) அதன் (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை இத்தால் உட்புகுத்துவதன் மூலமும்:—

(1அ) சங்கத்தின் உறுப்பினர்களினது பொறுப்பு வரையறுக்கப்பட்டிருக்குமிடத்து, பதிவு செய்யப்பட்ட சங்கமொன்று அல்லாத வேறு எந்த உறுப்பினரும், விதிகளினுல் விதித்துரைக்கப்படக்கூடியவாறான ஐந்திலொரு உச்சளவுக்கு அமைய, சங்கத்தின் பங்கு மூலதனத்தில் அத்தகைய அளவினை வைத்திருத்தல் ஆகாது;'' அத்துடன்

(2) இரண்டாம் உட்பிரிவில் உள்ள ''1961 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க கமத்தொழில் உற்பத்திப் பொருட்கள் உத்தரவாத விலைகளும் நெல் குற்றலையும் உமி நீக்கலையும் கட்டுப்படுத்தலும் சட்டத்தின் கீழான ஏதேனும் அட்டவணைப்படுத்தப்பட்ட கமத்தொழில் உற்பத்திப் பொருள்'' என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக ''நெல் சந்தைப்படுத்தும் சபையின் முகவர் ஒருவர் என்றவாறு ஏதேனும் அட்டவணைப்படுத்தப்பட்ட கமத்தொழில் உற்பத்திப் பொருள்'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

10. முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவை உடனடுத்துப் பின் வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படுவதுடன், அவை அச்சட்டவாக்கத்தின் 11அ, 11ஆ, 11இ, 11ஈ என்னும் பிரிவுகள் என்றவாறு பயனுறுதலும் வேண்டும்:—

''பங்குகளின் கொள்வனவுக்குக் கொடுப்பனவு செய்யும் முறைமை.

11அ. உறுப்பினர் ஒருவர், ஏதேனும் பங்கின் கொள்வனவுக்கெனப் பத்து ரூபா தொடக்கக் கொடுப்பனவு ஒன்றுடன் கொடுப்பனவினை ஆரம்பிக்கலாம் என்பதுடன், அத்தகைய கட்டுப்பணக் கொடுப்பனவினை, அத்தகைய தொடக்கக் கொடுப்பனவுத் தேதியிலிருந்து ஓராண்டுக்குள் நூறு ரூபாய்க்கு அதிகரித்தலும் வேண்டும். ஆகவும் குறைந்தளவு பெறுமதி விரும்பியவாறு அதிகரிக்கப்படலாம். ஒரு பங்கின் மொத்தப் பெறுமதி தனியொரு கட்டுப்பணத்தில் செலுத்தப்படலாம்;

ஆயின் உறுப்பினரொருவர் அவர் சேர்த்துக் கொள்ளப்பட்ட தேதியிலிருந்து ஒரு வருடம் கழியும் வரையில் வாக்களிப்பதற்கான அல்லது பதவியைக் கொண்டிருப்பதற்கான உரிமையை அனுபவித்தல் ஆகாது;

ஆயின் மேலும், இப்பிரிவின் ஏற்பாடுகள், பிரிவுகள் 4 (1) (அ) அத்துடன் (ஆ) அத்துடன் 5 (1) அத்துடன் (2) என்பவற்றின் ஏற்பாடுகளின் கீழ்ப் பதிவுக்கெனப் பதிவாளரிடம் விண்ணப்பத்தைச் செய்துள்ள ஆட்களின் விடயத்தில் ஏற்புடையனவாதலாகாது.

வாக்களிப்பதற்கான தகவுடைமை.

11ஆ. உறுப்பினர் ஒருவர் முழுமையான உறுப்பாண்மையைப் பெற்றதன் பின்னர் மாத்திரமே, பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றின் ஏதேனும் கூட்டத்தில் வாக்களிக்கவும் அத்துடன் அத்தகைய சங்கத்தின் ஏதேனும் பதவிக்குத் தெரிவு செய்யப்படவும் உரித்துடையவராதல் வேண்டும்.

தகைமையீனம்

11இ. பாராளுமன்றத்தின், மாகாண சபையின், மாநகர சபையின் அல்லது பிரதேச சபையின் உறுப்பினர் ஒருவராக இருக்கின்றவரான ஆள் எவரும் பதிவு செய்யப்பட்ட ஒரு கூட்டுறவுச் சங்கத்திற்குத் தெரிவு செய்யப்படுவதற்கு அல்லது பதிவு செய்யப்பட்டவொரு கூட்டுறவுச் சங்கத்தின் குழுவின் உறுப்பினர் ஒருவராகப் பதவியில் தொடர்ந்து இருப்பதற்குத் தகவுடையவராதல் ஆகாது.

தவிசாளராகத் தெரிவு செய்யப்படுவதற்குத் தகைமையிழப்பு.

11ஈ. ஆளொருவர், அவர் தேர்ந்தெடுக்கப்படும் தேதியன்று உறுப்பாண்மை பதிவு செய்யப்பட்ட சங்கங்களைக் கொண்டுள்ளதும் முதலாவதாகக் குறிப்பிடப்பட்ட சங்கத்தின் குறிக்கோள்களையொத்தவையாக இல்லாத குறிக்கோள்களையுடையதுமான வேறு ஏதேனும் பதிவு செய்யப்பட்ட சங்கத்தின் தவிசாளராக இருப்பின் பதிவு செய்யப்பட்ட எந்தச் சங்கத்தின் உறுப்பாண்மை பதிவு செய்யப்பட்ட சங்கங்களைக் கொண்டுள்ளதோ அந்தப் பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றின் தவிசாளரொருவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதினின்று தகைமையிழந்தவராதல் வேண்டும்.''.

11. முதன்மைச் சட்டவாக்கத்தில் 12 ஆம் பிரிவானது, அதற்கான (1) ஆம் உட்பிரிவில் ''தனியாளை இணைவு உறுப்பினராகச்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''சங்கத்தின் துணை விதிகளுக்கிணங்கத் தொழிலைக் கொண்டு நடாத்துவதற்கு ஒப்பந்தமொன்றைச் செய்து கொள்ளுகின்றவரான எவரேனும் தனியாளை இணைவு உறுப்பினர் ஒருவராகச்'' என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

12. பின்வரும் புதிய தலைப்பானது, முதன்மைச் சட்டவாக்கத்தின் 111 ஆம் அத்தியாயத்தில் காணப்படும், ''பதிவு செய்யப்பட்ட சங்கங்களின் கடமைகள்'' என்னும் தலைப்புக்குப் பதிலாக இத்தால் இடப்படுகின்றது:—

**"பதிவுசெய்யப்பட்ட சங்கங்களின் உரிமைகள், கட்டுப்பாடுகள் அத்துடன் சிறப்புரிமைகள்"**

13. முதன்மைச் சட்டவாக்கத்தின் 22 ஆம் பிரிவானது, அப்பிரிவில் ''தேசிய அரசப் பேரவை'' என்னும் சொற்கள் காணப்படும் இடங்களிலெல்லாம் அதற்குப் பதிலாகப் ''பாராளுமன்றம்'' என்னும் சொல்லை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

14. முதன்மைச் சட்டவாக்கத்தின் 24 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (அ) என்னும் பந்தியில் (iii) ஆம் உட்பந்தியில், ''1961 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, கமத்தொழில் உற்பத்திப் பொருட்கள் (உத்தரவாத விலைகளும் உமி அகற்றலையும் நெற்குற்றலையும் கட்டுப்படுத்தலும்) சட்டத்தின் கீழான ஏதேனும் கட்டளைப்படுத்தப்பட்ட கமத்தொழிலை விளைபொருளை'' எனும் சொற்களுக்குப் பதிலாக ''நெல் சந்தைப்படுத்தல் சபையின் முகவர் ஒருவர் என்ற வகையில் ஏதேனும் அட்டவணைப்படுத்தப்பட்ட கமத்தொழில் விளைபொருளை' எனும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

15. முதன்மைச் சட்டவாக்கத்தின் 39 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) அதன் (1) ஆம் உட்பிரிவுக்கான காப்பு வாசகத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய காப்பு வாசகத்தை இடுவதன் மூலமும்:—

''ஆயின், பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றின் பொதுக் குழுவின் அங்கீகாரத்துடனும் அதனால் விதிக்கப்படக் கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளின் மீதும், பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றானது இன்னுமொரு பதிவு செய்யப்பட்ட சங்கத்திற்குக் கடன்களை வழங்கலாம் அல்லது இணை உறுப்பினர் ஒருவருக்குக் கடனிற்குப் பண்டங்களை விநியோகிக்கலாம்'';

அத்துடன்

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய உட்பிரிவை இடுவதன் மூலமும்:—

''(2) அதனது பொதுக் குழுவின் அங்கீகாரத்துடனின்றி, பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றானது, கமத்தொழில் விளைபொருள் தவிர்ந்த ஏதேனும் அசையும் ஆதனத்தின் பிணைப்பொறுப்பின் மீது பணத்தைக் கடனாகக் கொடுத்தலாகாது.''.

16. முதன்மைச் சட்டவாக்கத்தின் 42 ஆம் பிரிவானது, அப்பிரிவில் ''இந்நோக்கத்திற்காகப் பதிவாளரினால் அங்கீகரிக்கப்பட்ட'' என்னும் சொற்கள் காணப்படும் இடங்களிலெல்லாம் அச்சொற்களை விட்டுவிடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

17. முதன்மைச் சட்டவாக்கத்தின் 43 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை நீக்குவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

18. முதன்மைச் சட்டவாக்கத்தின் VIII ஆம் அத்தியாயத்திற்கான ''கணக்குகள் வரவு செலவு, கணக்காய்வு விசாரணை, சோதனையில் அல்லது நுண்ணாய்வு'' என்னும் தலைப்புக்குப் பதிலாகப் பின்வரும் புதிய தலைப்பானது இத்தால் இடப்படுகின்றது:—

''பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றின் கணக்குகள், வரவு செலவுக் கணக்காய்வு விசாரணைகள் அத்துடன் பரிசோதனைகள்''.

19. முதன்மைச் சட்டவாக்கத்தின் 44 ஆம் பிரிவானது இத்தால் அதற்கான (2) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலம் திருத்தப்படுகின்றது:—

''(2) ஓராம் உட்பிரிவின் கீழான கணக்காய்வானது பின்வருவனவற்றை உள்ளடக்குதல் வேண்டும்:—

(அ) மேலதிகக் கடனின் பரிசீலனையொன்று;

(ஆ) பதிவு செய்யப்பட்ட சங்கங்களின் சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் பெறுமான மதிப்பீடொன்றும் சரிபிழை பார்ப்பொன்றும்;

(இ) ஒழுங்கமைப்பு முறைமைகளும், நடைமுறைகளும், புத்தகங்களும், பதிவேடுகளும் அத்துடன் ஆவணங்களும் சங்கத்தின் செயற்பாடுகளின் தொடர்ச்சியான மதிப்பீடொன்றை இயலச் செய்வதற்காக முறைமையான நிதிக் கட்டுப்பாட்டையும் அத்துடன் தகவல் சமர்ப்பித்தலையும் நிச்சயப்படுத்தும் விதமாகவும் போதியளவிலும் வழங்கப்பட்டுள்ளனவா என்பதனதும், அத்துடன் அத்தகைய முறைமைகளும் நடைமுறைகளும் புத்தகங்களும் பதிவேடுகளும் அத்துடன் வேறு ஆவணங்களும் திறமையாக நடைமுறையில் உள்ளனவா என்பதனதும் பரிசீலனையொன்று;

(ஈ) சங்கத்தின் நடைமுறையானது இச்சட்டத்தினதும் அல்லது இதன் கீழ் ஆக்கப்படும் விதிகள் அல்லது துணைவிதிகளின் ஏற்பாடுகளுக்கிணங்க உள்ளதா? என்பதற்கானதும், அத்துடன் அலுவல்களது நிருவாகமானது அத்தகைய சட்டத்தில், விதிகளின், ஒழுங்குவிதிகளின் அல்லது துணைவிதிகளின் ஏற்பாடுகளுக்கிணங்கவுள்ளதா என்பதற்கானதுமான பரிசீலனையொன்று;

(உ) நிதியின் பயன்பாடு திறமையாகவும் சிக்கனமாகவும் கொண்டு நடாத்தப்பட்டுள்ளதா என்பதற்கான பரிசீலனையொன்று;

(ஊ) பதிவு செய்யப்பட்ட சங்கத்திற்குச் சொந்தமான அத்துடன் சங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழுள்ள பணம் மற்றும் ஆதனத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் விதமாகத் திருப்திகரமான நடைமுறையொன்று உருவாக்கப்பட்டுள்ளதா என்பதற்கான பரிசீலனையொன்று;

(எ) கணக்கியல், நிதிசார் அத்துடன் பெறுமான மதிப்பீட்டுக் கோட்பாடுகளைப் போதிய கவனத்திற் கொண்டு, பரிசீலனையின் கீழுள்ள காலப் பகுதி தொடர்பாகச் சபையின் அலுவல்கள் பற்றிய உண்மையானதும் செம்மையானதுமான கணக்கொன்றைச் சமர்ப்பிக்கக் கூடிய விதத்தில் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகள் வடிவமைக்கப்பட்டுள்ளனவா என்பதற்கான பரிசீலனையொன்று;

அத்துடன்

(ஏ) வேறு விதித்துரைக்கப்பட்ட கருமங்கள்.''.

**20.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 46 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகிறது:—

''விசாரணையும் பரிசோதனையும்

**46.** (1) பதிவாளரானவர் தனது சுய பிரேரணையின்பேரில் அத்துடன் குழுவின் பெரும்பான்மையானோரின் விண்ணப்பத்தின்

பேரில் அல்லது பதிவு செய்யப்பட்ட ஒரு சங்கத்தின் மூன்றில் ஒரு பங்குக்குக் குறையாத உறுப்பினர்களது விண்ணப்பத்தின்பேரில், ஒரு விசாரணையை அல்லது பரிசோதனையை மேற்கொள்ளலாம்; அல்லது அது சார்பாக எழுத்து மூலமான கட்டளைகள் மூலம் அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆளைப் பதிவு செய்யப்பட்ட சங்கத்தின் அமைப்பு, செயற்பாடு அத்துடன் நிதி நிலைமை பற்றிய விசாரணையை மேற்கொள்ளுமாறு அல்லது பதிவு செய்யப்பட்ட சங்கத்தின் புத்தகங்களைப் பரிசோதனை செய்யுமாறு பணிக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழான ஒரு விசாரணையின் நோக்கங்களுக்காகப் பதிவாளருக்கு அல்லது ஒரு விசாரணையை அல்லது பரிசோதனையை நடாத்துவதற்கு அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆளுக்குப் பின்வரும் தத்துவங்கள் இருத்தல் வேண்டும்.

(அ) பதிவாளரின் அல்லது விசாரணை அல்லது பரிசோதனை செய்ய அவரால் அதிகாரமளிக்கப்பட்ட ஆளின் அபிப்பிராயப்படி சங்கத்தின் ஏதேனும் கொடுக்கல் வாங்கல் சம்பந்தமாக அல்லது அதன் அலுவல்களின் முகாமைத்துவம் சம்பந்தமாக முக்கியமான தகவல்களைத் தரக்கூடியவர்கள் எனக் கருதப்படக்கூடிய சங்கத்தின் எவரேனும் கடந்தகால அல்லது தற்கால அலுவலரை, முகவரை, சேவையாளரை அல்லது உறுப்பினரை அல்லது வேறு எவரேனும் ஆளைக் கட்டளைவிட்டழைத்தல்.

(ஆ) சங்கத்தின் அலுவல்கள் தொடர்பான ஏதேனும் புத்தகம் அல்லது ஆவணம் அல்லது சங்கத்துக்குச் சொந்தமான காசுப் பிணைப் பொறுப்பு அல்லது பிற ஆதனத்தைத் தமது உடைமையில் அல்லது கட்டுக்காப்பில் வைத்திருக்கும் சங்கத்தின் எவரேனும் கடந்தகால அல்லது தற்கால அலுவலர், முகவர், சேவையாளர் அல்லது உறுப்பினர் அல்லது வேறு ஆள் அத்தகைய புத்தகத்தை, ஆவணத்தை, காசைப் பிணைப்பொறுப்பை அல்லது பிற ஆதனத்தைச் சமர்ப்பிக்க வேண்டுமெனத் தேவைப்படுத்தல்.

(இ) அவரால் பணிக்கப்படக் கூடியவாறான அத்தகைய கருமங்களைத் தீர்மானிப்பதற்காக அவரால் விதித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய நேரத்திலும் இடத்திலும் சங்க உறுப்பினர்களின் பொதுக் கூட்டமொன்றுக்குக் கட்டளை விட்டழைத்தல்; அத்துடன்

(ஈ) அத்தகைய விசாரணையின்போது அல்லது பரிசோதனையின்போது மோசடி அல்லது ஒழுங்கீனம் இருப்பதாக அவர் நம்புவதற்குக் காரணம் இருந்தால் சங்கத்தின் கணக்குப் புத்தகங்களை அல்லது ஆவணங்களைத் தமது கட்டுக்காப்பில் எடுத்துக் கொள்ளல்.

(3) இப்பிரிவின் கீழ் ஒரு விசாரணையை அல்லது பரிசோதனையை நடாத்தும் பதிவாளரும் அதற்கென அவரால் அதிகாரமளிக்கப்பட்ட ஆள் ஒவ்வொருவரும் தண்டனைச் சட்டக் கோவையின் கருத்தெல்லைக்குள்ளாகப் பகிரங்க அலுவலர்களாகக் கருதப்படல் வேண்டும்''.

21. முதன்மைச் சட்டவாக்கத்தின் 47 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்படுகின்றது.

22. முதன்மைச் சட்டவாக்கத்தின் 48 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய பிரிவு இடப்படுகின்றது:—

' சங்கமொன்றின் குழுவைக் கலைத்தல்''

48. (1) பதிவு செய்யப்பட்ட ஒரு சங்கத்தின் குழு தகுந்த முறையில் அதன் கடமைகளைப் புரியவில்லையென 46 ஆம் பிரிவின் கீழ்ப் பதிவு செய்யப்பட்ட சங்கத்தின் புத்தகங்களின் ஒரு விசாரணை அல்லது பரிசோதனையின் பின், பதிவாளர் அபிப்பிராயப்பட்டால் அக் குழுவைக் கலைத்துவிடுவது சம்பந்தமான ஆட்சேபனைகள் ஏதுமிருப்பின் அவற்றைத் தெரிவிப்பதற்கான ஒரு சந்தர்ப்பத்தைக் குழுவிற்கு வழங்கிய பின்னர், அவரது முடிபுகளை 46 ஆம் பிரிவின் கீழான அத்தகைய விசாரணை அல்லது பரிசோதனை அவரது சுய பிரேரணையின் பேரில் மேற்கொள்ளப்பட்டால் விதிகளுக்கு இணங்க அவரால் கட்டளையிட்டழைக்கப்பட்ட பொதுக் குழுவுக்கு அல்லது அத்தகைய அல்லது பரிசோதனைக் குழுவின் பெரும்பான்மை உறுப்பினர்களின் அல்லது உறுப்பினர்களின் எண்ணிக்கையில் மூன்றில் இரண்டு பங்குக்குக் குறையாதவர்களின் விண்ணப்பத்தின் பேரில் மேற்கொள்ளப்பட்டால் உப விதிகளுக்கு இணங்கக் கட்டளை விட்டழைக்கப்பட்ட பொதுக் கூட்டத்துக்கு, அறிக்கையிடலாமென்பதுடன் பொதுக் குழுவானது—

(அ) தவறிழைத்த குழு உறுப்பினரை அல்லது உறுப்பினர்களை அகற்றிவிட்டு அதன் பயனாக ஏற்படும் வெற்றிடங்களை உப விதிகளுக்கு இணங்க நிரப்பலாம்;

(ஆ) குழுவைக் கலைத்துவிட்டு ஒரு புதிய குழுவைத் தெரிவு செய்யலாம் அல்லது சங்கத்தின் அலுவல்களை முகாமை செய்யப் பொருத்தமான ஓர் ஆளை அல்லது ஆட் குழுவை நியமிக்கலாம்;

(2) அவ்வாறு தெரிவு செய்யப்பட்ட குழு அல்லது அவ்வாறு நியமிக்கப்பட்ட ஆள் அல்லது ஆட்கள், கலைக்கப்பட்ட குழுவின் எஞ்சிய பதவிக் காலத்துக்குப் பதவி வகித்தல் வேண்டும்;

(3) ஒராம் உட்பிரிவின் பந்தி (ஆ) இன் கீழ் நியமிக்கப்பட்ட ஆள் அல்லது ஆட்கள் முறையாக நியமிக்கப்பட்ட சங்கத்தின் குழுவொன்றுக்குரிய எல்லாத் தத்துவங்களையும் உரிமைகளையும் அத்துடன் சிறப்புரிமைகளையும் பிரயோகிக்கலாம்.

(4) ஓராம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் கீழ் நியமிக்கப் பட்ட எவரேனும் ஆள் அல்லது ஆட்கள், சங்கத்தின் சட்டத்திற்கு அல்லது உப விதிகளுக்கு முரணாக இருக்கின்றவாறான அவர் களால் செய்யப்படும் அத்தகைய எவையேனும் செயல்கள் மூலம் ஏற்படக் கூடிய எவையேனும் இழப்புகளுக்குக் கூட்டாகவும் தனியாகவும் பொறுப்பாளர்களாக வேண்டும்.

(5) சங்கத்தின் அலுவல்களை முகாமை செய்வதற்காக ஓராம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் கீழ் நியமிக்கப்பட்ட எவ ரேனும் ஆளுக்கான ஊதியத்தைப் பொதுக் குழு நிர்ணயிக்கலாம். இத்தகைய ஊதியத் தொகையும் சங்கத்தை முகாமை செய்யும் போது உறப்பட்ட செலவுகள் எவையேனுமிருப்பின் அச்செலவு களும் சங்கத்தின் நிதியத்திலிருந்து வழங்கப்படல் வேண்டும்.

(6) ஓராம் உட்பிரிவின் பந்தி (ஆ) இன் கீழ்க் கலைக்கப்பட்ட பதிவு செய்யப்பட்ட ஒரு சங்கத்தின் அலுவல்களை முகாமை செய்வதும் அத்துடன் சங்கத்தின் உப விதிகளுக்கு இணங்கப் புதிய குழு ஒன்றை நியமிப்பதற்கு ஏற்பாடு செய்வதும், எத்தேதி யிலிருந்து அது பதவி வகிக்காதொழிந்ததுவோ அத்தேதிக்கு நேர் முன்னர் பதவி வகித்த சங்கத்தின், இப்பிரிவின் கீழ் நியமிக்கப் பட்ட ஆள் அல்லது ஆட்களின் கடமையாதல் வேண்டும்.

(7) இப்பிரிவிலுள்ளது எதுவும் 49 ஆம் பிரிவின் சங்கத்தின் பதிவை இல்லாதொழித்தலுக்கான பதிவாளரின் தத்துவத்தைப் பாதிப்பதாகக் கருதப்படலாகாது.''.

23. முதன்மைச் சட்டவாக்கத்தின் பிரிவு 48அ இத்தால் நீக்கப்படுகிறது.

24. முதன்மைச் சட்டவாக்கத்தின் 49 ஆம் பிரிவு அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் ''47 ஆம் பிரிவின் கீழ்ப் பரிசோதனையொன்று அல்லது புலனாய் வொன்று'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''பரிசோதனையொன்று'' என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

25. முதன்மைச் சட்டவாக்கத்தின் 53 ஆம் பிரிவு பந்தி (ஒ) வை உட னடுத்துப் பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் திருத்தப்படுவ துடன், அது பந்தி (ஓ) எனப் பயனுறுதலும் வேண்டும்:—

''(ஓ) பதிவாளரால் பணிக்கப்பட்டவாறான அத்தகைய முறையில் ஒழிப் போனால் சேர்க்கப்பட்ட எல்லாப் பணத்தையும் வைப்பிலிடல்.''.

26. முதன்மைச் சட்டவாக்கத்தின் 54 ஆம் பிரிவு பின்வருமாறு இத்தால் திருத்தப்படுகின்றது:—

(1) அப்பிரிவை அதற்கான (1) ஆம் உட்பிரிவாக மீள இலக்கமிடுவதன் மூலமும்; அத்துடன்

(2) மீள இலக்கமிடப்பட்ட உட்பிரிவு (1) ஐ உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவைச் சேர்ப்பதன் மூலமும்:—

''(2) ''கூட்டுறவு நிதியம்'' என அழைக்கப்படுவதான நிதியமொன்று தாபிக்கப்பட்டு, ஒழிப்போனால் சேர்க்கப்படும் எல்லாப் பணங் களும் அதில் வரவு வைக்கப்படல் வேண்டும் என்பதுடன் அத்தகைய நிதியமானது விதிகளுக்கு இணங்கப் பதிவாளரால் இயக்கப்படுதலும் வேண்டும்.''.

27. முதன்மைச் சட்டவாக்கத்தின் 58 ஆம் பிரிவு அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் ''கடந்த காலத்திலிருந்தவராயினுஞ்சரி'' என்று தொடங்கி ''கருதப் படுதல் வேண்டும்'' என்பது வரையிலான சொற்களுக்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:—

''கடந்த காலத்திலிருந்தவராயினுஞ்சரி அல்லது அப்போதுள்ளவராயினுஞ் சரி உறுப்பினர்களிடமிருந்து, அலுவலரிடமிருந்து அல்லது ஊழியரிடமிருந்து அல்லது இறந்துபோன ஓர் உறுப்பினரின் அலுவலரின் அல்லது ஊழியரின், நியமனம் பெற்றவரிடமிருந்து மரபுரிமையாளரிடமிருந்து அல்லது சட்டப் பிரதிநிதியிடமிருந்து சங்கத்துக்கு வருமதியான ஏதேனும் தனிசுக்கான, கோரி க்கைக்கான அல்லது சேதங்களுக்கான பதிவு செய்யப்பட்ட ஒரு சங்கத்தின் ஓர் உரிமைக் கோரிக்கை அல்லது பதிவு செய்யப்பட்ட ஒரு சங்கத்திடமிருந்து அல்லது கடந்த காலத்திலிருந்தவராயினுஞ்சரி அல்லது அப்போதுள்ளவரா யினுஞ்சரி ஓர் அலுவலரிடமிருந்து அல்லது ஊழியரிடமிருந்து அல்லது உறுப் பினரிடமிருந்து ஓர் உறுப்பினருக்கு வருமதியான ஏதேனும் தனிசுக்கான, சேதத்துக்கான அல்லது கோரிக்கைக்கான ஓர் உரிமைக் கோரிக்கை அல்லது பதிவு செய்யப்பட்ட ஒரு சங்கத்திடமிருந்து காலஞ் சென்ற ஓர் உறுப்பினரின் அலுவலரின் அல்லது ஊழியரின் எவரேனும் நியமனம் பெற்றவருக்கு மரபுரிமை யாளருக்கு அல்லது சட்டப் பிரதிநிதிக்கு வருமதியான ஏதேனும் தனிசுக்கான சேதத்துக்கான அல்லது கோரிக்கைக்கான ஓர் உரிமைக் கோரிக்கை அத்தகைய தனிசுக் கோரிக்கை அல்லது சேதம் அனுமதிக்கப்பட்டிருந்தாலும் சரி அனு மதிக்கப்படாதிருந்தாலுஞ்சரி, இவ்வுட்பிரிவின் கருத்தெல்லைக்குள்ளான ஒரு சங்கத்தின் அலுவலருடன் தொடர்புடைய ஒரு பிணக்கெனக் கருதப்படல் வேண்டும்.''.

28. முதன்மைச் சட்டவாக்கத்தின் 59 ஆம் பிரிவு அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் இறுதியில் பின்வரும் புதிய பந்தியை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:—

''1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கக் குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 291 ஆம் பிரிவுக்கு இணங்க அவர் மேல் சுமத்தப் பட்ட குற்றப் பணத்தைச் செலுத்தத் தவறியமைக்காக மறியற் தண்டனை விதிக்கப்பட்ட எவரேனும் தவறுநர், பிரிவு 59 (1) (இ) இல் விதித்துரைக்கப் பட்ட அத்தாட்சிப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் தொகைப் பணத்தைச் செலுத்துவதினின்றும் விலக்களிக்கப்படலாகாது.''.

29. முதன்மைச் சட்டவாக்கத்தின் அத்தியாயம் XIஐ உடனடுத்துப் பின்வரும் புதிய அத்தியாயம் இத்தால் உட்புகுத்தப்படுவதுடன் அது அச்சட்ட வாக்கத்தின் அத்தியாயம் XIஅ எனப் பயனுறுதலும் வேண்டும்.

## அத்தியாயம் XIஅ

## அரச நிதியங்களுடன் தொழிற்படும் பதிவு செய்யப்பட்ட சங்கங்களுக்கு ஏற்புடைத்தான சிறப்பு ஏற்பாடு

*60அ.* *(1)* பதிவு செய்யப்பட்ட சங்கமொன்று, அரசாங்கத்திடமிருந்து கடனொன்றை, முற்பணத்தை அல்லது மானியக் கொடையைப் பெறுமிடத்து, அத்தகைய கடன், முற்பணம் அல்லது மானியக் கொடை ஒவ்வொன்றும் பின்வரும் நிபந்தனைகளுக்கு அமைந்ததாதல் வேண்டும்:—

*(அ)* எழுத்திலான பதிவாளரது அங்கீகாரம், கொள்வனவு, குத்தகை, நன்கொடை மூலமாக அல்லது வேறு வகையாக, ஏதேனும் காணியை, கட்டிடத்தை அல்லது அசைவுள்ள அல்லது அசைவற்ற வேறு ஆதனத்தைக் கொள்வதற்கு அல்லது விற்பனை வாயிலாக ஈடு, குத்தகை, கொடுத்து மாற்றல் வகையாக அல்லது வேறேதேனும் விதத்தில், அதன் குறிக்கோள்கள் தொடர்பிலான ஏதேனும் நோக்கத்திற்காகப் பராதீனப்படுத்துவதற்கு முன்னதாகச் சங்கத்தினால் பெற்றுக் கொள்ளப்படுதல் வேண்டும்;

*(ஆ)* சங்கத்தின் நிதியங்கள், நம்பிக்கைப் பொறுப்புக் கட்டளைச் சட்டத்தின் *20* ஆம் பிரிவில் நிபந்தனைகளின்படி, அசைவற்ற ஆதனத்தின் முதனிலை ஈடு ஒன்றில் தவிர்ந்த வேறு பிணைப் பொறுப்புக்களில் அல்லது எவரேனும் வங்கியாளருடன் அல்லது அத்தகைய நோக்கத்திற்காகப் பதிவாளரால் அங்கீகரிக்கப்பட்டவரான எவரேனும் வங்கியாளர் அல்லது வங்கியாளராகச் செயலாற்றும் ஒருவருடன் அல்லது பதிவாளரால் அந்நோக்கத்திற்கென அங்கீகரிக்கப்பட்ட வேறேதேனும் பதிவு செய்யப்பட்ட சங்கத்தின் பங்குகளில் அல்லது அதன் பிணைப் பொறுப்பில் அல்லது விதிகளால் ஏற்பாடு செய்யப்பட்ட வேறேதேனும் விதத்தில் வைப்பிலிடப்படுதல் அல்லது முதலீடு செய்யப்படுதல் வேண்டும்.

*(2)* பதிவாளரானவர், *46* ஆம் பிரிவின் கீழான பதிவு செய்யப்பட்ட சங்கத்தின் புத்தகங்களின் விசாரணையொன்றின் அல்லது சோதனையின் பின்னர் அரச நிதியங்களுடன் தொழிற்படும் பதிவு செய்யப்பட்டதொரு சங்கத்தின் குழுவானது தேவைப்படுத்தப்பட்டவாறு அதன் கடமைகளைப் புரியவில்லை என அபிப்பிராயப்பட்டால், குழுவுக்கு அதனைக் குலைப்பதற்கு ஆட்சேபனைகள் எவையேனும் இருப்பின் அதன் ஆட்சேபனைகளைக் கூறுவதற்குச் சந்தர்ப்பம் அளித்தபின் விதிகளுக்கிணங்க அவரால் கூட்டப்படும் பொது குழுவுக்கு அவரது முடிவெடுப்புக்கள் பற்றி அறிக்கையிடலாமென்பதுடன், அத்தகைய பொதுக் குழுவானது,

பதிவாளரால் குறித்துரைக்கப்பட்ட காலத்திற்குள்ளாகக் குழுவை அகற்றுதல் வேண்டும்; பொதுக் குழு அவ்வாறு செய்யத் தவறினால் அல்லது அசட்டையாக இருந்தால், பதிவாளர் குழுவை அகற்றுதல் வேண்டுமென்பதுடன் பொதுக் குழுவை, முகாமைச் சபையொன்றை நியமிக்கும்படி தேவைப்படுத்துதலும் வேண்டும். பொதுக் குழு 14 நாட்களுக்குள் முகாமைச் சபையொன்றை நியமிக்கத் தவறினால் பதிவாளர், அத்தகைய சங்கத்தின் அலுவல்களை முகாமை செய்வதற்குப் பொருத்தமான ஆளொருவரை அல்லது ஆட்களை நியமிக்கலாம். அவ்வாறு அகற்றப்பட்ட குழு உறுப்பினர்கள், அத்தகைய அகற்றுகைத் தேதியிலிருந்து ஐந்தாண்டு காலப் பகுதியொன்றுக்குப் பதிவு செய்யப்பட்ட சங்கம் எதன் பதவிக்கும் தெரிவு செய்யப்படுவதற்குத் தகவுடையவராதலாகாது. இப்பிரிவின் கீழ் நியமிக்கப்படும் முகாமைச் சபை அதே காலப் பகுதிக்குப் பதவி தாங்குதல் வேண்டுமென்பதுடன், 48 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் கீழ் நியமிக்கப்பட்ட ஆளொருவருக்குள்ளதைப் போன்ற அதே தத்துவங்களையும் பணிகளையும் கொண்டிருத்தல் வேண்டும்.

60ஆ. (1) பதிவாளரானவர், 46 ஆம் பிரிவின் கீழான பதிவு செய்யப்பட்ட சங்கத்தின் புத்தகங்களின் விசாரணையொன்றின் பின்னரும் அத்துடன் சோதனையின் பின்னரும் பதிவு செய்யப்பட்ட சங்கம் எதனதும் எவரேனும் அலுவலர் அல்லது ஊழியர் அவரது கடமைகளை முறையான விதத்தில் புரியவில்லை என அல்லது தகுதியற்றவரென அல்லது வேறு வகையில் அவரது கடமைகளைத் திறமையாக நிறைவேற்ற இயலாதவர் என அபிப்பிராயப்பட்டால், இச்சட்டத்தில், 1972 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக் குழுச் சட்டத்தில் அல்லது வேறேதேனும் சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும் அத்தகைய அலுவலருக்கு அல்லது ஊழியருக்கு அவர்களது ஆட்சேபனைகளைக் கூறுவதற்குச் சந்தர்ப்பம் அளித்த பின்னர், எழுத்திலான கட்டளை மூலம் அவசியமாகக் கூடியவாறான அத்தகைய விசாரணை முடிவுறாதிருக்கின்றவரான விடயத்துக்கேற்றாற் போன்று அத்தகைய அலுவலரை அல்லது ஊழியரை இடைநிறுத்தலாம் அல்லது தடுத்து வைக்கலாம் என்பதுடன் அத்தகைய விசாரணையின் பின்னர் அத்தகைய அலுவலரை அல்லது ஊழியரைப் பதவியிலிருந்து அகற்றலாம்;

ஆயின், இவ்வுட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட அகற்றுகைக் கட்டளையொன்றின் மூலம் இன்னலுறும் எவரேனும் ஊழியர், அதிலிருந்து முப்பது நாட்களுக்குள்ளாக, 1972 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கச் சட்டத்தின் கீழ்த் தாபிக்கப்பட்ட கூட்டுறவு ஊழியர் ஆணைக் குழுவுக்கு மேன்முறையீடு செய்யலாமென்பதுடன், அத்தகைய குழுவின் முடிபு இறுதியானதாதல் வேண்டும்.

(2) எவரேனும் ஊழியர் (1) ஆம் உட்பிரிவின் கீழ் அகற்றப்படுமிடத்தும் அத்துடன் அத்தகைய அகற்றுகைக் கட்டளையானது கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக் குழுவினால் உறுதிப்படுத்தப்பட்டிருக்குமிடத்தும் அல்லது முப்பது நாட்களுக்குள்ளாக அத்தகைய

கட்டளைக்கெதிரான மேன்முறையீடு எதுவும் செய்யப்படாத விடத்தும், பிறிதோர் ஊழியர் அத்தகைய தெரிவு அல்லது நியமனம் தொடர்பில் ஏற்புடைத்தான எற்பாடுகளுக்கிணங்க நியமிக்கப்படலாம்.

60இ. பதிவாளரானவர், அரச நிதியங்களுடன் தொழிற் படும், பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றின் அலுவல்களின் திறமையான முகாமையை நிச்சயப்படுத்தும் நோக்கத்துக்காக, அல்லது அரசாங்கத்தினால் அத்தகைய சங்கத்திற்குச் செய்யப் பட்ட எவையேனும் முதலீடுகளை அல்லது பணத்திலான அல்லது பண்டங்களிலான முற்கொடுப்பனவுகளைப் பாதுகாக்கும் நோக் கத்திற்காக அவ்வாறு செய்வது அவசியமானதென அல்லது உசிதமானதெனக் கருதுமிடத்து, இச்சட்டத்தில் அல்லது வேறே தேனும் சட்டத்தில் அல்லது அத்தகைய சங்கத்தின் துணை விதி களில் முரணாக எது எவ்வாறிருப்பினும், அவரது அபிப்பிராயத் தில் அத்தகைய நோக்கத்திற்கு அவசியமானவர்களாகவுள்ள அல் லது உசிதமானவர்களாகவுள்ள அத்தகைய எண்ணிக்கையினரான உறுப்பினர்களை அத்தகைய பதிவு செய்யப்பட்ட சங்கத்தின் குழு உறுப்பினர்களாக இருப்பதற்கெனப் பெயர் குறித்து நியமிக்கப் படலாம்.

ஆயின் அத்தகைய பெயர் குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினர் களின் எண்ணிக்கையானது அத்தகைய குழு உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையில் அரைவாசிக்குக் குறைவாக இருத்த லாகாது.''.

30. முதன்மைச் சட்டவாக்கத்தின் 66 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) அதற்கான (1) ஆம் உட்பிரிவில் உள்ள ''47 ஆம் பிரிவின் கீழ் ஒரு சங்கத்தின் புத்தகங்களைப் பரிசோதனை செய்தலும் அலுவல்களைப் புலனாய்வு செய்தலின் போதும்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''பதிவு செய்யப்பட்டவொரு சங்கத்தின் புத்தகங்களைப் பரிசோதனை செய்தலின் போதும்'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) அதற்கான (2) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும்:—

''(2) ஓராம் உட்பிரிவின் கீழ்ப் பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றிற்கு ஏதேனும் பணத் தொகையை மீள் கொடுப்பனவு செய்வதற் கான அல்லது நட்டஈடு மூலம் அதன் சொத்துக்கு ஏதேனும் பணத் தொகையை உதவு தொகை அளிப்பதற்கான கட்டளை யொன்று, இணங்கியொழுகாது விடப்படுமிடத்து, எந்தப் பிரி வில் சங்கத்தின் பதிவு செய்யப்பட்ட தொழில் இடம் அமைந் துள்ளதோ அல்லது எந்த ஆளுக்கு அல்லது ஆட்கள் குழுவுக்கு அல்லது அலுவலருக்கு அல்லது ஊழியருக்கு எதிராகக் கட்டளை ஆக்கப்பட்டதோ, அந்த ஆள், அல்லது ஆட்கள் குழு, அலு வலர், அல்லது ஊழியர் எந்தப் பிரிவில் வதிகின்றாரோ அல்லது

தொழிலைக் கொண்டு நடாத்துகின்றாரோ அந்தப் பிரிவில் நியாயாதிக்கத்தைக் கொண்ட நீதிவானொருவரால், அத்தகைய ஆள்மீது, அல்லது ஆட்கள் குழுமீது, அல்லது அலுவலர்மீது அல்லது ஊழியர்மீது குற்றப்பணத்தினால் மாத்திரம் தண்டிக் கப்படற்பாலதான அல்லது மறியற்றண்டனையால் தண்டிக்கப் படற்பாலதல்லாத தவறொன்றுக்காக நீதிவானாலான தண் டனைத் தீர்ப்பினால் சுமத்தப்பட்டதொரு குற்றப்பணமொன்று என்றாற் போன்று அறவிடப்படலாமென்பதுடன், 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக் கோவைச் சட்டத்தின் 219 ஆம் பிரிவின் ((1) ஆம் உட் பிரிவின் (அ), (ஈ) என்னும் பந்திகள் தவிர்ந்த) அவ் ஏற்பாடுகள் அதன்மீது ஏற்புடையனவாதல் வேண்டும்;

அத்துடன் நீதிவானானவர் அத்தகைய தண்டனைத் தீர்ப்பை விதிக்கும் நேரத்தில் அப்பிரிவின் ஏற்பாடுகள் வாயிலாக அவர் எந்தப் பணிப்பினைச் செய்திருக்கக் கூடுமோ அந்தப் பணிப்பு எதனையும் செய்யலாம். இப்பிரிவிலுள்ள எதுவும் அதன் கீழான எவையேனும் வழக்கு நடவடிக்கைகளில், பதிவாளரினால் ஆக் கப்பட்ட கட்டளை எதனதும் செம்மை பற்றிச் சீர்தூக்கிப் பார்க்கும்படி, பரிசீலனை செய்யும்படி அல்லது தீர்மானிக்கும் படி நீதிவானுக்கு அதிகாரமளித்தலோ அல்லது அவரைத் தேவைப்படுத்துதலோ ஆகாது.''.

31. முதன்மைச் சட்டவாக்கத்தின் 66அ என்னும் பிரிவு இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:—

66அ. (1) பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றின் தவிசாள ரும் அத்துடன் உறுப்பினர் ஒவ்வொருவரும் விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளருக்குப் பின்வரு வனவற்றின் ஆண்டு வெளிப்படுத்துகையொன்றைச் செய்தல் வேண்டும். அத்தகைய வெளிப்படுத்துகை எந்த ஆண்டு தொடர் பில் செய்யப்படுகின்றதோ அந்த ஆண்டின் மார்ச்சு மாதம் முப்பத்தோராம் தேதியன்று உள்ளவாறு:—

(அ) அவரது எல்லாப் பொறுப்புக்களும் சொத்துக்களும்.

(ஆ) அவரது வாழ்க்கைத் துணையின் எல்லாச் சொத்துக்களும் பொறுப்புக்களும்.

(இ) அவரது பிள்ளைகள் ஒவ்வொருவரினதும் எல்லாச் சொத் துக்களும் பொறுப்புக்களும்.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட வெளிப்படுத் துகை, பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றின் குழுவினது தவிசாள ரால் அல்லது உறுப்பினரால், விடயத்திற்கேற்றவாறு அத்தகைய தவிசாளராக அல்லது உறுப்பினராக அவர் தேர்ந்தெடுக்கப் பட்டதிலிருந்து அல்லது நியமிக்கப்பட்டதிலிருந்து மூன்று மாதங் களுக்குள் அத்துடன் அவர் அத்தகைய தவிசாளராக அல்லது

உறுப்பினராக இல்லாதொழிந்தாலொழியவும் அவர் அவரது முதலாவது வெளிப்படுத்துகை செய்த ஆண்டையடுத்துறும் ஒவ்வோராண்டும் யூலை முதலாம் நாளுக்கு முன்னும் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளருக்குச் செய்யப்படுதல் வேண்டும்.''.

32. முதன்மைச் சட்டவாக்கத்தின் 67 ஆம் பிரிவு ''அல்லது 47 ஆம் பிரிவின் கீழ்ப் பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றின் புத்தகங்கள் பரிசோதனை செய்யப்பட்டு அலுவல்கள் புலனாய்வு செய்யப்பட்ட பின்னர்'' என்னும் சொற்களுக்குப் பதிலாகப் ''புத்தகங்கள் பரிசோதனை செய்யப்பட்ட பின்னர்'' என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

33. முதன்மைச் சட்டவாக்கத்தின் 71அ என்னும் பிரிவு, ''பிரிவுகள் 44, 46, 47, 49, 52 என்பவற்றின் கீழ்'' என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, ''பிரிவுகள் 44, 46, 49, 52 என்பவற்றின் கீழ்'' என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

34. முதன்மைச் சட்டவாக்கத்தின் 75 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) ''குழு'' என்ற சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தில் ''48 ஆம் பிரிவின் கீழ்'' என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, ''பிரிவு 60அ என்பதன் (2) ஆம் உட்பிரிவின் கீழ்'' என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும்;

(2) ''முதனிலை சங்கம்'' என்ற சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தில் ''3 (1) ஆம் பிரிவின் பந்தி (ஆ), (இ) அல்லது (ஈ)'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''3 ஆம் பிரிவின் (ஆ) என்னும் பந்தி'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(3) ''விதிகள்'' என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வருவனவற்றைச் சேர்ப்பதன் மூலமும்:—

''அரச நிதிகள்'' என்பது அரசாங்கத்தால் வழங்கப்பட்ட கடன்கள், முற்பணங்கள் அத்துடன் மானியக் கொடைகள் என்று பொருள்படும் என்பதுடன் சட்டத்தின் 43 ஆம், 57 ஆம் பிரிவுகளில் குறிப்பீடு செய்யப்பட்ட நிதிகளிலிருந்து எவையேனும் கடன்களையும் மானியத்தையும் அல்லது முற்பணங்களையும் உள்ளடக்கும்.''.

35. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும், தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

# 1992 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க ஊழியர் சகாய நிதிய (திருத்தச்) சட்டம்

*[1992, மார்ச் மாதம் 11 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

**1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, ஊழியர் சகாயநிதியச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

1. இச்சட்டம் 1992 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, ஊழியர் சகாய நிதிய (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

2. ஆயிரத்துத் தொளாயிரத்து ஐம்பத்தெட்டாம் ஆண்டின் 15 ஆம் இலக்க, ஊழியர் சகாய நிதியச் சட்டத்தின் 23 ஆம் பிரிவு, அதன் (1) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) அதன் (உ) என்னும் பந்தியில் ''ஏற்றதன் பிறகு; அத்துடன்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''ஏற்றதன் பிறகு;'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) அதன் (உ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியைச் சேர்ப்பதன் மூலமும்:—

''(ஊ) அத்தகைய உறுப்பினர்—

(i) ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்தேழாம் ஆண்டின் 22 ஆம் இலக்க, அரசாங்கத்திற்குச் சொந்தமான, தொழிற் பொறுப்பு முயற்சிகளைப் பகிரங்கக் கூட்டுத் தாபனங்களாக மாற்றுதல் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கூட்டிணைத்தற் கட்டளை ஒன்றினால் அத்தகைய தொழிற் பொறுப்பு முயற்சியைக் கையேற்று, கொண்டு நடாத்தும் நோக்கத்துக்காகப் பகிரங்கக் கூட்டுத்தாபனமொன்று ஸ்தாபிக்கப்பட்டதன்மேல் தொழிற் பொறுப்பு முயற்சியொன்றில் தொழிலுக்கமர்த்தப்படா தொழிந்து அவ்வாறு தாபிக்கப்பட்ட பகிரங்கக் கூட்டுத் தாபனத்தில் தொழில் ஏற்காதுள்ள பிறகு;

(ii) ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்தேழாம் ஆண்டின் 23 ஆம் இலக்க, பகிரங்கக் கூட்டுத்தாபனங்களை அல்லது அரசாங்கத்திற்குச் சொந்தமான தொழிற் பொறுப்பு முயற்சிகளைப் பகிரங்கக் கம்பனிகளாக மாற்றுதல் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்றினால், விடயத்துக்கேற்றாற்போன்று அத்தகைய பகிரங்கக் கூட்டுத்தாபனத்தின் பணிகளைக் கையேற்கும் அல்லது அத்தகைய தொழிற் பொறுப்பு முயற்சியைக் கையேற்று, கொண்டு நடாத்தும் நோக்கத்திற்காகப் பகிரங்கக் கம்பெனியொன்று கூட்டிணைக்கப்

பட்டதன்மேல், விடயத்துக்கேற்றாற்போன்று, பகிரங்கக் கூட்டுத்தாபனமொன்றில் அல்லது தொழிற் பொறுப்பு முயற்சியொன்றில் தொழிலுக்கமர்த்தப்படாதொழிந்து, அவ்வாறு கூட்டிணைக்கப்பட்ட பகிரங்கக் கம்பெனியில் தொழில் ஏற்காதுள்ள பிறகு;

(iii) அந்த உறுப்பினரின் ஆட்குறைப்பின்மீது ஒரு பகிரங்கக் கூட்டுத்தாபனத்திற் தொழிலுக்கமர்த்தப்படாதொழிந்த பிறகு;

(iv) ஒரு பகிரங்கக் கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டதன்மேல் அல்லது அப்பகிரங்கக் கூட்டுத்தாபனத்தின் தொழிற் பொறுப்பு முயற்சி மூடப்பட்டதன்மேல் அப்பகிரங்கக் கூட்டுத்தாபனத்தின் தொழிலுக்கமர்த்தப்படாதொழிந்த பிறகு.''.

*(3)* அதன் கடைசிப் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும்:—

''இப்பிரிவில்—

(i) ''தொழிற் பொறுப்பு முயற்சி'' என்பது, 1971 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, தொழிற் பொறுப்பு முயற்சிகள் (கொள்ளுதல்) சட்டத்தின் கீழ் அரசாங்கத்தினால் கொள்ளப்பட்ட அல்லது அரசாங்கத்திற்கு உரித்தாக்கப்பட்ட ஏதேனும் தொழிற் பொறுப்பு முயற்சி என்று பொருள் படும்;

(ii) ''பகிரங்கக் கூட்டுத்தாபனம்'' என்பது, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பில் உள்ள அதே கருத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(iii) ''பதிவு செய்யப்பட்ட மருத்துவத் தொழிலாளர்'' என்பது, மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் கீழ்ப் பதிவு செய்யப்பட்ட ஒரு மருத்துவத் தொழிலர் என்றுபொருள் படும்; அத்துடன்

(iv) ''ஆட்குறைப்பு'' என்பது கைத்தொழிற் பிணக்குகள் சட்டத்திலுள்ள அதே கருத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.''.

*3.* இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

## 1992 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பிரெற்றன் வூட்ஸ் உடன்படிக்கைகள் (திருத்தச்) சட்டம்

*[1992, மார்ச் மாதம் 19 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

**பிரெற்றன் வூட்ஸ் உடன்படிக்கைகள் சட்டத்தைத் திருத்துவதற் கானதொரு சட்டம்**

சர்வதேச நாணய நிதியத்தின் ஓர் உறுப்பு நாடாக இலங்கை இருக்கின்ற தாதலாலும் அத்துடன் அந்நிதியத்தின் மூல உடன்படிக்கை உறுப்புரைகளின் வாசகமானது, இலங்கை அத்தகைய நிதியத்தின் ஓர் உறுப்பு நாடாவதை இயலச் செய்த பிரெற்றன் வூட்ஸ் உடன்படிக்கைகள் சட்டத்தை நிறைவேற்று முன், பாராளுமன்றத்தின் முன் சமர்ப்பிக்கப்பட்டதாதலாலும்;

நிதியத்தின் ஆளுநர் சபை அத்தகைய உடன்படிக்கை உறுப்புரைகளின் XXVIII ஆம் உறுப்புரையைப் பின்பற்றி, 1990 யூன் 20 ஆம் தேதி நடை பெற்ற அத்தகைய ஆளுநர் சபையின் கூட்டமொன்றில் நிறைவேற்றப்பட்ட தீர்மானமொன்றினால் அத்தகைய உடன்படிக்கை உறுப்புரைகளுக்கான உத்தேச மூன்றாம் திருத்தத்தை (இந்த முன்னுரையில் ''உத்தேச திருத்தம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) அங்கீகரித்துள்ளதாதலாலும்;

''உத்தேச திருத்தத்திற்கான வாசகம் 1991, ஒக்டோபர் 11 ஆந் தேதி யன்று பாராளுமன்றத்தின் முன் சமர்ப்பிக்கப்பட்டதாதலாலும்;

இலங்கை அரசாங்கம் உத்தேசத் திருத்தத்தை ஏற்றுக் கொண்டுள்ளதாத லாலும்;

அம்முடிவிற்குப் பூரண வலுவும் பயனும் கொடுப்பதற்குப் பிரெற்றன் வூட்ஸ் உடன்படிக்கைகள் சட்டத்தைத் திருத்துவது அவசியமாகின்றது, ஆத லாலும்;

எனவே, தற்போது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளு மன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:—

1. இச்சட்டம் 1992 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பிரெற்றன் வூட்ஸ் உடன்படிக்கைகள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம் என்ப துடன் அமைச்சர் சர்வதேச நாணய நிதியத்தின் உடன்படிக்கை உறுப்புரைகளுக் கான மூன்றாம் திருத்தம் இலங்கை தொடர்பில் வலுவுக்கு வரும் தேதியாகக் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் சான்றுப்படுத்துகின்றவாறான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

2. பிரெற்றன் வூட்ஸ் உடன்படிக்கைகள் சட்டத்தின் 10 ஆம் பிரிவு ''நிதிய உடன்படிக்கை'' என்பதன் வரைவிலக்கணத்தை நீக்கஞ்செய்து அதற்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப் படுகின்றது:—

''நிதிய உடன்படிக்கை'' என்பது ஆரம்பத்தில் ஏற்றுங்கீகரிக்கப்படாத வாறானதும்—

(அ) எய்தப்பெறும் சிறப்புரிமைகளின் அடிப்படையில் வசதியொன்றை ஏற்படுத்துவதற்கும் (இத்திருத்தத்தின் வாசகம் 1968 நவம்பர் 23 ஆம் தேதியன்று பிரதிநிதிகள் சபையின் முன்னிலையில் சமர்ப்பிக்கப்பட்டது); அத்துடன்

(ஆ) புதிய சர்வதேச நாணய முறைமையொன்றைத் தாபிப்பதற்கும் (இத்திருத்தம் 1978 ஏப்பிரில் 4 ஆம் தேதியன்று தேசிய அரசுப் பேரவையின் முன்னிலையில் சமர்ப்பிக்கப்பட்ட நிதியத்தின் உடன்படிக்கை உறுப்புரைகளின் வாசகத்தில் சேர்க்கப்பட்டது); அத்துடன்

(இ) அத்தகைய உறுப்புரைகளின்கீழ் அதன் கடப்பாடுகளை நிறைவேற்றாத உறுப்பு நாடொன்றின் வாக்களிப்பையும், சார்புடைய உரிமைகளையும் இடைநிறுத்தம் செய்வதற்கான ஏற்பாடு செய்வதற்கும் (இத்திருத்தத்தின் வாசகம் 1991 ஒக்டோபர் 11 ஆம் தேதியன்று பாராளுமன்றத்தின் முன்னிலையில் சமர்ப்பிக்கப்பட்டது),

எனப் பின்னர் திருத்தப்பட்டவாறானதுமான சர்வதேச நாணய நிதியத்தின் உடன்படிக்கைகள் உறுப்புரைகள் என்று பொருள்படும்.''.

3. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கு இடையே ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

## 1992 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, நிதி (திருத்தச்) சட்டம்

*[1992, மார்ச் மாதம் 31 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

**1963 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

1. இச்சட்டமானது, 1992 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, நிதி (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

2. இதனகத்துப் பின்னர் ''முதன்மைச் சட்டவாக்கம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும் 1963 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 58 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது.

(1) அதன் (3) ஆம் உட்பிரிவை நீக்கஞ் செய்து, அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலமும்:—

''(3) எந்தச் சாதனத்தால் காணியின் கைமாற்றம் பயனுறுத்தப் பட்டதோ அந்தச் சாதனம் ஆவணப் பதிவுக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்கப் பதிவு செய்யப்படுவதற் கென முன்வைக்கப்படுவதற்கு முன்னர், வரிக்கு ஆளாகவுள்ள ஓர் ஆள், எந்த மாவட்டத்தில் கைமாற்றம் செய்யப்பட்ட காணி அமைந்துள்ளதோ அந்த மாவட்டக் காணிப் பதிவாள ருக்கு வரியைச் செலுத்துதல் வேண்டும்.''.

(2) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் ''அல்லது பங்குகள்'' என்னும் சொற்கள் காணப்படும் இடங்களிலெல்லாம் அச் சொற்களை நீக்கிவிடுவதன் மூலமும்;

(3) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியில் ''அல்லது ஏதேனும் கம்பனியிலுள்ள பங்குகள்'' என்னும் சொற்களை நீக்கி விடுவதன் மூலமும்; அத்துடன்

(4) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் (ஈ), (உ) மற்றும் (ஊ) என்னும் பந்திகளை நீக்கஞ் செய்வதன்மூலம்.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 59 ஆம் பிரிவு ''விடயத்திற்கேற்ப அல்லது கம்பனி'' என்னும் சொற்களை நீக்கி விடுவதன்மூலம் இத்தால் திருத்தப் படுகின்றது.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 60 ஆம் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் (3) ஆம் உட்பிரிவுகளை நீக்கஞ் செய்வதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 62 ஆம் பிரிவு அப்பிரிவில் ''அல்லது ஒரு கம்பனி'' அத்துடன் ''அல்லது கம்பனி'' என்னும் சொற்கள் காணப்படும்

இடங்களில் எல்லாம் அச்சொற்களை நீக்கிவிடுவதன்மூலம் இத்தால் திருத்தப் படுகின்றது.

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 64 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கஞ்செய்வதன்மூலம், இத்தால் திருத்தப்படுகின்றது.

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 66 ஆம் பிரிவு, ''ஆதனம்'' என்பதன் வரைவிலக்கணத்தை நீக்கஞ் செய்வதன்மூலமும் அதற்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன்மூலமும் இத்தால் திருத்தப்படுகின்றது:—

'' ''ஆதனம்'' என்பது ஏதேனும் காணி என்று பொருளாகும்.''.

8. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை காணப்படும் விடயத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

# 1992 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வரி மன்னிப்பு (வீடமைப்பும் வர்த்தகக் கட்டிடங்களும்) சட்டம்

*[1992, மே மாதம் 27 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

**தங்களது இயைபான இலாபங்கள் மற்றும் வருமானங்கள் முழுவதையும் அல்லது அவற்றின் பாகத்தை, வீடுகளின் அல்லது வர்த்தகக் கட்டிடங்களின் நிர்மாணத்தில் அல்லது வர்த்தகக் கட்டிடங்களைப் புதுப்பித்தலில் அல்லது வீடுகளின் கொள்வனவில் பயன்படுத்தும் ஆட்கள் வருங்காலத்தில் வரிச் சட்டங்களுக்கு இணங்கியொழுகுவதை உறுதிப்படுத்தும் நோக்குடனும் இலங்கையின் வீடமைப்பு மூலநிதியத்தை அதிகரிக்கும் நோக்குடன் அத்தகைய ஆட்களுக்கு வரிச்சலுகையை ஏற்பாடு செய்வதற்கும்; அத்தகைய இலாபங்களையும் வருமானத்தையும் அத்தகைய நிர்மாணத்தின், புதுப்பித்தலின் அல்லது கொள்வனவின் நோக்கங்களுக்குப் பயன்படுத்தும் ஆட்களுக்கு அத்தகைய இலாபங்கள் மற்றும் வருமானம் தொடர்பிலான தவறுகளுக்காக வழக்குத் தொடுத்தல்களுக்கெதிராக நட்டோத்திரவாதம் செய்வதற்கு ஏற்பாடு செய்வதற்கும்; அத்துடன் அதனோடு தொடர்புடைய அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடுசெய்வதற்குமானதொரு சட்டம்.**

1. இச்சட்டம் 1992 ஆம் ஆண்டின் 30 இம் இலக்க, வரி மன்னிப்பு (வீடமைப்பும் வர்த்தகக் கட்டிடங்களும்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

2. (1) இச்சட்டம் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, அவரது இலாபங்கள் வருமானம் முழுவதையும் அல்லது அவற்றின் ஏதேனும் பாகத்தைக் குறிக்கும் ஏதேனும் பணத்தையுடையவரான எவரேனும் ஆளுக்கு ஏற்புடையதாதல் வேண்டும்.

(2) 1991 மார்ச் 31 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன் விடயத்திற்கேற்ப ஆளொருவருக்குச் சேர்ந்த, திரண்ட அல்லது அவரால் பெறப்பட்ட எவையேனும் இலாபங்களும் வருமானமும் தொடர்பில் அல்லது மொத்த விற்பனை வரவு தொடர்பில் உண்ணாட்டரசிறைச் சட்டத்தின்கீழ் அல்லது மொத்த விற்பனை வரவுச் சட்டத்தின்கீழ்ச் செலுத்தற்பாலதான ஏதேனும் வரியைத் தட்டிக் கழிப்பதாகச் சார்த்துரைக்கப்பட்ட அல்லது சந்தேகிக்கப்பட்ட அத்தகைய எந்த ஆள் தொடர்பாக 1991 ஒக்டோபர் 1 ஆம் தேதியன்று ஏதேனும் புலனாய்வு முடிவுறாதிருக்கின்றதோ அந்த ஆளுக்கு இச்சட்டம் ஏற்புடையதாக மாட்டாது.

(3) எந்த ஆளுக்கு (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகின்றனவோ அந்த ஆள் அல்லாதவரும், (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்படுபவருமான ஒவ்வோராளும் இச்சட்டத்தில் இதனகத்துப் பின்னர் ''இச்சட்டம் ஏற்புடைத்தாகும் ஆள்'' எனக் குறிப்பீடு செய்யப்படுதல் வேண்டும்.

3. (1) விடயத்திற்கு ஏற்றவாறு கீழ்க்காணும் (அ) என்னும் பந்தியில் அல்லது (ஆ) என்னும் பந்தியில் அல்லது (உ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட நிர்மாணத்திற்குரிய வரைபடம் அல்லது (ஊ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட புதுப்பித்தல் 1991 செத்தெம்பர் 30 ஆம் தேதியின் பின்னர் விடயத்திற்கேற்றவாறு தோதான உள்ளூரதிகார சபையால் அல்லது நகர அபிவிருத்தி அதிகார சபையால் அங்கீகரிக்கப்படுமிடத்து, இச்சட்டம் ஏற்

புடைத்தாகும் எவரேனும் ஆள், 1991 செத்தெம்பர் 30 ஆம் தேதியின் பின்னர் அவரது இயைபான இலாபங்கள், வருமானம் முழுவதையும் அல்லது அவற்றின் ஏதேனும் பாகத்தைப் பின்வரும் நோக்கங்களுள் ஏதேனுமொன்றுக்கு அல்லது பலவற்றிற்குப் பயன்படுத்தலாம்:—

(அ) அத்தகைய ஆளுக்குச் சொந்தமானதும் பரப்பளவில் ஒரு ஹெக்டேயரின் நாற்பதிலொரு பாகத்தை விஞ்சாததுமான காணியில் வீடொன்றை அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வீடுகளை அத்தகைய ஒவ்வொரு வீடும் நூற்றி இருபத்தைந்து சதுர மீட்டரை விஞ்சாத உட்புற தள இடப்பரப்புடையதாக (வெளிப்புறச் சுவர்களின் தடிப்பம் புறநீங்கலாக) நிர்மாணித்தல்;

(ஆ) அத்தகைய ஆளுக்குச் சொந்தமானதும் ஒவ்வொன்றும் நூற்றி இருபத்தைந்து சதுர மீட்டரை விஞ்சாத உட்புற தள இடப்பரப்பையுடையதுமான (வெளிப்புறச் சுவர்களின் தடிப்பம் புறநீங்கலாக) இரண்டு அல்லது அதற்குக் கூடுதலான வீடமைப்புக் கூறுகளைக் கொண்டதுமான கட்டிடமொன்றின் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட கட்டிடங்களின் நிர்மாணத்தின் நோக்கத்திற்காக நகர அபிவிருத்தி அதிகார சபையால் அங்கீகரிக்கப்பட்டவாறான அத்தகைய பரப்பளவுடையதுமான காணியில் அத்தகைய ஒவ்வொரு கட்டிடத்தையும் நிர்மாணித்தல்;

(இ) தகைமை பெற்ற ஆளொருவரால் நிர்மாணிக்கப்பட்டதும் (அ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டவாறானதுமான அத்தகைய ஏதேனும் வீட்டை அவருக்கான வதிவிடமொன்றாக இருப்பாட்சி கொள்வதற்கெனக் கொள்வனவு செய்தல்;

(ஈ) தகைமை பெற்ற ஆளொருவரால் நிர்மாணிக்கப்பட்ட கட்டிடமொன்றில் அடங்கியதும் (ஆ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டவாறானதுமான அத்தகைய ஏதேனும் வீடமைப்புக் கூறொன்றை அவருக்கான வதிவிடமொன்றாக இருப்பாட்சி கொள்வதற்கெனக் கொள்வனவு செய்தல்.

(உ) அத்தகைய ஆளுக்குச் சொந்தமானதும் வீதவரிகள் விதிக்கும் நோக்கங்களுக்காக வர்த்தக வளவொன்றாக மதிப்பீடு செய்யப்பட்ட கட்டிடமொன்றாக இருப்பதும், நிர்மாணிக்கப்படும் நோக்கங்களுக்காக நகர அபிவிருத்தி அதிகார சபையால் அங்கீகரிக்கப்பட்டவாறானதுமான காணியில் அத்தகைய கட்டிடமொன்றை ஐந்து மில்லியன் ரூபா செலவில் நிர்மாணித்தல்;

(ஊ) அத்தகைய ஆளுக்குச் சொந்தமானதும் வீத வரிகள் விதிக்கும் நோக்கங்களுக்காக வர்த்தக வளவொன்றாக மதிப்பீடு செய்யப்படும் கட்டிடமொன்றாக அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட கட்டிடங்களாக இருப்பதுமான, அத்தகைய கைவிடப்பட்ட கட்டிடமொன்றை ஐந்து மில்லியன் ரூபாவை விஞ்சாத செலவில் புதுப்பித்தல்.

பந்தி (ஊ) என்பதில் குறிப்பீடு செய்யப்படும் ஏதேனும் கட்டிடம் தொடர்பில் ''புதுப்பித்தல்'' என்னும் சொல்லமைப்பு, அத்தகைய கட்டிடத்தை மீளக் கட்டுதல், புனரமைப்பு செய்தல் அல்லது தரமுயர்த்துதல் என்று பொருள்படும்.

(2) இச்சட்டம் ஏற்புடைத்தாகின்றவரும் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் அல்லது (ஆ) என்னும் பந்தியில் அல்லது (உ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்படுகின்றவாறான அத்தகைய ஏதேனும் வீட்டை அல்லது கட்டிடத்தை நிர்மாணிக்கின்றவரும் அல்லது (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் அல்லது (ஆ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டவாறான அத்தகைய ஏதேனும் வீட்டை அல்லது வீடமைப்புக்கூறைக் கொள்வனவு செய்கின்றவரும் அல்லது (1) ஆம் உட்பிரிவின் (ஊ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்படுகின்றவாறான அத்தகைய ஏதேனும் கட்டிடத்தைப் புதுப்பிக்கின்றவரும் அத்துடன் விடயத்திற்கேற்றவாறு அத்தகைய வீட்டின், அத்தகைய வீடமைப்புக் கூறின் நிர்மாணத்தை அல்லது புதுப்பித்தலை அல்லது கொள்வனவை 1994 ஒற்றோபர் 1 ஆந் தேதிக்கு முன்னர் பூர்த்தி செய்கின்றவருமான ஆளொருவர், விடயத்திற்கேற்றவாறு அத்தகைய நிர்மாணம் அல்லது புதுப்பித்தல் பூர்த்தி செய்யப்பட்ட தேதியிலிருந்து அல்லது அத்தகைய கொள்வனவின் தேதியிலிருந்து தொண்ணூறு நாட்களுக்குள் ஆணையாளர் தலைமையதிபதிக்கு—

(அ) இச்சட்டத்திற்கான அட்டவணையில் தரப்பட்டுள்ள படிவத்தில் விடயத்திற்கேற்றவாறு அத்தகைய நிர்மாணத்தின், புதுப்பித்தலின் அல்லது கொள்வனவின் நோக்கத்திற்கு அவர் பயன்படுத்தியுள்ள இயைபான இலாபங்களினதும் வருமானத்தினதும் தொகையைத் தரும் வெளிப்படுத்துகையொன்றை;

(ஆ) விடயத்திற்கேற்றவாறு அத்தகைய நிர்மாணம், புதுப்பித்தல் அல்லது கொள்வனவு தொடர்பில் நகர அபிவிருத்தி அதிகார சபையால் அல்லது அதன் பொருட்டு நகர அபிவிருத்தி அதிகார சபையால் அதிகாரமளிக்கப்பட்ட பகிரங்க அலுவலரொருவரால் அல்லது உள்ளூரதிகார சபையொன்றின் அலுவலர் ஒருவரால் வழங்கப்பட்ட சான்றிதழொன்றை

கொடுத்துதவலாம்.

(3) இச்சட்டம் ஏற்புடையதாகின்றவரும் (2) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்படும் வெளிப்படுத்துகையையும் சான்றிதழையும் அவ்வுட்பிரிவில் குறிப்பீடு செய்யப்படும் காலப் பகுதிக்குள் ஆணையாளர் தலைமையதிபதிக்குக் கொடுத்துதவுகின்றவருமான ஆளொருவர் இச்சட்டத்தில் ''தகைமை பெற்ற ஆள்'' ஒருவர் எனக் குறிப்பீடு செய்யப்படுகின்றார்.

4. (1) நகர அபிவிருத்தி அதிகார சபை அல்லது அதன் பொருட்டு நகர அபிவிருத்தி அதிகார சபையால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் பகிரங்க அலுவலர் அல்லது உள்ளூரதிகார சபையொன்றின் அலுவலர் 3 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் அல்லது (ஆ) என்னும் பந்தியில் அல்லது (உ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டவாறான அத்தகைய ஏதேனும் வீட்டை அல்லது கட்டிடத்தை நிர்மாணித்துள்ள அல்லது 3 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் அல்லது (ஆ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டவாறான அத்தகைய வீட்டை அல்லது வீடமைப்புக் கூறைக் கொள்வனவு செய்துள்ள அல்லது 3 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஊ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்படுகின்றவாறான அத்தகைய ஏதேனும் கட்டிடத்தைப் புதுப்பித்துள்ள ஆளொருவரால் நகர அபிவிருத்தி அதிகார

சபைக்கு அதற்கென விண்ணப்பமொன்று செய்யப்படுவதன் மேல், அத்தகைய அதிகார சபை அல்லது பகிரங்க அலுவலர் அல்லது உள்ளூரதிகாரசபையொன்றின் அலுவலர்—

(அ) ஒரு வீட்டின் அல்லது கட்டிடத்தின் நிர்மாணத்தின் விடயத்தில் அத்தகைய வீடு அல்லது கட்டிடம் விடயத்திற்கு ஏற்றவாறு 3 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் அல்லது (ஆ) அல்லது (உ) என்னும் பந்தியில் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளுக்கு அமைவாயுள்ளது எனவும், அத்தகைய நிர்மாணத்திற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளதாக வெளிப்படுத்தப்பட்ட தொகை, நிலவும் கட்டிடச் செலவுகளைக் கருத்திற் கொள்ளும்போது மிதமிஞ்சியதல்ல எனவும்;

(ஆ) ஒரு வீட்டின் அல்லது வீடமைப்புக் கூறின் கொள்வனவு விடயத்தில், அத்தகைய வீடு அல்லது வீடமைப்புக் கூறு விடயத்திற்கு ஏற்றவாறு 3 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் அல்லது (ஆ) என்னும் பந்தியில் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளுக்கு அமைவாயுள்ளது எனவும், அத்தகைய கொள்வனவுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளதாக, வெளிப்படுத்தப்பட்ட தொகை, விடயத்திற்கேற்றவாறு அத்தகைய வீட்டின் அல்லது வீடமைப்புக் கூறின் கொள்வனவுத் தேதியன்றுள்ள சந்தைப் பெறுமதியை விஞ்சவில்லை எனவும்;

(இ) கட்டிடமொன்றின் புதுப்பித்தலின் விடயத்தில், அத்தகைய கட்டிடம் 3 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஊ) என்னும் பந்தியில் தரப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைவாயுள்ளது எனவும் அத்தகைய புதுப்பித்தலுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளதாக வெளிப்படுத்தப்பட்ட தொகை, நிலவும் கட்டிடச் செலவுகளைக் கருத்திற் கொள்ளும்போது மிதமிஞ்சியதல்ல எனவும்;

திருப்திப்படின் விடயத்திற்கேற்றவாறு அத்தகைய நிர்மாணம், கொள்வனவு அல்லது புதுப்பித்தல் தொடர்பில் சான்றிதழொன்றை வழங்குதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழ் வழங்கப்படும் சான்றிதழ் ஒவ்வொன்றும் பின்வரும் விவரங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:—

(அ) சான்றிதழுக்கு விண்ணப்பிக்கும் ஆளின் பெயர், முகவரி அத்துடன் தேசிய ஆளடையாள அட்டையின் அல்லது பதிவின் இலக்கம்;

(ஆ) விண்ணப்பம் தொடர்புறுத்தும் வீட்டை அல்லது கட்டிடத்தைக் கொள்வனவு செய்த தேதி அல்லது அதன் நிருமாணம் அல்லது புதுப்பித்தல் ஆரம்பிக்கப்பட்ட தேதியும், பூர்த்தி செய்யப்பட்ட தேதியும்;

(இ) அத்தகைய வீட்டின் அல்லது கட்டிடத்தின் உட்புறத் தள இடப் பரப்பும் (வெளிப்புறச் சுவர்களின் தடிப்பும் புற நீங்கலாக) அத்துடன் ஒன்றுக்கு மேற்பட்ட வீடமைப்புக் கூறினையுடைய கட்டிடமொன்றின் விடயத்தில் அத்தகைய கூறு ஒவ்வொன்றினதும் உட்புறத் தள இடப் பரப்பும் (வெளிப்புறச் சுவர்களின் தடிப்பும் புற நீங்கலாக);

(ஈ) அத்தகைய வீடு அல்லது கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டுள்ள காணியின் பரப்பளவு; அத்துடன் அத்தகைய பரப்பளவு நகர அபிவிருத்தி அதிகார சபையின் அங்கீகாரத்தைத் தேவைப்படுமிடத்து அத்தகைய அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதா என்பது;

(உ) அத்தகைய வீடு அல்லது கட்டிடம், வீத வரிகள் விதிப்பனவின் நோக்கத்திற்காக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதா என்பதும் அப்படியாயின், அத்தகைய வீடு அல்லது கட்டிடம் வதிவிட வளவுகளாகவா அல்லது வர்த்தக வளவுகளாகவா மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது என்பது;

(ஊ) அத்தகைய வீடு அல்லது கட்டிடம் நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் நகர அபிவிருத்தி இடப்பரப்பொன்றில் அமைந்துள்ளதா என்பது;

(எ) வீடொன்றின் அல்லது வீடமைப்புக் கூறொன்றின் கொள்வனவின் விடயத்தில், விற்பனையாளரின் பெயர், முகவரி, தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் என்பன;

(ஏ) விடயத்திற்கேற்றவாறு அத்தகைய நிர்மாணத்திற்கு, கொள்வனவிற்கு அல்லது புதுப்பித்தலுக்கு விண்ணப்பக்காரரால் பயன்படுத்தப்பட்டுள்ளதாக வெளிப்படுத்தப்பட்ட தொகை.

5. தகைமை பெற்ற ஆளெவரும்—

(அ) பின்வருவனவற்றைச் செலுத்துவதற்கு ஆளாதல் ஆகாது:—

(i) 1991 மார்ச் 31 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் முடிவடையும் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டிற்கு, 3 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்படும் நோக்கங்களுள் ஏதேனும் ஒன்றிற்கு அல்லது ஒன்றிற்கு மேற்பட்டவைக்கு அவரால் பயன்படுத்தப்பட்டதும், 4 ஆம் பிரிவின்கீழ் அத்தகைய நோக்கம் தொடர்பில் வழங்கப்பட்ட சான்றிதழில் குறித்துரைக்கப்பட்டதுமான தொகையைக் குறிக்கின்றதான அவரது இயைபான இலாபங்களின் அல்லது வருமானத்தின் அத்தகைய பாகம் தொடர்பில் முறையே உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் கீழ் அல்லது வருமானவரி மீதான மிகை வரிச் சட்டத்தின் கீழ்ச் செலுத்தற்பாலதான ஏதேனும் வருமானவரி அல்லது வருமான வரி மீதான மிகை வரி;

(ii) 1991 மார்ச் 31 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் முடிவடையும் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டிற்கு அவரது எந்த தேறிய செல்வத்தைக் கொள்வதற்கு (i) ஆம் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டவாறான அவரது இயைபான இலாபங்களினதும் வருமானத்தினதும் எத்தகைய பாகம் பயன்படுத்தப்பட்டிருந்ததோ அந்தப் பாகம் தொடர்பில் முறையே உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் கீழ் அல்லது செல்வ வரியின் மீதான

மிகைவரிச் சட்டத்தின் கீழ்ச் செலுத்தற்பாலதான ஏதேனும் செல்வவரி அல்லது செல்வவரி மீதான மிகை வரி;

(iii) 1991 மார்ச் 31 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் முடிவடையும் ஏதேனும் காலாண்டிற்கு, (i) ஆம் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்படுகின்றவாறான அவரது இயைபான இலாபங்களினதும் வருமானத்திலும் அத்தகைய பாகம் எந்த மொத்த விற்பனை வரவினின்று எழுந்ததோ அல்லது பெறப்பட்டதோ அந்த மொத்த விற்பனை வரவின் அத்தகைய பாகம் தொடர்பில் மொத்த விற்பனை வரவு வரிச் சட்டத்தின் கீழ்ச் செலுத்தற்பாலதான ஏதேனும் மொத்த விற்பனை வரவு வரி.

(ஆ) பின்வருவனவற்றின் கீழ் ஏதேனும் தவறுக்காக ஏதேனும் வழக்குத் தொடுப்பிற்கு அல்லது ஏதேனும் தண்டப் பணத்திற்கு ஆளாதல் ஆகாது:—

(i) 1991 மார்ச் 31 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் முடிவடையும் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டு தொடர்பில், (அ) என்னும் பந்தியின் (i) ஆம் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்படுகின்றவாறான அவரது இயைபான இலாபங்களின் அல்லது வருமானத்தின் அத்தகைய பாகம் தொடர்பில் அல்லது (அ) என்னும் பந்தியின் (ii) ஆம் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்படுகின்றவாறான அவரது தேறிய செல்வத்தின் அத்தகைய பாகம் தொடர்பில் அல்லது அது சம்பந்தமான உண்ணாட்டரசிறைச் சட்டம், வருமானவரி மீதான மிகைவரிச் சட்டம் அல்லது செல்வவரி மீதான மிகைவரிச் சட்டம்; அல்லது

(ii) 1991 மார்ச் 31 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் முடிவடையும் ஏதேனும் காலாண்டு தொடர்பில் (அ) என்னும் பந்தியின் (iii) ஆம் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்படுகின்றவாறான அவரது மொத்த விற்பனை வரவின் அத்தகைய பாகம் தொடர்பில் அல்லது அது சம்பந்தமான மொத்த விற்பனை வரவு வரிச் சட்டம்.

6. இச்சட்டத்தின் முற்போந்த ஏற்பாடுகளிலுள்ள எதுவும்—

(அ) (i) உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் அல்லது வருமானவரி மீதான மிகை வரிச் சட்டத்தின் அல்லது செல்வவரி மீதான மிகைவரிச் சட்டத்தின்; அல்லது

(ii) மொத்த விற்பனை வரவு வரிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் ஆக்கப்பட்ட மதிப்பீடு;

(ஆ) வேறு ஏதேனும் விடயம்.

அத்தகைய ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் முடிவானதும், இறுதியானதுமாகவுள்ளவிடத்து, மீளாய்வு செய்வதற்கு அதிகாரமளிப்பதாக வாசிக்கப்படுதலோ பொருள் கொள்ளப்படுதலோ ஆகாது.

7. வேறு ஏதேனும் சட்டத்தில் எது எவ்வாறிருப்பினும், உண்ணாட்டர சிறைச் சட்டத்தின் 30 ஆம் பிரிவின் நோக்கங்களுக்காக 3 ஆம் பிரிவின் (i) ஆம் உட்பிரிவினுள் குறிப்பீடு செய்யப்படும் நோக்கங்களுள் எவற்றிற்கும் அவரால் பயன்படுத்தப்பட்ட ஏதேனும் பணத் தொகை தொடர்பில் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டிற்கு எவரேனும் தகைமை பெற்ற ஆளுக்குக் கழிப்பனவு எதுவும் அனுமதிக்கப்படுதலாகாது.

8. (1) உண்ணாட்டரசிறைத் திணைக்களத்தின் அல்லது நகர அபிவிருத்தி அதிகார சபையின் அலுவலர் அல்லது ஊழியர் ஒவ்வொருவரும் இச்சட்டத்தின் கீழ் அவரது கடமைகளை நிறைவேற்றுகையிற் தவிர இச்சட்டத்தின் நிர்வாகத்தில் அவரது அறிவுக்கு எட்டக்கூடிய எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் இரகசியத் தைப் பேணுதலும் இரகசியத்தைப் பேணுதலில் உதவுதலும் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு முரணாகச் செயற்படும் உண் ணாட்டரசிறைத் திணைக்களத்தின் அல்லது நகர அபிவிருத்தி அதிகார சபையின் எவரேனும் அலுவலர் அல்லது ஊழியர் இச்சட்டத்தின் கீழ்த் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் நீதிவானொருவர் முன்னிலையில் சுருக்க முறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மீது ஐயாயிரம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கு ஆளாதலும் வேண்டும்.

(3) இப்பிரிவின் நோக்கங்களுக்காக—

(அ) எவரேனும் பகிரங்க அலுவலர்; அல்லது

(ஆ) உள்ளூரதிகாரசபையின் எவரேனும் அலுவலர்,

இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக நகர அபிவிருத்தி அதிகார சபைக்காகவும் அதன் சார்பிலும் செயல்படுவதற்கு நகர அபிவிருத்தி அதிகார சபையினால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொருவராகக் கருதப்படுதல் வேண்டும்.

9. இச்சட்டத்தின் சிங்கள் உரைக்கும் தமிழ் உரைக்குமிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

10. இச்சட்டத்தின் சந்தர்ப்பம் வேறு வகையாகத் தேவைப்படுத்தினாலன்றி—

''ஆணையாளர் தலைமையதிபதி'', ''உள்ளூரதிகார சபை'', ''இலாபங் களும் வருமானமும்'', ''வரி மதிப்பீட்டாண்டு'' என்னும் சொல் லமைப்புகள் முறைமை உண்ணாட்டரசிறைச் சட்டத்திலுள்ள பொருள்களைக் கொண்டிருத்தல் வேண்டும்;

''உண்ணாட்டரசிறைச் சட்டம்'' என்பது 1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டம் எனப் பொருள்படும்;

''ஆள்'' என்பது ஒரு கம்பனியையும் ஆட்களின் குழுவொன்றையும் பங் காண்மையொன்றையும் உள்ளடக்கும்;

''இயைபான இலாபங்களும் வருமானமும்'' என்பது எவரேனும் ஆள் தொடர்பில்—

(அ) 1991 ஏப்றில் 1 ஆம் தேதிக்கு முன் அத்தகைய ஆளுக்குக் கிடைத்து அல்லது திரண்ட அல்லது அவரால் பெறப்பட்ட எவையேனும் இலாபங்களும் வருமானமும் எனவும்; அத்துடன்

(ஆ) உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் கீழ் வருமான வரி அறவிடற் படற்பாலதான எவையேனும் இலாபங்களும் வருமானமும் எனவும்; அத்துடன்

(இ) எந்த இலாபங்களும் வருமானமும் தொடர்பில் அச்சட்டத்தின் கீழ் அத்தகைய ஆளினால் விவரத் திரட்டு எதுவும் கொடுத்துதவப்படாமலும் அச்சட்டத்தின் கீழ் அத்தகைய ஆளினால் கொடுத்துதவப்பட்ட ஏதேனும் விவரத் திரட்டில் வெளிப் படுத்தப்படாமலும் இருக்கிறதோ அந்த இலாபங்களும் வருமானமும் தொடர்பில் அச்சட்டத்தின் கீழ் வரி மதிப்பீடெதுவும் செய்யப்படாதிருக்கின்றதோ அந்த இலாபங்களும் வருமானமும் எனவும் பொருள்படும்;

''வருமானவரி மீதான மிகைவரிச் சட்டம்'' என்பது 1982 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க வருமானவரி மீதான மிகைவரிச் சட்டம் அல்லது 1984 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க வருமானவரி மீதான மிகைவரிச் சட்டம் அல்லது 1989 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க வருமானவரி மீதான மிகைவரிச் சட்டம் எனப் பொருள்படும்;

''செல்வவரி மீதான மிகைவரிச் சட்டம்'' என்பது 1982 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க செல்வவரி மீதான மிகைவரிச் சட்டம் அல்லது 1989 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க செல்வவரி மீதான மிகைவரிச் சட்டம் எனப் பொருள்படும்;

''மொத்த விற்பனை வரவு'' என்பது மொத்த விற்பனை வரவு வரிச் சட்டத்திலுள்ள அதே பொருளைக் கொண்டிருக்கும்;

''மொத்த விற்பனை வரவு வரிச் சட்டம்'' என்பது 1981 ஆம் ஆண்டின் 69 ஆம் இலக்க மொத்த விற்பனை வரவு வரிச் சட்டம் எனப் பொருள்படும்;

''நகர அபிவிருத்தி அதிகார சபை'' என்பது 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தால் தாபிக்கப்பட்ட நகர அபிவிருத்தி அதிகாரசபை என்று பொருள்படும்.

அட்டவணை [பிரிவு 3 (2) (அ)]

1992 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வரி மன்னிப்பு
(வீடமைப்பும் வர்த்தகக் கட்டிடங்களும்) சட்டம்
3 (2) (அ) என்னும் பிரிவின் கீழான வெளிப்படுத்துகை

வருமானவரிக் கோப்பு இல. (ஏதுமிருப்பின்) ....................

* தேசிய ஆளடையாள அட்டை இல. (தனியாள் எனின்) ..................

* பெயரும் பதிவிலக்கமும் (தனியாள் அல்லாத வேறு ஏதும் எனில்) ............
..........................................................

* தனியாள் எனில் ............................ என்னும் முகவரியைச் சேர்ந்த
(முகவரி)

திரு./திருமதி/செல்வி .......................... ஆகிய நான் ....................

* (தனியாள் அல்லாத வேறு ஏதும் எனில்) ................ (கம்பனியின்/
பங்காண்மையின்/ஆட்கள் குழுவின் பெயர்*) யைச் சேர்ந்த ..................
ஒருவரான திரு/திருமதி/செல்வி .............................. ஆகிய நான்
(முழுப் பெயர்)

* (அ) என்னால்/ .......................... ஆல் (கம்பெனியின் ...............
பங்காண்மை/ஆட்கள் குழுவின் பெயர்) நிர்மாணிக்கப்பட்ட வீடு/வீடமைப்புக் கூறுகளைக் கொண்ட கட்டிடம்.

* (ஆ) என்னால் கொள்வனவு செய்யப்பட்ட வீடு/வீடமைப்புக் கூறு/கட்டிடம்

* (இ) என்னால்/ ..................... கம்பெனியின்/பங்காண்மையின்/ஆட்கள் குழுவின் பெயர்

நிர்மாணிக்கப்பட்ட/புதுப்பிக்கப்பட்ட வர்த்தகக் கட்டிடம் தொடர்பில் 1992 ஆம் ஆண்டின் 30 ......... ஆம் இலக்க வரிமன்னிப்பு (வீடமைப்பும் வர்த்தகக் கட்டிடங்களும்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் வழங்கப்பட்ட நகர அபிவிருத்தி அதிகார சபையிலிருந்து சான்றிதழொன்றை இத்துடன் சமர்ப்பிக்கிறேன். அத்துடன் அத்தகைய நிர்மாணத்திற்கு/கொள்வனவிற்கு/ புதுப்பித்தலுக்கு

நான், .................. (கம்பெனியின்/பங்காண்மையின்/ஆட்கள் குழுவின்/ தனியாட்களின் பெயர்) சொல்லப்பட்ட சட்டத்திலுள்ள சொல்லமைப்பின் கருத்தெல்லைக்குள்

* எனது இயைபான இலாபங்களிலும் வருமானத்திலுமிருந்து ..................
(கம்பெனியின்/பங்காண்மையின்/ஆட்கள் குழுவின் பெயர்) உடைய இயை
பான இலாபங்களிலும் வருமானத்திலுமிருந்து ரூபா ............. பணத்
(சொற்களில்)
தொகையொன்றைப் பயன்படுத்தியும் உள்ளேன்/பயன்படுத்தியுள்ளது எனவும்

* அத்தகைய வீட்டை/வீட்டமைப்புக்கூறை எனது வதிவிடமாக இருப்பாட்சிக் கொள்வேன் எனவும் எனக்கு/ ........................ (கம்பெனியின்/பங்காண்மையின்/ஆட்கள் குழுவின் பெயர்)

என்னால்— .................... (கம்பெனியின்/பங்காண்மையின்/ஆட்கள் குழுவின் பெயர்)* ஆல் உள்ளவாறு பயன்படுத்தப்பட்ட ரூபா ................
(சொற்களில்)

ரூபா .................... (இலக்கத்தில்)

தொடர்பில் சொல்லப்பட்ட சட்டத்தின் 5 ஆம் பிரிவில் தரப்பட்டுள்ள நட்டோத்தரவாதங்களை அளிக்குமாறு வேண்டுகின்றேன்.

............................
ஒப்பம்

....................................
தேதி

* பொருத்தமற்றதை நீக்கி விடவும்.

# 1992 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, மொத்த விற்பனை வரவு வரி (திருத்தச்) சட்டம்

*[1992, மே மாதம் 27 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

**1981 ஆம் ஆண்டின் 69 ஆம் இலக்க, மொத்த விற்பனை வரவு வரிச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.**

1. இச்சட்டம் 1992 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, மொத்த விற்பனை வரவு வரி (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

2. 1981 ஆம் ஆண்டின் 69 ஆம் இலக்க, மொத்த விற்பனை வரவு வரிச் சட்டத்தின் 48 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன், இது அச்சட்டத்தின் 48அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:—

''எந்திரத் தொகுதி அல்லது சாதனம் மீது செலுத்தப்பட்ட மொத்த விற்பனை வரவு வரி உற்பத்தியாளரால் கழிக்கப்படுதல்.

48அ. (1) பதிவுபெற்ற எவரேனும் உற்பத்தியாளர், (இவர் இப்பிரிவில் இதனகத்துப் பின்னர் ''முதலாவதாகக் குறிப்பிடப்பட்ட உற்பத்தியாளர்'' எனக் குறிப்பீடு செய்யப்படுவார்) 1991 ஒற்றோபர் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் காலாண்டின்போது ஏதேனும் பொருளை உற்பத்தி செய்யும் அவரது தொழிலில் முதலாவதாகக் குறிப்பிடப்பட்ட உற்பத்தியாளரால் பயன்படுத்தப்பட்ட எந்திரத்தொகுதி அல்லது சாதனம் தொடர்பில்—

(i) மொத்த விற்பனை வரவு வரியை உள்ளடக்கும் ஏதேனும் பணத் தொகையை, அக்காலாண்டின்போது செய்து கொள்ளப்பட்ட ஏதேனும் கொடுக்கல் வாங்கல் தொடர்பில் வேறொரு பதிவுபெற்ற உற்பத்தியாளருக்கு (இவர் இதனகத்துப் பின்னர் இப்பிரிவில் ''இரண்டாவதாகக் குறிப்பிடப்பட்ட உற்பத்தியாளர்'' எனக் குறிப்பீடு செய்யப்படுவார்) செலுத்தியுள்ளவிடத்து, அல்லது

(ii) அக்காலாண்டின்போது, ஏதேனும் மொத்த விற்பனை வரவு வரியை 12 ஆம் பிரிவின் கீழ் சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதிக்குச் செலுத்தியுள்ளவிடத்து,

விடயத்திற்கேற்ப அவ்வாறு உள்ளடக்கப்பட்ட அல்லது அவ்வாறு செலுத்தப்பட்ட மொத்த விற்பனை வரவு வரி, 47 ஆம் பிரிவின் அல்லது 48 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் எப்படியிருப்பினும், அத்தகைய பொருளின் விற்பனையிலிருந்து எழுவதான அவரது விற்பனை வரவு தொடர்பில் முதலாவதாகக் குறிப்பிடப்பட்ட உற்பத்தியாளரினால் செலுத்தப்படற்பாலதான ஏதேனும் மொத்த விற்பனை வரியிலிருந்து அது அவ்வாறு கழிக்கப்படக் கூடிய அளவுக்குக் கழிக்கப்படுதல் வேண்டும்:

ஆயின்—

(அ) கழிக்கப்படும் தொகை அவ்வாறு உள்ளடக்கப்பட்ட அல்லது அவ்வாறு செலுத்தப்பட்ட மொத்த விற்பனை வரவு வரியின் ஐந்து சதவீதத்தை விஞ்சுதல் ஆகாது;

(ஆ) கழிவானது, (ஈ) என்னும் பந்தியின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, அத்தகைய உற்பத்திக்கு அத்தகைய எந்திரத்தொகுதி அல்லது சாதனம் பயன்படுத்தத் தொடங்கப்பட்ட காலாண்டை உடனடுத்து வரும் காலாண்டுக்கு அத்தகைய மொத்த விற்பனை வரவு தொடர்பில் செலுத்தப்படற்பாலதான மொத்த விற்பனை வரவு வரியிலிருந்து முதன் முதலிலும், பின்னர் அடுத்துப் பின்வரும் காலாண்டுக்கு அத்தகைய மொத்த விற்பனை வரவு தொடர்பில் செலுத்தப்படற்பாலதான மொத்த விற்பனை வரவு வரியிலிருந்தும், அவ்வாறாகத் தொடர்ந்தும் செய்யப்படுதல் வேண்டும்;

(இ) அவ்வாறு உள்ளடக்கப்பட்ட அல்லது அவ்வாறு செலுத்தப்பட்ட மொத்த விற்பனை வரவு வரிக் கழிவானது—

(i) அத்தகைய மொத்த விற்பனை வரவுவரி, விலக்கப்பட்ட பொருட்களை உற்பத்தி செய்யும், ஏதேனும் தொழிலில் அல்லது 4 ஆம் பிரிவின் கீழ் மொத்த விற்பனை வரவு வரியிலிருந்து விலக்களிக்கப்பட்ட ஏதேனும் தொழிலில் பயன்படுத்தப்படும் எந்திரத் தொகுதி அல்லது சாதனம் தொடர்பில்;

(ii) விடயத்திற்கேற்ப அவ்வாறு செலுத்தப்பட்ட அத்தகைய பணத் தொகை தொடர்பில் அல்லது அவ்வாறு செலுத்தப்பட்ட மொத்த விற்பனை வரவு வரி தொடர்பில் 46 (2) ஆம் பிரிவினால் தேவைப்படுத்தப்பட்டவாறு இரண்டாவதாகக் குறிப்பிடப்பட்ட உற்பத்தியாளரிடமிருந்து உறுதிச் சீட்டொன்றை அல்லது சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதியிடமிருந்து உறுதிச்சீட்டொன்றைப் பெற்றிருந்தாலேயொழிய,

(iii) அத்தகைய எந்திரத் தொகுதியினை அல்லது சாதனத்தினை அத்தகைய தொழிலில் பயன்படுத்தல் ஏதேனும் காலாண்டில் இல்லாதொழி

யின் அத்தகைய காலாண்டுக்கு, அத்தகைய, மொத்த விற்பனை வரவு வரி தொடர்பில் செலுத்தப்படற் பாலதான மொத்த விற்பனை வரவு வரியிலிருந்து,

செய்யப்படுதலாகாது.

(ஈ) விடயத்திற்கேற்பப் பதிவுபெற்ற உற்பத்தியாளர் ஒருவராக அவரது பதிவு செய்யப்படுவதற்கு முன்னர் எவரேனும் ஆளினால் அவ்வாறு உள்ளடக்கப்பட்ட அல்லது அவ்வாறு செலுத்தப்பட்ட ஏதேனும் மொத்த விற்பனை வரி, அத்தகைய ஆள் மொத்த விற்பனை வரவு வரிக்குப் பொறுப்புடையவராக வந்த காலாண்டுக்குச் செலுத்தப்படற்பாலதான அத்தகைய மொத்த விற்பனை வரவு தொடர்பிலான மொத்த விற்பனை வரவு வரியிலிருந்து முதன் முதலிலும் பின்னர் அடுத்துவரும் காலாண்டுக்குச் செலுத்தப் படற்பாலதான அத்தகைய மொத்த விற்பனை வரவு தொடர்பிலான மொத்த விற்பனை வரவு வரியிலிருந்தும், அவ்வாறாகத் தொடர்ந்தும் கழிக்கப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட மொத்த விற்பனை வரவு தொடர்பிலான மொத்த விற்பனை வரவு வரியிலிருந்து அது கழிக்கப்பட்ட பின்னர், (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்கக் கழிக்கப்படற்பாலதான மொத்த விற்பனை வரவு வரியின் மீதியானது, கழிவு முதன் முதலானதாக எக்காலாண்டுக்குச் செய்யப்பட்டதோ அக்காலாண்டிலிருந்து கணிக்கப்படும் ஒவ்வொரு இருபது காலாண்டுகளுக்கும், 49 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய, மீளளிக்கப்படுதல் வேண்டும்;

ஆயின், (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட எந்திரத் தொகுதி அல்லது சாதனம் இவ்வுட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஒவ்வோர் இருபது ஆண்டுகளிலும், (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட உற்பத்தித் தொழிலில் பயன்படுத்தப் பட்டிருந்தாலேயொழிய, மீளளிப்பு எதுவும் செய்யப்படுதல் ஆகாது.''.

3. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கு இடையே ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

# 1992 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க, வருமானவரி மீதான மிகைவரி (திருத்தச்) சட்டம்

*[1992, மே மாதம் 27 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

**1989 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, வருமானவரி மீதான மிகைவரிச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.**

1. இச்சட்டம், 1992 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க, வருமானவரி மீதான மிகைவரி (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

2. (இதனகத்துப் பின்னர் ''முதன்மைச் சட்டவாக்கம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1989 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, வருமானவரி மீதான மிகைவரிச் சட்டத்திற்கான விரிவுப் பெயர் ''முறையே 1989 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்றும், 1990 எப்பிறில் 1 ஆம் தேதியன்றும், 1991 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்றும் தொடங்குகின்ற வரி மதிப்பீட்டாண்டுகளுக்காக'' என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, ''முறையே, 1989 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்றும், 1990 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்றும் 1991 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்றும், 1992 ஏப்பிறில் 1 ஆம் திகதியன்றும் தொடங்குகின்ற வரி மதிப்பீட்டாண்டுகளுக்காக'' என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 2 ஆம் பிரிவு, ''ஆனால் 1992 மார்ச்சு 31 ஆம் திகதிக்குப் பிந்தாமல் முடிவடைகின்ற'' என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, ''ஆனால் 1993 மார்ச்சு 31 ஆம் தேதிக்குப் பிந்தாமல் முடிவடைகின்ற'' என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) அப்பிரிவின் (ii) ஆம் பந்தியில் ''1990 நவெம்பர் 15 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னரும்; அத்துடன்'' என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, ''1990 நவெம்பர் 15 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னரும்;'' என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும்;

(2) அப்பிரிவின் (iii) ஆம் பந்தியில் ''1991 ஆம் ஆண்டு நவெம்பர் 15 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னரும்'' என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, ''1991 ஆம் ஆண்டு நவெம்பர் 15 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னரும்; அத்துடன்'' என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும்;

(3) அப்பிரிவின் (iv) ஆம் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்தியைச் சேர்ப்பதன்மூலமும்:—

''(iv) 1992 ஆம் ஆண்டு ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று தொடங்குகின்ற இயைபான ஆண்டுக்கு அவராற் செலுத்தப்படற்பாலதான மிகைவரித் தொகையின்—

(அ) ஐம்பது சதவீதத்திற்குக் குறையாத தொகையை 1992 ஒகத்து 15 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர்; அத்துடன்

(ஆ) மிகுதியை 1992 நவெம்பர் 15 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னரும்.''.

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) அப்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் ''ஊதியத்திலிருந்து ஏழரை சதவீதத்தையும்; அத்துடன்'' என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, ''ஊதியத்திலிருந்து ஏழரை சதவீதத்தையும்;'' என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன்மூலமும்;

(2) அப்பிரிவின் (இ) என்னும் பந்தியில் ''ஊதியத்திலிருந்து $7\frac{1}{2}$ சதவீதத்தையும்'' என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக ''ஊதியத்திலிருந்து ஏழரை சதவீதத்தையும்; அத்துடன்'' என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன்மூலமும்;

(3) அப்பிரிவின் (இ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன்மூலமும்:—

''(ஈ) 1992 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று தொடங்குகின்ற இயைபான ஆண்டுக்கு அந்த ஊழியரின் ஊதியத்திலிருந்து கழிக்கப்படற்பாலதான மொத்த வருமானவரியின்—

(i) அத்தகைய ஊழியருக்கு 1992 ஜூலை மாதத்திற்குக் கொடுபடற்பாலதான ஊதியத்திலிருந்து ஏழரை சதவீதத்தையும்; அத்துடன்

(ii) அத்தகைய ஊழியருக்கு 1992 ஒற்றோபர் மாதத்திற்குக் கொடுபடற்பாலதான ஊதியத்திலிருந்து ஏழரை சதவீதத்தையும்;''.

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவு அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் அவ்வுட்பிரிவிற்கான காப்பு வாசகத்தின் (ii) ஆம் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:—

''(ii) இச்சட்டத்தின்கீழ் இயைபான ஆண்டொன்றுக்கு மிகைவரி செலுத்துவதற்கு ஆளாகின்றவரான எவரேனும் ஆள்—

(அ) 1989 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று தொடங்குகின்ற இயைபான ஆண்டுக்கு, 1988 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று

தொடங்குகின்ற வரி மதிப்பீட்டு ஆண்டுக்கு உண்ணாட்டர சிறைச் சட்டத்தின் கீழ் அவரால் செலுத்தப்படற்பாலதான வருமானவரியின்;

(i) ஏழரைச் சதவீதத்திற்குக் குறையாத தொகையை 1989 ஆகஸ்ட் 15 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர்; அத்துடன்

(ii) ஏழரைச் சதவீதத்திற்குக் குறையாத தொகையை 1989 நவெம்பர் 15 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர்;

(ஆ) 1990 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று தொடங்குகின்ற இயைபான ஆண்டுக்கு, 1989 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று தொடங்கும் வரி மதிப்பீட்டு ஆண்டிற்கு உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் கீழ் அவரால் செலுத்தப்படற்பாலதான வருமான வரியின்;

(i) ஏழரைச் சதவீதத்திற்குக் குறையாத தொகையை 1990 ஆகஸ்ட் 15 ஆந் தேதியன்று அல்லது அதற்கு முன்னர்; அத்துடன்

(ii) ஏழரைச் சதவீதத்திற்குக் குறையாத தொகையை 1990 நவெம்பர் 15 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர்;

(இ) 1991 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று தொடங்குகின்ற இயைபான ஆண்டுக்கு, 1990 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று தொடங்குகின்ற வரி மதிப்பீட்டு ஆண்டிற்கு உண்ணாட்டர சிறைச் சட்டத்தின் கீழ் அவரால் செலுத்தப்படற்பாலதான வருமானவரியில்;

(i) ஏழரைச் சதவீதத்திற்குக் குறையாத தொகையை 1991 ஆகஸ்ட் 15 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர்; அத்துடன்

(ii) ஏழரைச் சதவீதத்திற்குக் குறையாத தொகையை 1991 நவெம்பர் 15 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர்; அத்துடன்

(ஈ) 1992 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று தொடங்குகின்ற இயைபான ஆண்டுக்கு, 1991 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று தொடங்குகின்ற வரி மதிப்பீட்டாண்டிற்கு உண்ணாட்டர சிறைச் சட்டத்தின் கீழ் அவரால் செலுத்தப்படற்பாலதான வருமானவரியின்;—

(i) ஏழரைச் சதவீதத்திற்குக் குறையாத தொகையை 1992 ஆகஸ்ட் 15 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர்; அத்துடன்

(ii) ஏழரைச் சதவீதத்திற்குக் குறையாத தொகையை 1992 நவெம்பர் 15 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர்;

மிகை வரியாகச் செலுத்துகின்றவிடத்து, அத்தகைய ஆள்—

1989 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று தொடங்குகின்ற இயைபான ஆண்டின் விடயத்தில் 1990 நவெம்பர் 30 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர்;

1990 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று தொடங்குகின்ற இயைபான ஆண்டின் விடயத்தில் 1991 நவெம்பர் 30 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர்;

1991 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று தொடங்குகின்ற இயைபான ஆண்டின் விடயத்தில் 1992 நவெம்பர் 30 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர்;

1992 ஏப்பிறில் 1 ஆந் தேதியன்று தொடங்குகின்ற இயைபான ஆண்டின் விடயத்தில் 1993 நவெம்பர் 30 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர்;

அத்தகைய ஆள் அந்த இயைபான ஆண்டுக்கு அவரால் செலுத்தற் பாலதான மிகை வரியின் மிகையை அவரால் செலுத்தப்பட்ட தொகைக்கு மேலாகச் செலுத்தினால் 3 ஆம் பிரிவின் கீழ்ச் செலுத்துவதற்கு அவர் தேவைப்படுத்தப்பட்ட கொடுப்பனவுகள் தொடர்பில் இப்பிரிவின் கீழ் ஏதேனும் தண்டப் பணம் செலுத்து வதற்காளாதல் ஆகாது.''.

7. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்கும் இடையே ஒவ் வாமை எதுவும் ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

# 1992 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, உள்ளூர் திறைசேரி உண்டியல்கள் (திருத்தச்) சட்டம்

*[1992, ஆகஸ்ட் மாதம் 07 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

## உள்ளூர் திறைசேரி உண்டியல்கள் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

*1.* இச்சட்டம், 1992 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, உள்ளூர் திறைசேரி உண்டியல்கள் (திருத்தச்) சட்டமென எடுத்துக் காட்டப்படலாம்.

*2.* (இதனகத்துப் பின்னர் ''முதன்மைச் சட்டவாக்கம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) உள்ளூர் திறைசேரி உண்டியல்கள் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் ''பணச் சபையினால் அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட மத்திய வங்கியின் அலுவலர் ஒருவரினால்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''மத்திய வங்கியின் அலுவலர் ஒருவரினால் அல்லது மத்திய வங்கியின் பணச் சபையினால் அதற்கென எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட வேறு அலுவலர் எவரினாலும்'' என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*3.* முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவு, ''அத்தகைய திறைசேரி உண்டியல்கள் வழங்கப்படுமுன் நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சர் நிர்ணயித்துத் தீர்மானிக்கின்றவாறு, ஆனால், வழங்கப்படும் தேதியிலிருந்து ஓராண்டுக்குப் பிந்தாமல்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''அத்தகைய திறைசேரி உண்டியல்கள் வழங்கப்படுமுன் நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சர் நிர்ணயித்துத் தீர்மானிக்கின்றவாறு'' என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*4.* இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையில் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

# 1992 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, பாதுகாப்பு அறவீட்டு (திருத்தச்) சட்டம்

[1992, ஆகஸ்ட் மாதம் 07 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

## 1991 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, பாதுகாப்பு அறவீட்டுச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

1. இச்சட்டம் 1992 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, பாதுகாப்பு அறவீட்டு (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

2. (இதனகத்துப் பின்னர் ''முதன்மைச் சட்டவாக்கம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1991 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, பாதுகாப்பு அறவீட்டுச் சட்டத்தின் 3 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் ''இச்சட்டம் ஏற்புடைத்தாகும் ஒவ்வோராளிடமிருந்தும்'' என்பதிலிருந்து அந்த உட்பிரிவின் இறுதி வரையிலுள்ள எல்லாச் சொற்களுக்கும் இலக்கத்துக்கும் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:—

''அந்தக் காலாண்டிற்கான அந்த ஆளின் (மொத்த விற்பனை வரவு வரிச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் கருத்தெல்லைக்குள்) மொத்த விற்பனை வரவின் மீது இச்சட்டத்திற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தோதான வீதங்களில் (இச் சட்டத்தில் இதனகத்துப் பின்னர் ''அறவீடு'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) பாதுகாப்பு அறவீடு ஒன்று,'' அத்துடன்

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஆ), (இ) என்னும் பந்திகளை நீக்கிவிட்டு அவற்றிற்குப் பதிலாகப் பின்வரும் பந்திகளை இடுவதன் மூலம்:—

''(ஆ) அத்தகைய ஆளினால் ஏற்றுமதிக்கான ஏதேனும் பொருளின் உற்பத்தியில் பிரத்தியேகமாகப் பயன்படுத்துவதற்கென அத்தகைய ஆளினால் இறக்குமதி செய்யப்படும் பொறித்தொகுதி இயந்திரத் தொகுதி அல்லது பொருத்திகள் அல்லாத ஏதேனும் பொருளின் பெறுமதி;

(இ) ஏதேனும் பொருளை இறக்குமதி செய்யும் ஆளினால் இலங்கைக்கு வெளியே உற்பத்தி செய்யப்பட்ட அத்தகைய பொருளின் விற்பனையிலிருந்து வரும் வருவாய்கள்; அத்துடன்

(ஈ) (i) ஏதேனும் பொருளின் ஏற்றுமதி தொடர்பில் இலங்கையில் உள்ள ஏதேனும் வங்கியில் திறக்கப்பட்ட நாணயப் பத்திரமொன்று அல்லது அத்தகைய பொருள் உண்மையிலேயே இலங்கையில் இருந்து ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது என வேறு ஆவணச் சான்று முன் வைக்கப்படு

வதன் மீது ஆணையாளர் தலைமையதிபதி திருப்தியுறு வாராயின்; அத்துடன்

(ii) அப்பொருளின் ஏற்றுமதியினின்று வெளிநாட்டு நாணயத் திலான வருவாய்களின் பெறுகைகளாவன, அத்தகைய பெறுகைகள் இலங்கையிலுள்ள எந்த வங்கிக்கு அனுப்பப் பட்டுள்ளனவோ அந்த வங்கியொன்றினால் அத்தாட்சிப் படுத்தப்பட்டின்,

எவரேனும் ஏற்றுமதியாளருக்கு அத்தகைய பொருளின் விற்பனையி லிருந்து வரும் வருவாய்கள்;''.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவு, அப்பிரிவின் (அ), (ஆ), (இ) என்னும் பந்திகளை நீக்கிவிட்டு அவற்றிற்குப் பதிலாகப் பின்வரும் பந்திகளை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:—

''(அ) 1992 சனவரி 1 ஆம் தேதியன்று தொடங்கும் காலாண் டிற்கு—

(i) அக்காலாண்டின் முதலாவது மாதத்திற்கான அந்த ஆளின் மொத்த விற்பனை வரவின் ஒரு நூற்று வீதத்திற் குச் சமமான ஒரு தொகை அக்காலாண்டின் இரண்டாம் மாதத்தின் பதினைந்தாம் நாளன்று அல்லது அதற்கு முன்னர்;

(ii) அக்காலாண்டின் இரண்டாம் மாதத்திற்கான அந்த ஆளின் மொத்த விற்பனை வரவின் ஒரு நூற்றுவீதத்திற் குச் சமமான ஒரு தொகை அக்காலாண்டின் மூன்றாம் மாதத்தின் பதினைந்தாம் நாளன்று அல்லது அதற்கு முன்னர்;

(iii) அக்காலாண்டிற்கு, அத்தகைய ஆளினால் செலுத்தப் படற்பாலதான அறவீட்டுத் தொகை, இப்பந்தியின் (i) ஆம் உட்பந்தியினதும் (ii) ஆம் உட்பந்தியினதும் ஏற் பாடுகளுக்கிணங்க அவரால் செலுத்தப்பட்ட தொகை களின் கூட்டு மொத்தத்தால் குறைக்கப்பட்டு, அக்காலா ண்டின் இறுதியை உடனடுத்துவரும் மாதத்தின் பதினை ந்தாம் நாளன்று அல்லது அதற்கு முன்னர்;

(ஆ) 1992 ஏப்ரல் 1 ஆம் தேதியன்று தொடங்கும் காலாண் டிற்கு—

(i) அக்காலாண்டின் முதலாம் மாதத்திற்கான அந்த ஆளின் மொத்த விற்பனை வரவின் ஒரு நூற்றுவீதத்திற்குச் சம மான ஒரு தொகை, அக்காலாண்டின் இரண்டாம் மாதத் தின் பதினைந்தாம் நாளன்று அல்லது அதற்கு முன்னர்;

(ii) அக்காலாண்டின் இரண்டாம் மாதத்திற்கான அந்த ஆளின் மொத்த விற்பனை வரவின் மூன்று நூற்றுவீதத்திற்குச் சமமான ஒரு தொகை, அக்காலாண்டின் மூன்றாம் மாதத்தின் பதினைந்தாம் நாளன்று அல்லது அதற்கு முன்னர்;

(iii) அக்காலாண்டிற்கு அத்தகைய ஆளினால் செலுத்தப்படற்பாலதான அறவீட்டுத் தொகை, இப்பந்தியின் (i) ஆம் உட்பந்தியினதும் (ii) ஆம் உட்பந்தியினதும் ஏற்பாடுகளுக்கிணங்க அவரால் செலுத்தப்பட்ட தொகைகளின் கூட்டு மொத்தத்தால் குறைக்கப்பட்டு, அக்காலாண்டின் இறுதியை உடனடுத்துவரும் மாதத்தின் பதினைந்தாம் நாளன்று அல்லது அதற்கு முன்னர்; அத்துடன்

(இ) 1992 யூலை 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஒவ்வொரு காலாண்டிற்கும்—

(i) அக்காலாண்டின் முதலாம் மாதத்திற்கான அந்த ஆளின் மொத்த விற்பனை வரவின் மூன்று வீதத்திற்குச் சமமான ஒரு தொகை அக்காலாண்டின் இரண்டாம் மாதத்தின் பதினைந்தாம் நாளன்று அல்லது அதற்கு முன்னர்;

(ii) அக்காலாண்டின் இரண்டாம் மாதத்திற்கான அந்த ஆளின் மொத்த விற்பனை வரவின் மூன்று நூற்றுவீதத்திற்குச் சமமான ஒரு தொகை அக்காலாண்டின் மூன்றாம் மாதத்தின் பதினைந்தாம் நாளன்று அல்லது அதற்கு முன்னர்; அத்துடன்

(iii) அக்காலாண்டிற்கு அத்தகைய ஆளினால் செலுத்தப்படற்பாலதான அறவீட்டுத் தொகை, இப்பந்தியின் (i) ஆம் உட்பந்தியினதும் (ii) ஆம் உட்பந்தியினதும் ஏற்பாடுகளுக்கிணங்க அவரால் செலுத்தப்பட்ட தொகைகளின் கூட்டு மொத்தத்தால் குறைக்கப்பட்டு, அக்காலாண்டின் இறுதியை உடனடுத்துவரும் மாதத்தின் பதினைந்தாம் நாளன்று அல்லது அதற்கு முன்னர்.''.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவு, அப்பிரிவின் (i) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:—

''(அ) இயைபான ஒரு காலாண்டின் ஏதேனும் மாதத்தில் அது ஏதேனும் நாணயப் பத்திரத்தைத் திறக்கும் நேரத்தில் அதன் பொருட்டு ஏதேனும் பொருளின் இறக்குமதியாளரொருவராக இச்சட்டம் ஏற்புடைத்தாகும் எவரேனும் ஆளினால் செய்யப்படும் விண்ணப்பமொன்றின்மீது—

(i) அத்தகைய நாணயப் பத்திரம் இப்பந்தி வலுவுக்கு வரும் தேதிக்கு முன்னர் திறக்கப்படுமிடத்து, அந்த நாணயப் பத்திரத்தின் பெறுமதியின் ஒரு நூற்றுவீதத்திற்கும்; அத்துடன்

(ii) அத்தகைய நாணயப் பத்திரம் இப்பந்தி வலுவுக்கு வரும் தேதியன்று அல்லது அதன் பின்னர் திறக்கப்படுமிடத்து, அத்தகைய நாணயப் பத்திரத்தின் பெறுமதியின் மூன்று நூற்றுவீதத்திற்கும்;

சமமான ஒரு தொகையை அத்தகைய ஆளிடமிருந்து திரட்டுதல் வேண்டும்; அத்துடன்,''.

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவு ''அந்த ஆளெவரும் பொறித்தொகுதி, இயந்திரத்தொகுதி அல்லது ஏதேனும் பொருள் தொடர்பிலான அறவீட்டினை'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''அந்த ஆளெவரும் அவரால் இறக்குமதி செய்யப்பட்ட அல்லது மொத்த விற்பனை வரவு வரிச் சட்டத்தின் கருத்துக்குட்பட்ட, பதிவு செய்யப்பட்ட உற்பத்தியாளர் ஒருவரிடமிருந்து அவரால் கொள்வனவு செய்யப்பட்ட (ஏதேனும் பொறித்தொகுதி, இயந்திரத்தொகுதி அல்லது பொருத்தி தவிர்ந்த) ஏதேனும் பொருள், ஒவ்வொரு விடயத்திலும் அத்தகைய உற்பத்தித் தொழிலில் பிரத்தியேகமாகப் பயன்படுத்தப்படும் பொருளொன்றாக இருக்குமிடத்து, அப்பொருள் தொடர்பிலான அறவீட்டினை'' என்னும் சொற்களைச் சேர்த்துக் கொள்வதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

6. பின்வரும் அட்டவணையானது முதன்மைச் சட்டவாக்கத்தின் இறுதியில் இத்தால் சேர்க்கப்படுகிறது என்பதுடன், அது முதன்மைச் சட்டவாக்கத்திற்கான அட்டவணையாகப் பயனுறுதலும் வேண்டும்:—

''அட்டவணை (பிரிவு 3)

காலாண்டு

1992 சனவரி 1 ஆம் தேதியன்று தொடங்கும் காலாண்டிற்கு ... ... ... 1 நூற்றுவீதம்

1992 ஏப்பிரில் 1 ஆம் தேதியன்று தொடங்கும் காலாண்டிற்கு ... ... ... 2.3 நூற்றுவீதம்

முறையே 1992 யூலை 1 ஆம் தேதியன்றும் 1992 ஒக்றோபர் 1 ஆம் தேதியன்றும் தொடங்கும் காலாண்டுகளுக்கு ... ... ... 3 நூற்றுவீதம்''

7. இச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவாலும் 5 ஆம் பிரிவாலும் முதன்மைச் சட்டவாக்கத்திற்கு ஆக்கப்பட்ட திருத்தங்கள் எல்லா நோக்கங்களுக்காகவும் 1992 யூலை 1 ஆம் தேதியன்று வலுவுக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

8. ஏதேனும் வங்கி, 1992 மே 15 ஆம் தேதியன்று தொடங்குவதும் இச்சட்டம் தொடங்கும் தேதியன்று முடிவடைவதுமான காலப் பகுதியின்போது பொருளொன்றின் இறக்குமதியாளரொருவரிடமிருந்து அவர் நாணயப் பத்திர மொன்றைத் திறப்பதன்மீது அத்தகைய நாணயப் பத்திரத்தின் பெறுமதியின் ஒரு நூற்றுவீதத்தை விஞ்சிய தொகையொன்றை ஆணையாளர் தலைமையதிபதிக்கு அனுப்புவதற்கெனத் திரட்டுமிடத்து, அத்தகைய திரட்டுதலானது எல்லா நோக்கங்களுக்காகவும் செல்லுபடியானதாக இருந்திருப்பதாகவும் அத்துடன் இருப்பதாகவும் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய வங்கியானது அத்தகைய திரட்டுதல் தொடர்பாகக் குடியியல் அல்லது குற்றவியல் வழக்குகள் எல்லாவற்றிற்கும் எதிராக இத்தால் நட்டோத்திரவாதமளிக்கப்படுகின்றது.

9. இச்சட்டம் ஏற்புடைத்தாகும் ஆளொருவர், இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு முன்னர் ஏதேனும் மாதம் அல்லது காலாண்டு தொடர்பில், விடயத்திற்கேற்ப அம்மாதத்திற்கு அல்லது காலாண்டிற்கான அந்த ஆளின் மொத்த விற்பனை வரவின் ஒரு நூற்றுவீதத்தை விஞ்சிய தொகையொன்றை ஆணையாளர் தலைமையதிபதிக்குச் செலுத்துமாறு, இச்சட்டத்தின் 3 ஆம் பிரிவில் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவால் தேவைப்படுத்தப்படுமிடத்து, அத்தகைய ஆள், இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள் இச்சட்டத்தின் 3 ஆம் பிரிவால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவால், விடயத்திற்கேற்ப அம்மாதத்திற்கு அல்லது காலாண்டிற்குச் செலுத்துமாறு அவர் தேவைப்படுத்தப்பட்ட தொகைக்கும், விடயத்திற்கேற்ப அந்த மாதத்திற்கு அல்லது காலாண்டிற்கு அவரால் செலுத்தப்பட்ட அல்லது அவரால் செலுத்தப்பட்டதாகக் கருதப்பட்ட தொகைக்கும் இடையிலான வித்தியாசத்தை ஆணையாளர் தலைமையதிபதிக்குச் செலுத்தினால், அத்தகைய ஆள் எல்லா நோக்கங்களுக்காகவும் அப்பிரிவின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகியிருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும். அத்தகைய வித்தியாசம் அவ்வாறு செலுத்தப்படாதவிடத்து, அத்தகைய வித்தியாசம், இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து முப்பது நாட்கள் கழிந்த பின்னர் தவணை தவறப்பட்டிருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய ஆள், அத்தேதியிலிருந்து முதன்மைச் சட்டவாக்கத்தின் கருத்தெல்லைக்குள் தவணை தவறிய ஒருவராகக் கருதப்படுதல் வேண்டும்.

10. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

# 1992 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, ஏற்றுமதிக் கமத்தொழில் ஊக்குவிப்புச் சட்டம்

*[1992, செப்ரெம்பர் மாதம் 22 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

**ஏற்றுமதிக் கமத்தொழில் ஊக்குவிப்புக்கும் சிறு ஏற்றுமதிப் பயிர்கள் திணைக் களத்தை ஏற்றுமதிக் கமத்தொழில் திணைக்களம் என மீளப் பெயரிடுவதற்கும் அத்துடன் அதனோடு தொடர்புடைய அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங் களுக்கு ஏற்பாடு செய்வதற்குமான ஒரு சட்டம்.**

1. இச்சட்டம் 1992 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, ஏற்றுமதிக் கமத் தொழில் ஊக்குவிப்புச் சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

2. அமைச்சரானவர், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம் இச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஏற்புடையதான ஏற்றுமதிக் கமத்தொழிற் பயிர்களை வெளிப்படுத்தலாம். இச்சட்டத்தின்கீழ் எந்த ஏற்றுமதிக் கமத்தொழிற் பயிர் தொடர்பில் கட்டளை ஒன்று ஆக்கப்பட்டதோ அந்த ஏற்றுமதிக் கமத்தொழிற் பயிர் இதனகத்துப் பின்னர் ''ஓர் அறிவிக்கப்பட்ட கமத்தொழிற் பயிர்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்.

3. (1) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக (இதனகத்துப் பின்னர் ''பணிப் பாளர்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) ஓர் ஏற்றுமதிக் கமத்தொழிற் பணிப் பாளர் அத்துடன் அவசியமாயிருக்கக் கூடியதுமான அத்தகைய எண்ணிக்கையி லான ஏற்றுமதிக் கமத்தொழிற் பிரதிப் பணிப்பாளர்கள் உதவிப் பணிப்பாளர்கள் அத்துடன் பிற அலுவலர்கள், பெயரைக் கொண்டு அல்லது பதவியைக் கொண்டு நியமிக்கப்படலாம்.

(2) எவரேனும் ஏற்றுமதிக் கமத்தொழிற் பிரதிப் பணிப்பாளரை அல்லது உதவிப் பணிப்பாளரை நியமிக்கும் செயலானது, அவர் முழு இலங்கைக்குமா அல்லது அதன் ஏதேனும் ஒரு பாகத்திற்கா நியமிக்கப்படுகிறார் என்பதைக் குறித்துரைத்தல் வேண்டும்.

(3) இச்சட்டத்தினை நிருவகிப்பதில் மேற்கூறப்பட்ட அலுவலர்களுக்கு உதவுவதற்காக, அவசியமாயிருக்கக்கூடியதான அத்தகைய எழுதுநர் அத்துடன் சிறு பதவியினர் நியமிக்கப்படலாம்.

4. (1) ஒவ்வொரு ஏற்றுமதிக் கமத்தொழிற் பிரதிப் பணிப்பாளரும், அல்லது உதவிப் பணிப்பாளரும் அவரது தத்துவங்களைப் பிரயோகிக்கையில், அவரது கடமைகளைப் புரிகையில் அல்லது அவரது பணிகளை நிறைவேற்றுகை யில் பணிப்பாளரின் பொதுப் பணிப்பிற்கும் கட்டுப்பாட்டிற்கும் அமைந்தவராதல் வேண்டும்.

(2) ஏற்றுமதிக் கமத்தொழிற் பிரதிப் பணிப்பாளர் ஒவ்வொருவரும் அல்லது உதவிப் பணிப்பாளர் ஒவ்வொருவரும் அல்லது உதவிப் பணிப்பாளரின் பொதுப் பணிப்பிற்கும் கட்டுப்பாட்டுக்கும் அமைவாக, அவர் எந்த இடப்பரப்புக்காக நியமிக்கப்பட்டாரோ அந்த இடப்பரப்பினுள் இச்சட்டத்தால் அல்லது இச் சட்டத்தின்கீழ்ப் பணிப்பாளர்களுக்கு அளிக்கப்பட்ட அல்லது அவர்மேல் சுமத்தப்

பட்ட அல்லது அவருக்குக் குறித்தொதுக்கப்பட்ட தத்துவங்கள், கடமைகள் அல்லது பணிகள் அனைத்தையும் அல்லது அவற்றில் எதையேனும் பிரயோகிக் கலாம், புரியலாம் அல்லது நிறைவேற்றலாம்.

5. (1) ஓர் ஏற்றுமதிக் கமத்தொழிற் பயிர் தொடர்பில் 2 ஆம் பிரிவின் கீழ் ஒரு கட்டளை ஆக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்று மாத காலம் முடிவுற்றதி லிருந்தும் அதற்குப் பின்னரும் அத்தகைய ஆள் இச்சட்டத்தின் நோக்கத்திற்காகப் பணிப்பாளருடன் பதிவு செய்யப்பட்டிருந்தாலன்றி ஆளெவரும்—

(அ) அத்தகைய பயிரைப் பதனிடுவதில் ஈடுபடுதல்; அல்லது

(ஆ) அப்பயிரை மூல வடிவில் அல்லது பதனிடப்பட்ட வடிவில், சுயமாகவோ அல்லது அத்தகைய பயிரின் தரகராகவோ அல்லது தரகுமுகவராகவோ மொத்தக் கொள்வனவில் அல்லது விற்பனையில் ஈடுபடுதல்; அல்லது

(இ) குறித்துரைக்கப்பட்ட தொகைக்கு மேல் அப்பயிரை மூலவடிவிலோ அல்லது பதனிடப்பட்ட வடிவிலோ அவரது உடைமையில் வைத்திருத் தல் அல்லது போக்குவரத்தில் கொண்டு செல்லல்;

கூடாது. பந்தி (இ) இன் நோக்கத்திற்காகத் தொகையைக் குறித்துரைக்கும் போது அத்தகைய பயிரின் பாவனையாளர்களது நியாயமான தேவைப்பாடு களைக் கவனத்தில் கொள்ளல் வேண்டும்.

(2) (அ) பதிவு செய்வதற்கான ஒரு விண்ணப்பம் குறித்துரைக்கப்பட்ட விதத்திலும் குறித்துரைக்கப்பட்ட படிவத்திலும் பணிப்பாளருக் குச் செய்யப்படல் வேண்டும் என்பதுடன் குறித்துரைக்கப்பட்ட கட்டணத்துடன் செய்யப்படுதலும் வேண்டும்;

(ஆ) இச்சட்டத்தின் கீழ்ப் பதிவு செய்யப்பட்ட ஒவ்வோர் ஆளுக்கும் பணிப்பாளரானவர், குறித்துரைக்கப்பட்ட படிவத்தில் பதிவுச் சான்றிதழ் ஒன்றை வழங்குதல் வேண்டும்.

6. பணிப்பாளரானவர், இச்சட்டத்தின்கீழ் அறிவிக்கப்பட்ட ஒரு கமத் தொழிற் பயிரின் பதனிடுபவராக, வாங்குபவராக, வைத்திருப்பவராக அல்லது விற்பவராகப் பதிவு செய்து கொண்ட எவரேனும் ஆளை—

(அ) குறித்துரைக்கப்பட்ட படிவத்தில் அத்தகைய பயிர் தொடர்பில் பதி வேடுகளைப் பேணும்படியும்; அத்துடன்

(ஆ) குறித்துரைக்கப்பட்ட கால இடைவெளிகளிலும் குறித்துரைக்கப்பட்ட படிவத்திலும் அத்தகைய பயிர் தொடர்பில் விபரத் திரட்டுகளைப் பணிப்பாளருக்குக் கொடுத்துதவும்படியும்,

தேவைப்படுத்தலாம்.

7. (1) இச்சட்டத்தின் கீழ்த் தனது தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கு அல்லது தனது பணிகளை நிறைவேற்றுவதற்கு அவசியமானதெனப் பணிப்பாளர் கருதக்கூடியதான அத்தகைய ஏதேனும் அறிந்து கோடலைக் கொடுத்துதவுமாறு

அல்லது அத்தகைய ஏதேனும் ஆவணத்தைக் காண்பிக்குமாறு அறிவித்தல் மூலம் எவரேனும் ஆளைப் பணிப்பாளர் தேவைப்படுத்தலாம் என்பதுடன், அத்தகைய அறிவித்தலைப் பெறும் எவரேனும் ஆளுக்கு அத்தகைய அறிவித்தலின் நியதிகளுக்கு இணங்கியொழுகுதல் கடமையாதலும் வேண்டும்;

ஆயின், எவ்வாறாயினும் அத்தகைய ஆளினால் அத்தகைய அறிந்து கோடலின் வெளிப்படுத்தல் அல்லது அத்தகைய ஆவணத்தின் காண்பித்தலானது சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டினால் தடை செய்யப்பட்டிருந்தால் இவ்வுட்பிரிவிலுள்ள எதுவும் அறிவித்தல் மூலம் ஏதேனும் அறிந்துகோடலைக் கொடுத்துதவுமாறு அல்லது ஏதேனும் ஆவணத்தைக் காண்பிக்குமாறு ஆள் எவரையும் பணிப்பாளர் தேவைப்படுத்துவதை இயலச் செய்யக்கூடியதாயுள்ளதென வாசிக்கப்படவோ, அத்துடன் பொருள் கொள்ளப்படவோ கூடாது.

(2) ஆறாம் பிரிவின் கீழ்க் கொடுத்துதவப்பட்ட ஒரு விபரத்திரட்டில் அடங்கியுள்ள அறிந்துகோடல் எதுவும் அல்லது இப்பிரிவின் கீழ் வழங்கப்பட்ட ஓர் அறிவித்தலின் நியதிகளுக்கு இணங்கியொழுகுவதில் கொடுத்துதவப்பட்ட அறிந்துகோடல் எதுவும் அல்லது காண்பிக்கப்பட்ட ஆவணத்தின் உள்ளடக்கம் எதுவும், பணிப்பாளரினால், விடயத்தைப் பொறுத்து அத்தகைய விபரத்திரட்டை அல்லது அறிந்துகோடலைக் கொடுத்துதவும் அல்லது அத்தகைய ஆவணத்தைக் காண்பிக்கும் ஆளின் சம்மதம் இல்லாமல் அல்லது பணிப்பாளர் அவரது பணிகளை நிறைவேற்றும் போதில் அல்லாமல் வெளியிடப்படுதலோ அல்லது வேறு எவரேனும் ஆளுக்குத் தெரிவிக்கப்படுதலோ ஆகாது.

8. பணிப்பாளர் அல்லது பணிப்பாளரின் எழுத்து மூலமான அதிகாரத்துடன் செயற்படும் எவரேனும் ஆள், இச்சட்டத்தின் நோக்கத்திற்காக ஏதேனும் அறிவிக்கப்பட்ட கமத்தொழிற் பயிர் பதனிடப்படும் அல்லது சேமித்து வைக்கப்படும் அல்லது ஏதேனும் ஏற்றுமதிக் கமத்தொழிற் பயிரைப் பயிரிடுவதற்குப் பொருத்தமானதாயிருக்கும் ஏதேனும் காணியுள் அல்லது கட்டிடத்தினுள் அல்லது அத்தகைய ஏதேனும் பயிரை ஏற்றிச் செல்லும் ஏதேனும் வாகனத்தினுள் உட்புகலாம் என்பதுடன், இச்சட்டத்தின் ஏற்பாடுகள் அல்லது அதன் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதி இணங்கியொழுகப்படுகின்றமையை அல்லது இச்சட்டத்தின்கீழ் கொடுத்துதவப்பட்ட ஏதேனும் விபரத் திரட்டில் அல்லது அறிந்துகோடலில் தரப்பட்டுள்ள ஏதேனும் கூற்றின் செம்மையை அல்லது ஏதேனும் ஏற்றுமதிக் கமத்தொழிற் பயிரைப் பயிரிடுவதற்கான அத்தகைய ஏதேனும் காணியின் பொருத்தமுடைமையை நிச்சயப்படுத்திக் கொள்வதற்கு அவசியமானதாயிருக்கக்கூடியவாறான அத்தகைய பரிசோதனைகளை, அளவீடுகளை அத்துடன் சோதனைகளை அதனகத்து மேற்கொள்ளலாம் அல்லது அதனகத்துக் காணப்படும் எவரேனும் ஆளிடம் அத்தகைய விசார்ணைகளை மேற்கொள்ளலாம்.

9. ஏற்றுமதிக் கமத்தொழிற் பயிர்கள் தொடர்பிலான ஆராய்ச்சி அத்துடன் பயிற்சியை நடாத்துவதற்குப் பணிப்பாளர் பொறுப்பானவராயிருக்க வேண்டுமென்பதுடன், ஏற்றுமதிக் கமத்தொழிற் திணைக்களமானது இத்தால் தேசிய கமத்தொழில் ஆராய்ச்சி நிறுவனம் ஒன்றெனப் பதவிப் பெயரிடப்படுகின்றது.

10. (1) தனது ஆராய்ச்சி அத்துடன் அபிவிருத்திப் பணிகளை ஏற்றுமதிக் கமத்தொழிற் திணைக்களம் நிறைவேற்றுவதை இயலச் செய்யும் நோக்கத்திற்காக இச்சட்டம் அல்லாத வேறு ஏதேனும் எழுத்துமூலமான சட்டத்தின் கீழ்ச் சுமத்தப்பட்ட ஏதேனும் வரி அல்லது ஏற்றுமதித் தீர்வைக்கு மேலதிகமாக, ஏற்றுமதிக் கமத்தொழில் ஆயவரி என அழைக்கப்படும் ஓர் ஆயவரி, அறிவிக்கப்பட்ட ஒவ்வொரு கமத்தொழிற் பயிர் தொடர்பிலும், நிதி என்ற விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அமைச்சரால் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையிலும் அத்தகைய தொகையிலும் சுமத்தப்பட்டு அறவிடப்படுதல் வேண்டும் என்பதுடன் செலுத்தப்படுதலும் வேண்டும்.

(2) இப்பிரிவால் சுமத்தப்பட்ட ஆயவரித் தொகையானது, அமைச்சரால் ஆக்கப்பட்டுக் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் வேறுபடுத்தப்படலாம் அல்லது அத்தகைய ஏதேனும் ஆயவரி இல்லாதொழிக்கப்படலாம்.

(3) இப்பிரிவின்கீழ் அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒவ்வொரு கட்டளையும் கசெற்றில் அது வெளியிடப்பட்டதன் பின் வசதியாகக் கூடியளவு விரைவாகப் பாராளுமன்றத்தின் முன் அங்கிகாரத்திற்காகக் கொண்டு வரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஏதேனும் அத்தகைய கட்டளையானது அதன் அங்கீகார மறுப்புத் தேதியிலிருந்து, அதன்கீழ் ஏற்கனவே செய்யப்பட்ட எதனினதும் செல்லுபடியாத் தன்மைக்குப் பங்கமின்றி இல்லாதொழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) இப்பிரிவு சுங்கக் கட்டளைச் சட்டத்தின் ஒரு பாகமாக உருவாகியுள்ளதாகப் பயனுறுதல் வேண்டும் என்பதுடன், அதற்கிணங்க அக்கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாதலும் வேண்டும்.

(5) இப்பிரிவின் கீழ் அறவிடப்பட்ட ஆயவரியினது வரும்படிகள் சுங்கப் பணிப்பாளர் தலைமை அதிபதியால், அதன் எப்பாகமும் திரட்டிய நிதியத்துக்கு வரவு வைக்கப்படாமல் பணிப்பாளரிடம் மாதாந்தம் செலுத்தப்படுதல் வேண்டும்.

11. அரச காணிகள் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 103 இன் கருத்தெல்லைக்குள் பணிப்பாளர் ஒரு ''விதித்துரைக்கப்பட்ட அலுவலர்'' எனக் கருதப்படுதல் வேண்டும்.

12. (அ) பிரிவு 5 இற்கு முரணான வகையில் ஏதேனும் ஏற்றுமதிக் கமத்தொழிற் பயிரைப் பதனிடும், உடைமையில் வைத்திருக்கும், ஏற்றிச் செல்லும், வாங்கும் அல்லது விற்கும்;

(ஆ) பிரிவு 6 அல்லது பிரிவு 7 இன் கீழ்ப் பணிப்பாளரால் அவ்வாறு செய்யுமாறு தேவைப்படுத்தப்படும் போது நியாயமான காரணம் இல்லாமல் எவையேனும் பதிவேடுகளைப் பேண அல்லது ஏதேனும் விபரத் திரட்டை அல்லது அறிந்துகோடலைக் கொடுத்துதவத் தவறும்;

(இ) பிரிவு 8 இன் கீழ் அவரது தத்துவங்களைப் பிரயோகிக்கையில் பணிப்பாளரை அல்லது அவருடைய எழுத்து மூலமான அதி

காரத்துடன் செயற்படும் எவரேனும் ஆளை எதிர்க்கும் அல்லது தடுக்கும்;

(ஈ) பிரிவு 6 இன் கீழ் அவரால் பேணப்படும் ஏதேனும் பதிவேட்டில் அல்லது பிரிவு 6 அல்லது பிரிவு 7 இன் கீழ் அவரால் கொடுத்துதவப்பட்ட ஏதேனும் விபரத்திரட்டில் அல்லது அறிந்து கோடலில் தெரிந்து கொண்டு பிழையானதும் சரியற்றதுமான ஏதேனும் கூற்றைச் செய்யும்; அல்லது

(உ) இச்சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதிக்கு இணங்கியொழுகத் தவறும்,

ஆள் எவரும், இச்சட்டத்தின் கீழ்த் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

13. இச்சட்டத்தின் கீழ்த் தவறொன்றுக்குக் குற்றவாளியாகும் ஒவ்வோர் ஆளும் ஒரு நீதிவான் முன்னிலையிலான சுருக்கமுறை விளக்கத்தின் பின் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் மூன்று மாதத்தை விஞ்சாத ஒரு காலப் பகுதிக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது ஐயாயிரம் ரூபாவுக்கு மேற்படாத ஒரு குற்றப்பணத்திற்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

14. இச்சட்டத்தின் கீழான அல்லது அதன் கீழ் ஆக்கப்பட்ட எவையேனும் ஒழுங்குவிதிகளின் கீழான தவறொன்று ஆட்களின் குழு ஒன்றினால் புரியப்படுமிடத்து—

(அ) அவ்வாட்கள் குழு கூட்டிணைக்கப்பட்ட ஒரு குழுவாயின் தவறு புரியப்பட்ட நேரத்தில் கூட்டிணைக்கப்பட்ட அக்குழுவின் பணிப்பாளராக அல்லது அலுவலராக இருந்தவரான ஒவ்வோர் ஆளும்; அல்லது

(ஆ) அவ்வாட்கள் குழு கூட்டிணைக்கப்பட்ட ஒரு குழுவாக அல்லாமல் வேறு ஒரு குழுவாயின் தவறு புரியப்பட்ட நேரத்தில் அக்குழுவின் ஓர் உறுப்பினராக அல்லது பங்காளராக இருந்தவரான ஒவ்வோர் ஆளும்;

அத்தவறு அவருக்குத் தெரியாமல் புரியப்பட்டதென அல்லது அத்தவறு புரியப்படுதலைத் தடுப்பதற்கான உரிய விழிப்புக் கவனம் அனைத்தையும் அவர் பிரயோகித்தாரென எண்பித்தாலொழிய அத்தகைய தவறுக்குக் குற்றவாளியாகக் கருதப்படுதல் வேண்டும்.

15. (1) பின்வரும் எல்லாக் கருமங்களுக்காகவும் அல்லது அவை தொடர்பாக அல்லது அக்கருமங்களில் ஏதேனும் ஒன்றுக்காக அல்லது அது தொடர்பில் அமைச்சரானவர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்:—

(அ) அத்தகைய பயிர்களை உற்பத்தி செய்வதற்காக, அறிவிக்கப்பட்ட கமத்தொழிற் பயிர்களை உற்பத்தி செய்பவர்களுடன் செய்துகொள்ளப்பட வேண்டிய ஒப்பந்தங்களின் வகைகளை விதித்துரைத்தல்;

(ஆ) அறிவிக்கப்பட்ட கமத்தொழிற் பயிர்களை உற்பத்தி செய்பவர்களுக்கு நீடித்தற் சேவைகளை ஏற்பாடு செய்தல்;

(இ) அறிவிக்கப்பட்ட கமத்தொழிற் பயிர்களைப் பயிரிடும் அத்துடன் பதனிடும் ஆட்களுக்கு உதவிப் பணம் அத்துடன் நிதியாகவோ அல்லது வேறு விதமாகவோ வேறு உதவிகள் வழங்குவதற்கான திட்டங்களை ஏற்பாடு செய்தல்;

(ஈ) அறிவிக்கப்பட்ட கமத்தொழிற் பயிர்களைப் பயிரிடுவதில், பதனிடுவதில், அத்துடன் சந்தைப்படுத்துவதில் ஆட்களைப் பயிற்றுவிப்பதற்கும் அத்துடன் அத்தகைய பயிர்களின் பயிர்ச்செய்கை பதனிடுகை அத்துடன் சந்தைப்படுத்தல் தொடர்பிலான தகவல்களைப் பரப்புவதற்குமான திட்டங்களை ஏற்பாடு செய்தல்;

(உ) அறிவிக்கப்பட்ட கமத்தொழிற் பயிர்கள் எந்தத் தர நியமத்திற்கு அமைந்ததாயிருக்க வேண்டுமோ அந்தத் தர நியமத்தை விதித்துரைத்தல்;

(ஊ) இச்சட்டத்தின் கீழ் விதித்துரைக்கப்படுவதற்குத் தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் கருமங்களுக்கு அல்லது எக்கருமங்கள் தொடர்பில் இச்சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படுவதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளதோ அக்கருமங்கள் தொடர்பிலான ஏதேனும் கருமங்களுக்கு ஏற்பாடு செய்தல்.

(2) உட்பிரிவு (1) இன் கீழ் அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒவ்வோர் ஒழுங்குவிதியும் கசெற்றில் வெளியிடப்பட வேண்டுமென்பதுடன், அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று அது நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒவ்வோர் ஒழுங்குவிதியும் அது கசெற்றில் வெளியிடப்பட்ட பின் வசதியாகக் கூடியளவு விரைவாகப் பாராளுமன்றத்தின் முன் அங்கீகாரத்திற்கெனக் கொண்டு வரப்படல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஏதேனும் ஒழுங்கு விதியானது அதன் அனுமதி மறுப்புத் தேதியிலிருந்து, அதன் கீழ் ஏற்கனவே செய்யப்பட்ட எதனினதும் செல்லுபடியாந் தன்மைக்குப் பங்கமின்றி, இல்லாதொழிக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) எந்தத் தேதியிலிருந்து ஏதேனும் ஒழுங்குவிதி இல்லாதொழிக்கப்பட்டதாகக் கருதப்பட வேண்டுமோ அந்தத் தேதி பற்றிய அறிவித்தலானது கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும்.

16. ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டில் அல்லது வேறு ஏதேனும் எழுத்தினாலான சட்டத்தால் அல்லது அத்தகைய சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட ஆக்கப்பட்ட தேவைப்படுத்தப்பட்ட அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஏதேனும் அறிவித்தலில், அனுமதிப் பத்திரத்தில் கடிதத் தொடர்பில்

படிவத்தில் அல்லது வேறு ஆவணத்தில் அதனகத்துக் காணப்படும் ''சிறு ஏற்று மதிப் பயிர்கள் திணைக்களம்'' என்ற சொற்றொடர் காணப்படுமிடங்களில் அதற்குப் பதிலாக ''ஏற்றுமதிக் கமத்தொழில் திணைக்களம்'' என்ற சொற்றொடர் இடப்படல் வேண்டும் என்பதுடன், அதற்கிணங்க அத்தகைய ஏதேனும் ஏற்பாட்டில் ''சிறு ஏற்றுமதிப் பயிர்கள் பணிப்பாளர்'' என்ற சொற்றொடர் பயன்படுத்தப்பட்டுள்ள இடங்களில் எல்லாம் அத்தகைய சொற்றொடரானது ''ஏற்றுமதிக் கமத்தொழிற் பணிப்பாளர்'' என வாசிக்கப்படவும் பொருள் கொள்ளப்படவும் வேண்டும்.

17. சிறு ஏற்றுமதிப் பயிர்கள் பணிப்பாளரால் அல்லது அவருக்குச் சாதகமாக, இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதிக்கு முன்னதாக ஆக்கப்பட்ட, வழங்கப்பட்ட அல்லது நிறைவேற்றப்பட்ட எத்தன்மையதான ஒப்பந்தம், உடன்படிக்கை அல்லது வேறு சாதனம் அல்லது ஆவணம் ஒவ்வொன்றும் அத்தேதியிலிருந்தும் அதற்குப் பின்னரும் ஏற்றுமதிக் கமத்தொழிற் பணிப்பாளரால் அல்லது அவருக்குச் சாதகமாக, ஆக்கப்பட்டதாக, வழங்கப்பட்டதாக அல்லது நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அவ்வாறு ஆக்கப்பட்டிருப்பதாக, வழங்கப்பட்டிருப்பதாக அல்லது நிறைவேற்றப்பட்டிருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

18. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை இருக்கின்ற விடயத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

19. இச்சட்டத்தில், சந்தர்ப்பம் வேறு விதமாகத் தேவைப்படுத்தினாலன்றி—

''ஏற்றுமதிக் கமத்தொழிற் பயிர்'' என்பது தேயிலை, இறப்பர், தென்னை அத்துடன் மரமுந்திரிகை நீங்கலாக, அதன் மொத்த ஆண்டு உற்பத்தியில் ஆகக் குறைந்தது ஐம்பது சதவீதமாவது ஏற்றுமதி செய்யப்படுகின்றதான ஏதேனும் பல்லாண்டுப் பயிர் எனப் பொருளாகும்.

''விதித்துரைக்கப்பட்ட'' என்பது இச்சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்கு விதிகளால் விதித்துரைக்கப்பட்டதெனப் பொருளாகும்.

## 1992 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க, மா கொழும்பு பொருளாதார ஆணைக்குழு (திருத்தச்) சட்டம்

[1992, நவெம்பர் மாதம் 04 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

**1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, மா கொழும்பு பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.**

1. இச்சட்டம் 1992 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, மா கொழும்பு பொருளாதார ஆணைக்குழு (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

2. (இதனகத்து இதன் பின்னர் ''முதன்மைச் சட்டவாக்கம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, மா கொழும்பு பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் விரிவுப் பெயர், ''மா கொழும்பு பொருளாதார ஆணைக்குழு'' அத்துடன் ''சொல்லப்பட்ட ஆணைக்குழு'' எனும் சொற்களுக்குப் பதிலாக, ''இலங்கை முதலீட்டுச் சபை'' அத்துடன் ''சொல்லப் பட்ட சபை'' என்ற சொற்களை முறையே பதிலீடு செய்வதன் மூலம் இத்தால் திருத்தப்படுகிறது.

3. (1) முதன்மைச் சட்டவாக்கத்திலும் எழுத்திலான வேறேதேனும் சட் டத்திலும் மா கொழும்பு பொருளாதார ஆணைக் குழுவைக் குறிக்கும் ''மா கொழும்பு பொருளாதார ஆணைக்குழு'' அத்துடன் ''ஆணைக்குழு'' எனும் சொற்களுக்குப் பதிலாக ''இலங்கை முதலீட்டுச் சபை'' அத்துடன் ''சபை'' எனும் சொற்கள் முறையே இடப்படுதல் வேண்டும்.

(2) ஏதேனும் அறிவித்தலில், ஒப்பந்தத்தில், கடிதப் போக்குவரத்தில் அல் லது வேறு ஆவணத்தில் ''மா கொழும்பு பொருளாதார ஆணைக்குழு'' அல்லது ''ஆணைக்குழு'' பற்றிய குறிப்பீடு ஒவ்வொன்றும் ''இலங்கை முதலீட்டுச் சபை'' அத்துடன் ''சபை'' பற்றிய குறிப்பீடாக முறையே வாசிக்கப்பட்டுப் பொருள் கொள்ளப்படுதல் வேண்டும்.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவு, இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகிறது:—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும்:—

''(1) சபையானது சனாதிபதியால் நியமிக்கப்படவேண்டிய ஐந்து உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும். அவர்களுள் ஒருவர் சபையின் பணிப்பாளர் தலைமையதிபதியாக நியமிக் கப்படுதல் வேண்டும்; மற்றொருவர் சபையின் மேலதிக பணிப் பாளர் தலைமையதிபதியாக நியமிக்கப்படுதல் வேண்டும்''; அத்துடன்

(2) அப்பிரிவின் (7) ஆம் உட்பிரிவில் ''பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது வேறெவரேனும் உறுப்பினர்'' எனும் சொற்களுக்குப் பதிலாக, ''பணிப்பாளர் தலைமையதிபதி, மேலதிக பணிப்பாளர் தலைமை

யதிபதி அல்லது வேறெவரேனும் உறுப்பினர்'' எனும் சொற்களை இடுவதன் மூலமும்.

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்கஞ் செய்துவிட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகிறது:—

''(2) பணிப்பாளர் தலைமையதிபதி, சபையின் எல்லாக் கூட்டங்களிலும் தலைமை தாங்குதல் வேண்டும். அத்துடன் சபையின் ஏதேனும் கூட்டத்திற்குப் பணிப்பாளர் தலைமையதிபதி வருகை தராதவிடத்து மேலதிக பணிப்பாளர் தலைமையதிபதி அத்தகைய கூட்டத்தில் தலைமை தாங்குதல் வேண்டும். அத்துடன் சபையின் ஏதேனும் கூட்டத்திற்குப் பணிப்பாளர் தலைமையதிபதி, அத்துடன் மேலதிக பணிப்பாளர் தலைமையதிபதி ஆகிய இருவரும் வருகை தராதபோது சமுகமாயிருக்கும் உறுப்பினர்களால் தெரிவு செய்யப்பட்ட எவரேனும் உறுப்பினர் அக்கூட்டத்தில் தலைமை தாங்குதல் வேண்டும்.''.

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவு ''பணிப்பாளர் தலைமையதிபதி'' என்ற சொற்களுக்குப் பதிலாக, ''பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது மேலதிக பணிப்பாளர் தலைமையதிபதி'' எனும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகிறது.

7. இருபதாம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் பிரிவு இத்தால் இடப்படுகிறது என்பதுடன் முதன்மைச் சட்டவாக்கத்தின் 20அ எனும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:—

''உரிமமளிக்கப்பட்ட பொறுப்பு முயற்சிகள் தொடர்பில் சபைக்குள்ள தத்துவங்கள்.

20அ. (1) ஏதேனும் உரிமமளிக்கப்பட்ட பொறுப்பு முயற்சியின் தொழிலுக்குத் தேவைப்படும் கட்டிட வரைபடங்களை அங்கீகரித்தல் அல்லது அத்தகைய உரிமமளிக்கப்பட்ட பொறுப்பு முயற்சியின் தொழிலை நடாத்துவதற்குத் தேவைப்படும் ஏதேனும் உரிமத்தை, அனுமதிப்பத்திரத்தை அல்லது அதிகாரத்தை வழங்குதல் தொடர்பாக எழுத்திலான ஏதேனும் சட்டத்தின் மூலம் எவரேனும் ஆளுக்கு, குழுவுக்கு அல்லது அதிகார சபைக்கு அளிக்கப்பட்ட, கொடுக்கப்பட்ட அல்லது குறித்தொதுக்கப்பட்ட எல்லாத் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும், அத்தகைய எழுத்திலான சட்டத்தில், அத்தகைய தத்துவங்களை, கடமைகளை அல்லது பணிகளைப் பிரயோகிப்பதற்கு, புரிவதற்கு அல்லது ஆற்றுவதற்குத் தத்துவமளிக்கப்பட்ட ஆள், குழு அல்லது அதிகார சபை பற்றிய குறிப்பீடு, சபை பற்றிய குறிப்பீடென்றாற்போன்று, உரிமமளிக்கப்பட்ட பொறுப்பு முயற்சி தொடர்பில் பிரயோகிப்பதும், புரிவதும், ஆற்றுவதும் சபைக்குச் சட்டபூர்வமானதாதல் வேண்டும்.

(2) சபையானது, (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட தத்துவங்களுடனும், கடமைகளுடனும், பணிகளுடனும் மேலதிகமாக, உரிமமளிக்கப்பட்ட வலயத்திற்கு வெளியே உரிமமளிக்கப்பட்ட பொறுப்பு முயற்சி தொடர்பில் இதற்கான ''இ''

எனும் அட்டவணையிலும் ''ஈ'' எனும் அட்டவணையிலும் குறித்துரைக்கப்பட்ட எழுத்திலான சட்டத்தின் மூலம் எவரேனும் ஆளுக்கு, குழுவுக்கு அல்லது அதிகார சபைக்கு அளிக்கப்பட்ட, விதிக்கப்பட்ட அல்லது குறித்தொதுக்கப்பட்ட எல்லாத் தத்துவங்களையும், கடமைகளையும் அல்லது பணிகளையும், அத்தகைய எழுத்திலான சட்டத்தில் அத்தகைய தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பதற்கு, புரிவதற்கு, நிறைவேற்றுவதற்கு தத்துவமளிக்கப்பட்ட ஆள், குழு அல்லது அதிகாரசபை பற்றிய குறிப்பீடுகள் சபை பற்றிய குறிப்பீடு என்றாற்போன்று, பிரயோகிக்கலாம், புரியலாம் அத்துடன் நிறைவேற்றலாம்;

ஆயின், தேசிய சுற்றாடல் சட்டத்தின் கீழான தத்துவம், கடமை அல்லது பணி எதுவும், அச்சட்டத்தினால் தாபிக்கப்பட்ட மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் ஆலோசனையுடனும் ஒருப்பாட்டுடனும் தவிர, சபையினால் பிரயோகிக்கப்படுதல், புரியப்படுதல் அல்லது நிறைவேற்றப்படுதல் ஆகாது.''.

*8.* பின்வரும் பிரிவு, 26 ஆம் பிரிவை உடனடுத்து இத்தால் உட்புகுத்தப்படுவதுடன் அது முதன்மைச் சட்டவாக்கத்தின் 26அ எனும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:—

“ஏதேனும் தடை செய் கட்டளை வழங்கு முன்னர் சபை முதலியவற்றிற்கு அறிவிக்க வேண்டும் என்பது.

26அ. 1988 ஆம் ஆண்டின் 79 ஆம் இலக்க, சட்டத்தில் திருத்தப்பட்டவாறான குடியியல் நடவடிக்கை முறைச் சட்டக் கோவையின் 664 ஆம் பிரிவின் கீழ்—

(அ) இச்சட்டத்தின் மூலம் சபைக்கு அளிக்கப்பட்ட, விதிக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தை, கடமையை அல்லது பணியை நன்னோக்கத்துடன் பிரயோகிப்பதில், புரிவதில் அல்லது நிறைவேற்றுவதில் அல்லது கொள்ளப்பட்ட பிரயோகிக்கையில், புரிகையில் அல்லது நிறைவேற்றுகையில் ஏதேனும் கருமத்தை அல்லது விடயத்தைச் செய்வதில் இருந்து சபையைத் தடுக்கின்ற அல்லது மட்டுப்படுத்துகின்ற தடைசெய் கட்டளை எதுவும் சபைக்கெதிராக; அல்லது

(ஆ) இச்சட்டத்தின் மூலம் சபைக்கு அளிக்கப்பட்ட, அல்லது விதிக்கப்பட்ட அல்லது குறித்தொதுக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தை, கடமையை அல்லது பணியை நன்னோக்கத்துடன் பிரயோகிக்கையில், புரிகையில் அல்லது நிறைவேற்றுகையில் அல்லது கொள்ளப்பட்ட பிரயோகிக்கையில், புரிகையில் அல்லது நிறைவேற்றுகையில் சபையினால் அதிகாரமளிக்கப்பட்ட உரிமமளிக்கப்பட்ட அல்லது அனுமதியளிக்கப்பட்ட ஏதேனும் அத்தகைய கருமத்தை அல்லது விடயத்தைச் செய்வதில் இருந்து அத்

தகைய உரிமமளிக்கப்பட்ட பொறுப்பு முயற்சியை அல்லது இடப்பரப்பு பொறுப்பு முயற்சியை அல்லது அத்தகைய உரிமமளிக்கப்பட்ட பொறுப்பு முயற்சியின் அல்லது இடப்பரப்பு பொறுப்பு முயற்சியின் உரிமையாளரை, பங்காளரை, பணிப்பாளரை, முகாமையாளரை, முகவரை, அலுவலரை, சேவையாளரை அல்லது அத்தகைய பொறுப்பு முயற்சியின் ஏதேனும் சேவையை அல்லது வேலையைப் புரிகின்ற எவரேனும் ஆளை அல்லது குழுவைத் தடுக்கின்ற அல்லது மட்டுப்படுத்துகின்ற தடைசெய் கட்டளை எதுவும் உரிமமளிக்கப்பட்ட பொறுப்பு முயற்சிக்கு அல்லது இடப்பரப்பு பொறுப்பு முயற்சிக்கு அல்லது அத்தகைய உரிமமளிக்கப்பட்ட பொறுப்பு முயற்சியின் அல்லது இடப்பரப்பு பொறுப்பு முயற்சியின் உரிமையாளருக்கு, பங்காளருக்கு, பணிப்பாளருக்கு, முகமையாளருக்கு, முகவருக்கு, அலுவலருக்கு, சேவையாளருக்கு, ஆளுக்கு அல்லது குழுவுக்கு எதிராக;

விடயத்திற்கேற்றாற்போல சபைக்கு, உரிமமளிக்கப்பட்ட பொறுப்பு முயற்சிக்கு, உரிமையாளருக்கு, பங்காளருக்கு, பணிப்பாளருக்கு, முகாமையாளருக்கு, முகவருக்கு, அலுவலருக்கு, சேவையாளருக்கு, ஆளுக்கு அல்லது குழுவுக்கு அறிவித்த பின்னர் அன்றியும் அதனை அல்லது அவரை விசாரித்த பின்னர் அன்றியும் தவிர வழங்கப்படுதல் ஆகாது.''.

9. சபையினால் மேலதிக பணிப்பாளர் தலைமையதிபதிக்குக் கையளிக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தை அல்லது கடமையைப் பின்பற்றி அல்லது பின்பற்றியதாக வைத்துக் கொண்டு, இச்சட்டம் ஆரம்பமாகும் தேதிக்கு முன்னர் அவரால் பிரயோகிக்கப்பட்ட அல்லது புரியப்பட்ட ஏதேனும் தத்துவம் அல்லது கடமை செல்லுபடியுடைய விதமாகப் பிரயோகிக்கப்பட்டதெனவும், புரியப்பட்டதெனவும் கருதப்படுதலும் அவ்வாறு இருத்தலும் வேண்டும்.

10. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை காணப்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

# 1992 ஆம் ஆண்டின் 62 ஆம் இலக்க பணிக்கொடைக் கொடுப்பனவு (திருத்தச்) சட்டம்

*[1992, நவெம்பர் மாதம் 13 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

**1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, பணிக்கொடைக் கொடுப்பனவுச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்)**

1. இச்சட்டம் 1992 ஆம் ஆண்டின் 62 ஆம் இலக்க, பணிக்கொடைக் கொடுப்பனவு (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

2. (இதனகத்துப் பின்னர் ''முதன்மைச் சட்டவாக்கம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, பணிக்கொடைக் கொடுப்பனவுச் சட்டத்தின் 5 ஆம் பிரிவு, அதன் (3) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவைச் சேர்ப்பதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:—

''(4) விடயத்திற்கேற்ப வேலையாள் ஒருவருக்கு அல்லது அவரது மரபுரிமையாளருக்கு (1) ஆம் உட்பிரிவின் கீழ்ப் பணிக்கொடையாகக் கொடுக்குமதியாயிருக்கும் ஏதேனும் பணத் தொகையைச் செலுத்துவதற்கு ஆளாகவிருந்து உரிய தேதியன்று அல்லது அதற்கு முன்னர் அப்பணத் தொகையைச் செலுத்தத் தவறுகின்ற அல்லது தவணை தவறுகின்ற தொழில் தருநர் எவரும் பணிக்கொடையாகக் கொடுக்குமதியாயிருக்கும் பணத் தொகைக்கு மேலதிக அப் பணத் தொகைமீது பின்வரும் முறையில் கணிக்கப்பட்ட மிகை வரியொன்றையும், விடயத்துக்கேற்ப, அந்த வேலையாளுக்கு அல்லது அவரது மரபுரிமையாளர்களுக்குச் செலுத்துவதற்கு அவர் ஆளாதல் வேண்டும்:—

(அ) பணிக்கொடையின் கொடுப்பனவு உரிய தேதியிலிருந்து ஒரு மாதத்தை விஞ்சாதவொரு காலப் பகுதிக்கு நிலுவையிலிருக்குமிடத்துப் பணிக்கொடை என்ற வகையில் கொடுக்குமதியான பணத் தொகையின் பத்துச் சதவீத மிகைவரியொன்று;

(ஆ) பணிக் கொடையின் கொடுப்பனவு, உரிய தேதியிலிருந்து ஒரு மாதத்தினை விஞ்சிய ஆனால் மூன்று மாதங்களை விஞ்சாதவொரு காலப் பகுதிக்கு நிலுவையிலிருக்குமிடத்துப் பணிக் கொடை என்ற வகையில் கொடுக்குமதியான பணத் தொகையின் பதினைந்து சதவீத மிகைவரியொன்று;

(இ) பணிக்கொடையின் கொடுப்பனவு உரிய தேதியிலிருந்து மூன்று மாதங்களை விஞ்சிய ஆனால் ஆறு மாதங்களை விஞ்சாதவொரு காலப் பகுதிக்கு நிலுவையிலிருக்குமிடத்துப் பணிக்கொடை என்ற வகையில் கொடுக்குமதியான பணத்தொகையின் இருபது சதவீத மிகைவரியொன்று;

(ஈ) பணிக்கொடையின் கொடுப்பனவு உரிய தேதியிலிருந்து ஆறு மாதங்களை விஞ்சிய ஆனால் பன்னிரண்டு மாதங்களை விஞ்சாதவொரு காலப் பகுதிக்கு நிலுவையிலிருக்குமிடத்துப் பணிக்கொடை என்ற

வகையில் கொடுக்குமதியான பணத்தொகையின் இருபத்தைந்து சதவீத மிகைவரியொன்று;

(உ) பணிக்கொடையின் கொடுப்பனவு உரிய தேதியிலிருந்து பன்னிரண்டு மாதங்களை விஞ்சியவொரு காலப் பகுதிக்கு நிலுவையிலிருக்குமிடத்து பணிக்கொடை என்ற வகையில் கொடுக்குமதியான பணத்தொகையின் முப்பது சதவீத மிகைவரியொன்று.

இப்பிரிவின் நோக்கங்களுக்காகப் பணிக்கொடையொன்று தொடர்பாக, ''உரிய தேதி'' என்னும் சொல்லமைப்பு பணிக்கொடை எந்த வேலையாளுக்குச் செலுத்தப்படற்பாலதாகின்றதோ அந்த வேலையாளின் சேவைகள் முடிவுறுத்தப்பட்ட தேதியிலிருந்து முப்பதாம் நாள் என்று பொருள்படும்.''.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவு, அதன் (7) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவைச் சேர்ப்பதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:—

''(8) இப்பிரிவின் நோக்கங்களுக்காக, ''பணிக்கொடை'' என்னும் சொல்லமைப்பு 5 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் கீழ்ச் செலுத்தப்படற்பாலதான ஏதேனும் மிகைவரி என்று பொருள்படும்.''.

4. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

# 1992 ஆம் ஆண்டின் 63 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டம்

*[1992, நவெம்பர் மாதம் 18 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

**1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.**

1. இச்சட்டம் 1992 ஆம் ஆண்டின் 63 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

2. (இதனகத்துப் பின்னர் ''முதன்மைச் சட்டவாக்கம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 8 ஆம் பிரிவு அப்பிரிவின் பந்தி (அ) என்பதில் பின்வருமாறு திருத்தப் படுகின்றது:—

(1) அப்பந்தியின் (LX) என்னும் உட்பந்தியில் ''இலங்கைக் கடன் தகவல் பணியகத்தின்; அத்துடன்'' என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக ''இலங்கைக் கடன் தகவல் பணியகத்தின்;'' என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(2) அப்பந்தியின் (LXI) என்னும் உட்பந்தியில் ''இறப்பர் ஆராய்ச்சிச் சபையின்;'' என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, ''இறப்பர் ஆராய்ச்சிச் சபையின்; அத்துடன்'' என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்; அத்துடன்

(3) அப்பந்தியின் (LXI) என்னும் உட்பந்தியை உடனடுத்துப் பின்வரும் உட்பந்தியைச் சேர்ப்பதன் மூலமும்:

''(LXII) 1990 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, புத்தசாசன நிதியச் சட்டத்தால் தாபிக்கப்பட்ட புத்தசாசன நிதியத்தின்''.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவு அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) அவ்வுட்பிரிவின் (க) என்னும் பந்தியில் ''இலவசப் பிரயாண வசதியின் பெறுமதி; அத்துடன்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''இலவசப் பிரயாண வசதியின் பெறுமதி;'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) அவ்வுட்பிரிவின் (ங) என்னும் பந்தியில் ''ஏதேனும் பணத் தொகையின் அத்தகைய பாகம்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''ஏதேனும் பணத் தொகையின் அத்தகைய பாகம்; அத்துடன்'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(3) அவ்வுட்பிரிவின் (ங) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும்:—

''(ச) பிரிவு 4 (1) என்னும் பிரிவின் (இ) என்னும் பந்தியின் (i) என்னும் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்படுவதும் எவரேனும் ஊழியர், விடயத்திற்கேற்ப ஏதேனும் பகிரங்கக் கூட்டுத்தாபனத்தில் அல்லது அரசாங்கத்திற்கு உரித்தாக்கப்பட்ட ஏதேனும் தொழில் முயற்சியில் சேவைக் காலப் பகுதிக்கு ஏற்றிக் கூறப்படற்பாலதானவாறு 1987 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, பகிரங்கக் கூட்டுத்தாபனங்களை அல்லது அரசாங்கத்திற்கு உரித்தாக்கப்பட்ட தொழில் பொறுப்பு முயற்சிகளைப் பகிரங்கக் கம்பனிகளாக மாற்றுதற் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட ஏதேனும் கம்பனியில் ஏதேனும் தொழிலிலிருந்து ஓய்வுபெறும் நேரத்தில் அவருக்குச் செலுத்தப்பட்டதுமான ஏதேனும் பணத் தொகையின் அத்தகைய பாகம்.''.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவு அப்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் ''16அ ஆம், 16ஆ ஆம், 17 ஆம், 17அ ஆம்'' என்னும் எண்களுக்கும் சொற்களுக்கும் பதிலாக ''16அ ஆம், 16ஆ ஆம், 16இ ஆம், 17 ஆம், 17அ ஆம்'' என்னும் சொற்களையும் இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவில் அப்பிரிவின் (அ) என்னும் பந்தியின் (xxi) என்னும் உட்பந்தியில் ''விலை கோரிப் பெறப்பட்ட பங்குடைய பகிரங்கக் கம்பனியொன்றின் ஏதேனும் பங்கு எவரேனும் ஆளினால் கொள்ளப்பட்ட தேதியிலிருந்து ஓராண்டின் பின்னர்,'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''விலை கோரிப் பெறப்பட்ட பங்குடைப் பகிரங்கக் கம்பனியொன்றின்'' என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) அப்பிரிவின் (க) என்னும் பந்தியை உடனடுத்து, பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும்:—

''(கக) ஆபரணத்தின் ஏற்றுமதியிலிருந்து எவரேனும் ஆளுக்கு எழுகின்ற இலாபங்களும் வருமானமும்;'';

(2) அப்பிரிவின் (ய) என்னும் பந்தியில் ''எவையேனும் பங்கு எதுவும் கொள்ளப்பட்ட தேதியிலிருந்து ஓராண்டின் பின்னர், ஆனால் 1994 ஏப்பிறில் 1 ஆம் தேதிக்கு முன்னர் பெறப்பட்ட பங்கு விற்பனையிலிருந்து பெறப்பட்டதும் அல்லது அவருக்கு எழுகின்றவையும், 3 ஆம் பிரிவின் (அ) என்னும் பந்தியின் கருத்தெல்லைக்கு உட்பட்டவையுமான எவையேனும் இலாபங்களும் வருமானங்களும்'' என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, ''1994 ஏப்பிறில் 1 ஆம் தேதிக்கு முன்னர் விற்பனையிலிருந்து பெறப்பட்டதும் அல்லது அவருக்கு எழுகின்றவையும் 3 ஆம் பிரிவின் (அ) என்னும் பந்தியில் கருத்தெல்லைக்கு உட்பட்டவையுமான எவையேனும் இலாபங்களும் வருமானங்களும்; அத்துடன்'' என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(3) அப்பிரிவின் (ய) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும்:—

''(ர) 1991 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டில் எவரேனும் தனியாளினால் நுண்கலைகள், இலக்கியம் அல்லது விளையாட்டுத்துறையில் அவரது திறமையைப் பாராட்டி, விடயத்திற்கேற்ப நுண்கலைகள், இலக்கியம் அல்லது விளையாட்டுத் துறை என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் எழுத்திலான முன்னங்கீகாரத்துடன் வழங்கப்படும் அளிப்பொன்றாக அல்லது அளிப்புகளாகப் பெறப்பட்ட ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாதவாறான ஏதேனும் பணத்தொகையின் அல்லது பணத் தொகைகளின் கூட்டு மொத்தத்தின் அத்தகைய பாகம்.''.

7. பதினைந்தாம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன் அது முதன்மைச் சட்டவாக்கத்தின் 15அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:—

'இலங்கைக்கு வெளியே எழுகின்ற அல்லது வெளியிலிருந்து பெறப்பட்ட எவரேனும் வதிவுள்ள விருந்தாளி இலாபங்களுக்கும் வருமானத்திற்கும் விலக்களித்தல்.

15அ. இலங்கையில் எழுகின்ற அல்லது இலங்கையிலிருந்து பெறப்பட்ட இலாபங்களும் வருமானமும் அல்லாத எவரேனும் வதிவுள்ள விருந்தாளியின் இலாபங்களுக்கும் வருமானத்திற்கும், அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் வதிவுள்ள விருந்தாளி செயற் திட்டத்தின் கீழ் அத்தகைய வதிவுள்ள விருந்தாளி பதிவு செய்யப்பட்ட வரி மதிப்பீட்டாண்டின் தொடக்கத்திலிருந்து கணிக்கப்பட்ட ஐந்தாண்டுகளைக் கொண்டவொரு காலப் பகுதிக்கு வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

ஆயின், அத்தகைய ஐந்து வருட காலப் பகுதியின் முடிவின் முன்னர், அத்தகைய வதிவுள்ள விருந்தாளிக்கு இலங்கைப் பிரசாவுரிமை வழங்கப்படுமிடத்து, இலங்கைப் பிரசாவுரிமை அத்தகைய வதிவுள்ள விருந்தாளிக்கு எத்தேதியில் வழங்கப்பட்டதோ அத்தேதியிலிருந்து தொடங்கும் காலப் பகுதிக்கான அத்தகைய இலாபங்களும் வருமானமும் வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்படுதலாகாது.

8. பிரிவு 16ஆ என்பதனை உடனடுத்துப் பின்வரும் பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படுகின்றன என்பதுடன் அவை முறையே முதன்மைச் சட்டவாக்கத்தின் 16இ, 16ஈ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும்:—

''உல்லாசப் பிரயாணிகளின் ஒட்டல்கள் தொடர்பிலான குறித்த சில பொறுப்பு முயற்சிகளின் இலாபங்களுக்கும் வருமானத்திற்கும் வருமான வரியிலிருந்து விலக்களித்தல்.

16இ. (1) உல்லாசப் பிரயாணிகளுக்கென ஏதேனும் ஒட்டலைத் தொழிற்படுத்துவதும்

(i) (1981 ஏப்பிறில் 1 ஆம் தேதிக்கு முன்னர் தொழிலைக் கொண்டு நடாத்தத் தொடங்கிய ஏதேனும் அத்தகைய பொறுப்பு முயற்சி தவிர்ந்த) 16 ஆம் பிரிவின் (அ) என்னும் பந்தியில்; அல்லது

(ii) பிரிவு 16அ என்பதில்

குறிப்பீடு செய்யப்படுவதுமான ஏதேனும் பொறுப்பு முயற்சியின், 3 ஆம் பிரிவின் (அ) என்னும் பந்தியின் கருத்தெல்லைக்குட்பட்ட (மூலதனச் சொத்தின் விற்பனையிலிருந்து எவையேனும் இலாபங்களும் வருமானமும் தவிர்ந்த) இலாபங்களும் வருமானமும் ஐந்து ஆண்டுகளைக் கொண்டவொரு காலப் பகுதிக்கு வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

(2) உட்பிரிவு (1) இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஐந்தாண்டுகளைக் கொண்ட காலப் பகுதியானது—

(அ) அத்தகைய பொறுப்பு முயற்சியானது (1) ஆம் உட்பிரிவில் (i) ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்படும் பொறுப்பு முயற்சியொன்றாக இருக்குமிடத்து 1992 ஏப்பிறில் 1 ஆம் தேதியிலிருந்து கணிக்கப்படுதல் வேண்டும்;

ஆயினும், எவ்வாறாயினும் 1992 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று தொடங்கும் வரி மதிப்பீட்டாண்டிற்கு, அப்பொறுப்பு முயற்சியின் இலாபங்களிலும் வருமானத்திலுமிருந்து 29 ஆம் பிரிவின் கீழ்க் கழிக்கப்படற்பாலதான, அப்பொறுப்பு முயற்சிக்கு ஏற்றிக் கூறப்படற்பாலதான ஏதேனும் நட்டத்தின் அளவு, அத்தகைய இலாபங்களையும் வருமானத்தையும் விஞ்சுகின்றவிடத்து அல்லது அவற்றிற்குச் சமமாக இருக்குமிடத்து ஐந்தாண்டுகளைக் கொண்ட காலப் பகுதிக்கு 1993 ஏப்பிறில் 1 ஆம் தேதியிலிருந்து கணிக்கப்படுதல் வேண்டும்:

ஆயினும், மேலும் 1993 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று தொடங்கும் வரி மதிப்பீட்டாண்டிற்கு அப்பொறுப்பு முயற்சியின் இலாபங்களிலும் வருமானத்திலிருந்து 29 ஆம் பிரிவின் கீழ்க் கழிக்கப்படற்பாலதான ஏதேனும் அத்தகைய நட்டத்தின் அளவு அத்தகைய இலாபங்களையும் வருமானத்தையும் விஞ்சுகின்றவிடத்து அல்லது அவற்றிற்குச் சமமாக இருக்குமிடத்து ஐந்தாண்டுகளைக் கொண்ட காலப் பகுதி 1994 ஏப்பிறில் 1 ஆம் தேதியிலிருந்து கணிக்கப்படுதல் வேண்டும்;

(ஆ) அத்தகைய பொறுப்பு முயற்சியானது 16அ என்னும் பிரிவில் குறிப்பீடு செய்யப்படும் பொறுப்பு முயற்சியொன்றாக இருக்குமிடத்து, அப்பிரிவில் குறிப்பீடு செய்யப்படும் பத்து ஆண்டுகளைக் கொண்ட காலப் பகுதி முடிவுறும் வரி மதிப்பீட்டாண்டின் தொடக்கத்திலிருந்து கணிக்கப்படுதல் வேண்டும்.

உல்லாசப் பிரயாணி களுக்கானதும் மேலதிக படுக்கை யறைகளை நிர்மா ணிப்பதுமான ஏதேனும் ஓட்டலின் இலாபங்களுக்கும் வருமானத்திற்கும் வருமான வரியிலி ருந்து விலக்களித் தல்.

16ஈ. (1) உட்பிரிவு (2) இல் குறிப்பீடு செய்யப்படும் குறித் துரைக்கப்பட்ட ஏதேனும் பொறுப்பு முயற்சியின் இலாபங்களுக் கும் வருமானத்திற்கும் (2) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் (iii) ஆம் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்படும் படுக் கையறைகளுள் பத்துக்குக் குறையாதவை நிர்மாணிக்கப்பட்டுள்ள தாக இலங்கை உல்லாசப் பிரயாணச் சபையால் சான்றுப்படுத்தப் பட்ட வரி மதிப்பீட்டாண்டின் தொடக்கத்திலிருந்து கணிக்கப் பட்ட ஐந்தாண்டுகளைக் கொண்டவொரு காலப் பகுதிக்கு வரு மான வரியிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

(2) உட்பிரிவு (1) இன் நோக்கங்களுக்கு,

(அ) ''குறித்துரைக்கப்பட்ட பொறுப்பு முயற்சி'' என்பது உல்லாசப் பிரயாணிகளுக்கென எவையேனும் ஓட்டல் களைத் தொழிற்படுத்துவதும், அத்துடன்

(i) 1963 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க உண்ணாட் டரசிறைச் சட்டத்தின் 6 (1) (v) ஆம் பிரிவின் கீழ் அல்லது இச்சட்டத்தின் 16 ஆம் பிரிவில் (அ) என்னும் பந்தியின் கீழ் அமைச்சரால் அங் கீகரிக்கப்பட்டுள்ளதும்;

(ii) 1981 ஏப்பிறில் 1 ஆம் தேதிக்கு முன்னர் தொழிலைக் கொண்டு நடாத்தத் தொடங்கிய தும்;

(iii) எந்தப் படுக்கையறைகளின் நிர்மாணம் இலங்கை உல்லாசப் பிரயாணச் சபையால் அங்கீகரிக்கப் பட்டுள்ளதோ அந்தப் படுக்கையறைகளை, 1992 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் நிர்மாணிக்கத் தொடங்கியுள்ளதாகவும் பத்துக்குக் குறையாதனவான படுக்கையறை களை 1994 ஏப்பிறில் 1 ஆம் தேதிக்கு முன்னர் நிர்மாணித்துள்ளதாகவும் இலங்கை உல்லாசப் பிரயாணச் சபையால் அங்கீகரிக்கப்பட்டதும்;

(vi) உட்பிரிவு (1) இல் குறிப்பீடு செய்யப்படும் ஐந்தாண்டுகளைக் கொண்ட காலப் பகுதியின் தொடக்சத்திலுள்ளவாறு, 1992 மார்ச்சு 31 ஆம் தேதியன்று முடிவுறும் ஆண்டில் அப்பொறு ப்பு முயற்சியால் தொழிலுக்கமர்த்தப்பட்ட ஊழியர்களின் சராசரி எண்ணிக்கையை விடக் கூடுதலாக இருபத்தைந்துக்குக் குறையாத ஊழி யர்களைத் தொழிலுக்கமர்த்தியும் அத்தகைய காலப் பகுதி முடிவுறும் வரை தொடர்ந்து தொழிலுக்கமர்த்தியிருப்பதுமான

ஏதேனும் பொறுப்பு முயற்சி என்று பொருள்படும்.

இவ்வுட்பிரிவின் நோக்கங்களுக்காக—

''சராசரி எண்ணிக்கை'' என்பது ஊழியர்கள் தொடர்பில் அவ்வாண்டு முழுவதும் ஒவ்வொரு நாளன்றும் அத்தகைய பொறுப்பு முயற்சியில் தொழிலுக்கமர்த்தப் பட்டிருந்த ஊழியர்களின் கூட்டு மொத்த எண்ணிக்கையை முந்நூற்றி அறுபத்தைந்தால் பிரித்து வரும் எண்ணிக்கை என்று பொருள்படும்;

''ஊழியர்'' என்பது ஏதேனும் பொறுப்பு முயற்சி தொடர்பில் அப்பொறுப்பு முயற்சியின் எந்த ஊழியர் தொடர்பாக ஆணையாளர் தலைமையதிபதியால் அங்கீசரிக்கப்பட்ட ஏதேனும் சேமலாப நிதியத்திற்கு அப்பொறுப்பு முயற்சியால் கிரமமாக உதவு தொகைகள் செலுத்தப்படுகின்றனவோ அந்த ஊழியர் என்று பொருள்படும்;

(ஆ) ''இயைபான இலாபங்களும் வருமானமும்'' என்பது குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் பொறுப்பு முயற்சியினதும் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டினதும் தொடர்பில் எந்தத் தொகை, 3 ஆம் பிரிவின் (அ) என்னும் பந்தியின் கருத்தெல்லைக்குள் (மூலதனச் சொத்துக்களின் கையிருப்பிலிருந்தும் தேறும் எவையேனும் இலாபங்களையும் வருமானத்தையும் தவிர்த்து) அந்த வரி மதிப்பீட்டு ஆண்டிற்கு அத்தகைய பொறுப்பு முயற்சியின் இலாபங்களுக்கும் வருமானத்திற்கும் (அ) என்னும் பந்தியின் (iii) ஆம் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்படும் படுக்கையறைகளின் எண்ணிக்கை அப்பொறுப்பு முயற்சியிலுள்ள படுக்கையறைகளின் மொத்த எண்ணிக்கையின் எந்த விகிதாசாரத்தில் அமைகின்றதோ அந்தத் தொகை என்று பொருள்படும்.''.

9. முதன்மைச் சட்டவாக்கத்தின் 17இ என்னும் பிரிவு இத்தால் பின் வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், ''அத்தகைய கம்பனி தொழில் நடத்தத் தொடங்கிய வரி மதிப்பீட்டாண்டு தொடங்கியதிலிருந்து ஐந்தாண்டுக் காலப் பகுதிக்கு'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''அத்தகைய கம்பனி அவ்வாண்டில் அதன் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் எந்த வரி மதிப்பீட்டாண்டில் இலாபமீட்டத் தொடங்கியதோ அந்த வரி மதிப்பீட்டாண்டிலிருந்து கணிக்கப்பட்ட ஐந்தாண்டு காலப் பகுதிக்கு'' என்னும் சொற்களை இடுவதன் மூலம்; அத்துடன்

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியில்—

(அ) அப்பந்தியில் (ii) ஆம் உட்பந்தியில் ''பொறுப்பு முயற்சி யொன்றை அல்லது'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''பொறுப்பு முயற்சியொன்றை'' என்னும் சொற்களை இடு வதன் மூலமும்;

(ஆ) அப்பந்தியின் (iii) ஆம் உட்பந்தியில் ''புது வழி காண்டலின் தன்மையினதான பொறுப்பு முயற்சியொன்றை'' என்னும் சொற்களுக்குப் பதிலாச, ''புது வழி காண்டலின் தன்மை யினதான பொறுப்பு முயற்சியொன்றை; அல்லது'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(இ) அப்பந்தியின் (iii) என்னும் உட்பந்தியை உடனடுத்துப் பின் வரும் உட்பந்தியை இடுவதன் மூலமும்;

''(iv) அழிவு மீட்பு, கட்டியெழுத்தல், தேடுதல் அத்துடன் கடலில் மீட்டெடுக்கும் தொழிற்பாடுகள் உட்பட்ட கரைகடந்த கடலோர சேவைகளை ஏற்பாடு செய் வதற்கான புது வழி காண்டலின் தன்மையினதான பொறுப்பு முயற்சியொன்றை;''.

10. முதன்மைச் சட்டவாக்கத்தின் 20இ என்னும் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் அப்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் ''எந்தத் தொழில் முயற்சியுடன்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''பொருட்களின் அல்லது வியாபாரப் பொருட்களின் ஏற்றுமதியில் ஈடுபட்டுள்ளதான அந்தத் தொழில் முயற்சியுடன்'' என்னும் சொற்களை இடுவதன் மூலம் திருத்தப்படுகின்றது.

11. முதன்மைச் சட்டவாக்கத்தின் 22ஈஈஈ என்னும் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் ''உற்பத்தியில் அல்லது பொருட்களின் ஏற்றுமதியில்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''பொருட்களின் உற்பத்தியில், பொருட்களின் ஏற்றுமதியில் அல்லது அமைச்சரால் அங்கீகரிக்கப்படக் கூடியவாறான ஏதேனும் அத்தகைய சேவையை வழங்குவதில்'' என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

12. முதன்மைச் சட்டவாக்கத்தின் 23 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) அவ்வுட்பிரிவின் பந்தி (ஏஏ) என்பதில் ''1985 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டில்'' என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக ''1985 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் ஆனால் 1992 ஏப்பிறில் 1 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்கும் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டில்'' என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அவ்வுட்பிரிவின் (ஓ) என்னும் பந்தியில் ''(1) 1963 ஆம் ஆண்டின்'' என்னும் சொற்களிலிருந்து ''எவையேனும் கழிவுகளைக் கழித்து; அல்லது'' என்பது வரையிலான சொற்களுக்கும், எண்களுக்கும் பதிலாகப் பின்வரும் சொற்களையும், எண்களையும் இடுக:

''ஓர் ஆளினால் கொண்டு நடாத்தப்படும் அல்லது புரியப்படும் ஏதேனும் வர்த்தகம், வியாபாரம், உயர் தொழில் அல்லது வாழ்க்கைத் தொழில் தொடர்பில் எக்காலப் பகுதிக்கு அவரது இலாபங்களும், வருமானமும் ஆய்ந்தறியப்படுகிறதோ அக்காலத்துக்கு அத்தகைய ஆளினால் செலுத்தப்படற்பாலதான ஏதேனும்—

(i) 1963 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் கீழ்ச் செலுத்தப்படற்பாலதான வியாபார மொத்த விற்பனவு வரவு வரி;

(ii) 1981 ஆம் ஆண்டின் 69 ஆம் இலக்க, மொத்த விற்பனவு வரிச் சட்டத்தின் 47 ஆம் அல்லது 48 ஆம் அல்லது 48அ என்னும் பிரிவின் கீழ் அனுமதிக்கப்படக்கூடியனவான எவையேனும் கழிவுகளைக் கழித்து அச்சட்டத்தின் கீழ்ச் செலுத்தப் படற்பாலதான மொத்த விற்பனவு வரவு வரி; அல்லது

(iii) முறையே (i) ஆம், (ii) ஆம் உட்பிரிவுகளில் குறிப்பீடு செய்யப்பட்டதும் ஏதேனும் மாகாண சபையினால் ஆக்கப்பட்ட நிதியச் சட்டத்தின் கீழ் 1991 சனவரி 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் செலுத்தப்படற்பாலதுமான நேரொத்த வியாபார மொத்த விற்பனவு வரி அல்லது மொத்த விற்பனவு வரி.''.

13. முதன்மைச் சட்டவாக்கத்தின் 29 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் கீழ் ''16அ என்னும் பிரிவின் கீழ் அல்லது 17அ என்னும் பிரிவின் கீழ்'' என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, ''16அ என்னும் பிரிவின் கீழ் அல்லது 16இ என்னும் பிரிவின் கீழ் அல்லது 17அ என்னும் பிரிவின் கீழ்'' என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலமும்:—

''(3அ) பிரிவு 16 என்பதன் (அ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்படுவதும் எந்தப் பொறுப்பு முயற்சிக்கு 16இ என்னும் பிரிவு ஏற்புடைத்தாகின்றதோ அந்தப் பொறுப்பு முயற்சியுமாகிய ஏதேனும் பொறுப்பு முயற்சிக்கு 16இ (1) என்னும் பிரிவில் குறிப்பீடு செய்யப்படும் ஐந்தாண்டுகளைக் கொண்ட காலப் பகுதியின் தொடக்கத்திற்கு முன்னர் ஏதேனும் நட்டம் உறப் பட்டிருக்குமிடத்து, ஐந்தாண்டுகளைக் கொண்ட அத்தகைய

காலப் பகுதியின் தொடக்கத்திற்கு முன்னர் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டிற்கு அப்பொறுப்பு முயற்சியைக் கொண்டு நடாத்தும் ஆளின் மொத்த நியதிச் சட்ட வருமானத்திலிருந்து கழிக்கப்பட்டவாறான அத்தகைய நட்டத்தின் அத்தகைய பாகம், ஐந்து வரி மதிப்பீட்டாண்டுகளைக் கொண்ட அத்தகைய காலப் பகுதியின் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டிற்கு அத்தகைய பொறுப்பு முயற்சியின் இலாபங்களிலிருந்தும் வருமானத்திலிருந்தும் அத்தகைய வரி மதிப்பீட்டாண்டிற்கு அத்தகைய ஆளின் மொத்த நியதிச் சட்ட வருமானத்திலிருந்தும் அது கழிக்கப்படக்கூடிய அளவுக்குக் கழிக்கப்படுதல் வேண்டும்:

ஆயினும்—

(i) கழிப்பனவு முதலாவதாக, 16இ (1) என்னும் பிரிவில் குறிப்பீடு செய்யப்படும் ஐந்து வரி மதிப்பீட்டாண்டுகளின் முதல் வரி மதிப்பீட்டாண்டிற்கான அத்தகைய இலாபங்களினதும் வருமானத்திலிருந்தும் அத்துடன் அத்தகைய மொத்த நியதிச் சட்ட வருமானத்திலிருந்தும் செய்யப்படுதல் வேண்டும்;

(ii) ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டிற்கான கழிப்பனவு, முதலாவதாக அந்த வரி மதிப்பீட்டாண்டிற்கு அப்பொறுப்பு முயற்சியின் இலாபங்களிலும் வருமானத்திலிருந்தும் அத்துடன் அவ்வாறு கழிப்பனவு செய்யப்பட முடியாத அளவுக்கு அத்தகைய வரி மதிப்பீட்டாண்டிற்கு அத்தகைய ஆளின் மொத்த நியதிச் சட்ட வருமானத்திலிருந்தும் செய்யப்படுதல் வேண்டும்;

(iii) ஏதேனும் ஆண்டிற்கான கழிப்பனவு, அந்த வரி மதிப்பீட்டாண்டிற்கு அப்பொறுப்பு முயற்சியின் இலாபங்களினதும் வருமானத்தினதும் அத்துடன் அந்த வரி மதிப்பீட்டாண்டிற்கு அத்தகைய ஆளின் மொத்த நியதிச் சட்ட வருமானத்தினதும் கூட்டு மொத்தத்தை விஞ்சுகின்றவிடத்து விஞ்சும் தொகையானது அந்த வரி மதிப்பீட்டாண்டை உடனடுத்துறும் வரி மதிப்பீட்டாண்டிற்கு அப்பொறுப்பு முயற்சியின் இலாபங்களிலும் வருமானத்திலிருந்தும் அத்தகைய அடுத்துறும் வரி மதிப்பீட்டாண்டிற்கு அத்தகைய ஆளின் மொத்த நியதிச் சட்ட வருமானத்திலிருந்தும் அந்த வகையிலாகக் கழிக்கப்படுதல் வேண்டும்.''.

14. முதன்மைச் சட்டவாக்கத்தின் 30 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) அப்பிரிவின். (1) ஆம் உட்பிரிவில்—

(i) அவ்வுட்பிரிவின் (அஅஅ) என்னும் பந்தியில் ''1986 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்

கும் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டு தொடர்பில் இருபத்தேழாயிரம் ரூபா விடுதொகையொன்று; அத்துடன்'' என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக ''1986 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் ஆனால் 1992 ஏப்பிறில் 1 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்கும் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டு தொடர்பில் இருபத்தேழாயிரம் ரூபா விடுதொகையொன்று;'' என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(ii) அப்பந்தியின் (அஅஅ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன் மூலமும்—

''(அஅஅஅ) 1992 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டு தொடர்பில் நாற்பத்திரண்டாயிரம் ரூபா விடுதொகையொன்று; அத்துடன்''

(iii) அவ்வுட்பிரிவிற்கான காப்பு வாசகத்தில் ''(அஅ) என்னும் பந்தியில் அல்லது (அஅஅ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''(அஅ) என்னும் பந்தியில் அல்லது (அஅஅ) என்னும் பந்தியில் அல்லது (அஅஅஅ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில்—

(i) அவ்வுட்பிரிவிற்கான முதலாம் காப்பு வாசகத்தின் (உ) என்னும் பந்தியில் ''1986, ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டு'' என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, ''1986, ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர், ஆனால் 1992 ஏப்பிறில் 1 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்கும் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டு'' என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(ii) அவ்வுட்பிரிவிற்கான முதலாம் காப்பு வாசகத்தின் (உ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்தியைச் சேர்ப்பதன் மூலமும்:—

''(ஊ) 1992 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டு தொடர்பில் நாற்பத்திரண்டாயிரம் ரூபா விடுதொகையொன்று,'';

(iii) அவ்வுட்பிரிவிற்கான இரண்டாம் காப்பு வாசகத்திற்குப் பதிலாகப் பின்வரும் காப்பு வாசகத்தை இடுவதன் மூலமும்:—

''ஆயினும் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டிற்கு ஊழியர் களால் மட்டுமே உதவுதொகைகள் செலுத்தப்படும் சிக்கன, சேமிப்பு அல்லது கட்டிடச் சங்கம் அல்லது நலன்புரி நிதியம் எதனதும் வரி மதிப்பிடற்பாலதான வருமானம்—

(i) அத்தகைய வரி மதிப்பீட்டாண்டு 1987 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் ஆனால் 1992 ஏப்பிறில் 1 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்கும் வரி மதிப்பீட்டாண்டாக இருக்குமிடத்து இருபத்தே ழாயிரம் ரூபாவுக்கும்; அத்துடன்

(ii) அத்தகைய வரி மதிப்பீட்டாண்டு 1992 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங் கும் வரி மதிப்பீட்டாண்டொன்றாகயிருக்குமிடத்து நாற்பத்திரண்டாயிரம் ரூபாவுக்குச்

சமமான விடுதொகையொன்றை அதினின்று கழித்த பின்னர் அந்த வரி மதிப்பீட்டாண்டிற்கு அச்சங்கத்தின் அல்லது நிதியத் தின் வரி மதிப்பிடற்பாலதான வருமானமாதல் வேண்டும்.''.

15. முதன்மைச் சட்டவாக்கத்தின் 31 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) அவ்வுட்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில்,

(அ) அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் ''எவரேனும் ஆளி னால் முதலீடு செய்யப்பட்ட ஏதேனும் தொகை'' என்னும் சொற்களுக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்; ''எவரேனும் ஆளினால் முதலீடு செய்யப்பட்ட ஏதேனும் தொகை:

ஆயினும் அத்தகைய பொறுப்பு முயற்சியானது இப்பிரிவின் (9) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் (i) ஆம் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட கம்பனியொன்றாக இருக் குமிடத்து, 1997 மார்ச் 31 ஆம் தேதியின் பின்னர் அவ் வாறு முதலீடு செய்யப்பட்ட ஏதேனும் பணத் தொகையானது இச்சட்டத்தின் வேறு ஏதேனும் ஏற்பாட்டில் எது எவ்வா றிருப்பினும் தகைமையளிக்கும் கொடுப்பனவொன்றாகக் கரு தப்படுதலாகாது'';

(ஆ) அவ்வுட்பிரிவின் (உஉ) என்னும் பந்தியில்—

(i) அப்பந்தியின் (i) என்னும் உட்பந்தியில் 1989 ஏப் பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் அளிக்கப்படும் ஏதேனும் கடனின்'' என்னும் சொற் களுக்கும் எண்களுக்கும் பதிலாக, ''1989 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர், ஆனால் 1994 ஏப்பிறில் 1 ஆம் தேதிக்கு முன்னர்

அளிக்கப்படும் ஏதேனும் கடனின்'' என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்; அத்துடன்

(ii) அப்பந்தியின் (ii) ஆம் உட்பந்தியில் ''1989 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் செய்து கொள்ளப்பட்ட'' என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, ''1989 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் ஆனால் 1994 ஏப்பிறில் 1 ஆம் தேதிக்கு முன்னர் செய்து கொள்ளப்பட்ட'' என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(இ) அவ்வுட்பிரிவின் (ஊஊ) என்னும் பந்தியில் ''1989 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர்'' என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, ''1989 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் ஆனால் 1994 ஏப்பிறில் 1 ஆம் தேதிக்கு முன்னர்'' என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(ஈ) அவ்வுட்பிரிவின் (எஎ) என்னும் பந்தியில் ''1989 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர்'' என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, ''1989 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர், ஆனால் 1994 ஏப்பிறில் 1 ஆம் தேதிக்கு முன்னர்'' என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(உ) அவ்வுட்பிரிவின் (ஏஏ) என்னும் பந்தியில் ''தனியாள் ஒருவரால் செலுத்தப்பட்ட ஏதேனும் கட்டுப்பணம்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''தனியாள் ஒருவரால் 1992 ஏப்பிறில் 1 ஆம் தேதிக்கு முன்னர் செலுத்தப்பட்ட ஏதேனும் கட்டுப்பணம்'' என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(ஊ) அவ்வுட்பிரிவின் (ஏஏஏ) என்னும் பந்தியில் ''ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்து நாலாம் ஆண்டு ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்கும்'' என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக ''ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்து நாலாம் ஆண்டு ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் ஆனால் 1992 ஏப்பிறில் 1 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்கும்'' என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(எ) அவ்வுட்பிரிவின் (ஒ) என்னும் பந்தியில் ''செலவிடப்பட்ட ஏதேனும் பணத் தொகை'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''1992 ஏப்பிறில் 1 ஆம் தேதிக்கு முன்னர் செலவிடப்பட்ட ஏதேனும் பணத் தொகை'' என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(ஏ) அவ்வுட்பிரிவின் (ஔஔ) என்னும் பந்தியில் ''1989 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர்'' என்பது தொடக்கம் ''ஏதேனும் கூறின் 1989 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று'' என்பது வரையிலான சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக ''1989 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் ஆனால் 1994 ஏப்பிறில் 1 ஆம் தேதிக்கு முன்னர் பத்து இலட்சம் ரூபாவை விஞ்சாத ஒரு விலையில் அத்தகைய வீட்டை அல்லது தொடர்மாடியை அமைப்பதில் அல்லது 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகாரசபையின் அங்கீகாரத்துடன் நிர்மாணிக்கப்பட்ட வதிவிட இட வசதியினதும் 1973 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, இருப்பிடக் கூறுகள் சொத்தாண்மைச் சட்டப் பொருளினுள் பதிவு செய்யப்பட்டதுமான ஒரு கூட்டாட்சி ஆதனத்தில் உட்கொண்டிருக்கும் ஏதேனும் கூறின், 1989 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் ஆனால் 1994 ஏப்பிறில் 1 ஆம் தேதிக்கு முன்னர்'' என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(ஐ) அவ்வுட்பிரிவின் (ங) என்னும் பந்தியில் ''ஆள் ஒருவரினால் செலவு செய்யப்பட்டதாக'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''ஆள் ஒருவரினால் 1992 ஏப்பிறில் 1 ஆம் தேதிக்கு முன்னர் செலவு செய்யப்பட்டதாக'' என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(ஒ) அவ்வுட்பிரிவின் (ச) என்னும் பந்தியில் ''ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்தி மூன்றாம் ஆண்டு ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்கும்'' என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக ''ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்து மூன்றாம் ஆண்டு ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் ஆனால் 1992 ஏப்பிறில் 1 ஆம் தேதிக்கு முன்னர்'' என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(ஓ) அவ்வுட்பிரிவின் (ஞ) என்னும் பந்தியில் ''1987 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டில்'' என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக ''1987 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் ஆனால் 1992 ஏப்பிறில் 1 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்கும் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டில்'' என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(2) அப்பிரிவின் (5ஈ) என்னும் உட்பிரிவில் (iii) ஆம் பந்தியில் ''தகைமை பெறும் ஏதேனும் கொடுப்பனவு தொடர்பில்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''தகைமைபெறும் எல்லாக் கொடுப்பனவுகள் தொடர்பிலும்'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(3) அப்பிரிவின் (6) ஆம் உட்பிரிவில் ''அவ்வரி மதிப்பீட்டாண்டுக்கான'' என்பதிலிருந்து ''தகைமைபெறும் கொடுப்பனவு எதனதும் தொகை யானது'' என்பது வரையிலான எல்லாச் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக ''அவ்வரி மதிப்பீட்டாண்டுக்கான வரி மதிப்பிடற்குரிய வரு மானத்திலிருந்து கழிக்க முடியாததும் ஏதேனும் வரி மதிப்பீட்டாண் டில்—

(i) உட்பிரிவு (2) இன் (ஆ), (இ), (ச), (ஞ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டதும் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டில் எவரேனும் ஆளினால் செலுத்தப்பட்ட அல்லது செலுத்தப் பட்டதாகக் கருதப்பட்டதுமான அல்லது

(ii) உட்பிரிவு (2) இன் (ட) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப் பட்டதும் 1992 மார்ச்சு 31 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் முடிவடையும் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டில் எவரேனும் ஆளினால் செலுத்தப்பட்ட அல்லது செலுத்தப் பட்டதாகக் கருதப்பட்டதுமான

தகைமைபெறும் கொடுப்பனவு எதனதும் தொகையானது அத்துடன்,

(4) அப்பிரிவின் (9) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில்—

(அ) அப்பந்தியின் (i) ஆம் உட்பந்தியில் ''அமைச்சரால் கசெற்றில் வெளியிடப்படும் அறிவித்தல் மூலம், அங்கீகரிக்கப்பட்டது மான'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''அமைச்சரால் 1992 ஏப்பிறில் 1 ஆம் தேதிக்கு முன்னர் கசெற்றில் வெளி யிடப்படும் அறிவித்தல் மூலம் அங்கீகரிக்கப்பட்டதுமான'' என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(ஆ) இப்பந்தியின் (ii) ஆம் உட்பந்திக்குப் பதிலாகப் பின்வரும் உட்பந்தியை இடுவதன் மூலமும்:

''(i) மாகொழும்புப் பொருளாதார ஆணைக் குழுவால் 1992 ஏப்பிறில் 1 ஆம் தேதிக்கு முன்னர் அங்கீகரிக்கப்பட் டுள்ளதும் 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, மாகொழும்புப் பொருளாதார ஆணைக் குழுச் சட்டத் தின் 17 ஆம் பிரிவின் கீழ், 1992 செப்மெடபர் 1 ஆம் தேதிக்கு முன்னர், மாகொழும்புப் பொருளாதார ஆணைக் குழுவால் அத்தகைய அங்கீகாரத்தின் விளை வாக அதனோடு உடன்படிக்கை செய்து கொள்ளப்பட் டதுமான கம்பனி ஒன்று எனப் பொருளாகும்.''.

16. முதன்மைச் சட்டவாக்கத்தின் 32 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில்—

(அ) அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் (vi) ஆம் உட்பந்தியில் ''1988 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டு தொடர்பாக,'' என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக ''1988 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் ஆனால் 1992 ஏப்பிறில் 1 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்கும் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டு தொடர்பாக'' என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(ஆ) அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் (vi) ஆம் உட்பந்தியை உடனடுத்துப் பின்வரும் உட்பந்தியைச் சேர்ப்பதன் மூலமும்:

''(vii) 1992 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டு தொடர்பில் இச்சட்டத்திற்கான முதலாம் அட்டவணையின் பாகம் 11உ என்பதில் குறித்துரைக்கப்பட்ட தோதான வீதங்களில்;'' அத்துடன்

(இ) அவ்வுட்பிரிவிற்கான காப்பு வாசகத்தில்—

(i) அக்காப்பு வாசகத்தின் (iii) ஆம் உட்பந்தியில் ''இருபத்து நாலாயிரம் ரூபாவையும்; அத்துடன்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''இருபத்து நாலாயிரம் ரூபாவையும்'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(ii) அக்காப்பு வாசகத்தின் (iv) ஆம் உட்பந்தியில் ''1986 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டிற்கு இருபத்தேழாயிரம் ரூபாவை'' என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, ''1986 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் ஆனால் 1992 ஏப்பிறில் 1 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்கும் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டிற்கு இருபத்தேழாயிரம் ரூபாவையும்; அத்துடன்'' என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்; அத்துடன்

(iii) அக்காப்பு வாசகத்தின் (iv) ஆம் உட்பந்தியை உடனடுத்துவரும் பின்வரும் உட்பந்தியைச் சேர்ப்பதன் மூலமும்—

''(v) 1992 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டிற்கு நாற்பத்திரண்டாயிரம் ரூபாவையும்;''

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில்—

(அ) (ஈ) என்னும் பந்தியில் ''ஏதேனும் ஊழியத்திலிருந்து அவர் ஓய்வுபெறும் நேரத்தில்;'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''ஏதேனும் ஊழியத்திலிருந்து அவர் ஓய்வுபெறும் நேரத்தில் அல்லது அடுத்துறும் ஏதேனும் நேரத்தில்'' என்னும் சொற் களை இடுவதன் மூலமும்;

(ஆ) ''முன்னர் சொல்லப்பட்டவாறான ஏதேனும் பணத்தொகை யானது அத்தகைய தனியாளின்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''முன்னர் சொல்லப்பட்டவாறான ஒவ்வொரு பணத்தொகையும் அத்தகைய தனியாளின்'' என்னும் சொற் களை இடுவதன் மூலமும்;

(3) அப்பிரிவில் (3ஆஆ) என்னும் உட்பிரிவினை நீக்கஞ் செய்வதன் மூல மும்;

(4) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் உட்பிரிவைப் புகுத்துவதன் மூலமும்:—

''(4அ) ஏதேனும் தரும நிறுவனம் 1991 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரி மதிப் பீட்டாண்டில் பிணியாளர்களுக்கு அல்லது உதவி தேவைப் படுபவருக்கு அமைப்பு முறைக்குட்பட்ட பராமரிப்பை வழங்கு மிடத்தும் அத்துடன் அத்தகைய பராமரிப்பை வழங்குவதற் கான செலவு அத்தகைய தரும நிறுவனத்தினாலேயே ஏற்கப் படுகிறது என ஆணையாளர் தலைமையதிபதி திருப்திப்படு மிடத்தும் அத்தகைய தரும நிறுவனத்தால் அதன் இலாபங் களும் வருமானமும் தொடர்பாகச் செலுத்தப்படற்பாலதான வரியைக் குறைத்தல் அல்லது தணித்தல் விடயத்தின் எல்லாச் சூழ்நிலைகளிலும் நீதியானதும், ஒப்புரவானது என ஆணை யாளர் தலைமையதிபதிக்குத் தோன்றுமாயின் ஆணையாளர் தலைமையதிபதி; அவர் குறித்துரைக்கக் கூடியவாறான அத் தகைய நிபந்தனைகளுக்கமைய அத்தகைய வரி மதிப்பீட் டாண்டிற்கு அத்தகைய தரும நிறுவனத்தால் அதன் இலாபங் களும், வருமானமும் தொடர்பில் செலுத்தப்படற்பாலதான வரியைக் குறைக்கலாம் அல்லது தணிக்கலாம்'';

அத்துடன்

(5) அப்பிரிவின் (6) ஆம் உட்பிரிவில் ''1987 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்குவதான ஒவ்வொரு வரி மதிப்பீட் டாண்டிற்கும்'' என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, ''1987 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் ஆனால் 1992 ஏப்பிறல் 1 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்குவதான ஒவ்வொரு வரிமதிப்பீட்டாண்டிற்கும்'' என்னும் சொற்களையும் எண் களையும் இடுவதன் மூலமும்.

17. முதன்மைச் சட்டவாக்கத்தின் 32உஉ என்னும் பிரிவு அப்பிரிவில் ''ஆயிரத்து ஐந்நூறு ரூபாவிற்குச் சமமான ஒரு தொகை அல்லது ஊழியத்திலிருந்து இலாபங்களுக்கு ஏற்றிக் கூறப்படற்பாலதான வருமான வரித் தொகை என்பவற்றுள் எது குறைவானதோ அது கழிக்கப்படுதல் வேண்டும்'' என்னும் சொற்களுக்குப் பதிலாகப் பின்வரும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

பின்வரும் தொகைகளுக்கு, அதாவது

(அ) (i) அத்தகைய வரி மதிப்பீட்டாண்டு 1991 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று தொடங்குகின்ற வரி மதிப்பீட்டாண்டாயின் ஆயிரத்து ஐந்நூறு ரூபா; அத்துடன்

(ii) அத்தகைய வரி மதிப்பீட்டாண்டு 1992 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டாயின் ஆயிரத்து எண்ணூறு ரூபா; அல்லது

(ஆ) அந்த வரி மதிப்பீட்டாண்டிற்கு ஊழியத்திலிருந்து இலாபங்களுக்கு ஏற்றிக் கூறப்படற்பாலதான வருமான வரித் தொகை என்பவற்றுள் எத்தொகை குறைவானதோ அத்தொகைக்கு, ஆகியவற்றுக்குச் சமமான ஒரு தொகை.''.

18. முதன்மைச் சட்டவாக்கத்தின் 33 ஆம் பிரிவு அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது—

(1) அப்பந்தியின் (V) ஆம் உட்பந்தியில், ''1988 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர்'' என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, ''1988 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர், ஆனால் 1992 ஏப்பிறில் 1 ஆம் தேதிக்கு முன்னர்'' என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(2) அப்பந்தியின் (V) ஆம் உட்பந்தியை உடனடுத்துப் பின்வரும் உட்பந்தியைச் சேர்ப்பதன் மூலமும்:—

''(vi) 1992 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டிற்கு வரி விதிக்கப்படற் பாலதான அதன் வருமானம் மூன்று இலட்சத்து மூவாயிரத்து முப்பது ரூபாவை விஞ்சாததும்.''.

19. முதன்மைச் சட்டவாக்கத்தின் 38 ஆம் பிரிவு, அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவில் ''உரித்துடையவராதல் வேண்டும்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''உரித்துடையவராதல் வேண்டும்:

ஆயினும், அத்தகைய ஆள் வதிவுள்ள ஆளொருவராக இல்லாதவிடத்து அவர் அவரால் செலுத்தப்படற்பாலதான வரியிலிருந்து அத்தகைய கூற்றில் காட்டப்படும் முற்பணக் கம்பனி வரியைக் கழிப்பதற்கு உரித்துடையவராதலாகாது'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

20. முதன்மைச் சட்டவாக்கத்தின் 41 ஆம் பிரிவு அப்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் ''ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்து நாலாம் ஆண்டு ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர்'' என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, ''ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்து நாலாம் ஆண்டு ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர், ஆனால் 1992 ஏப்பிறில் 1 ஆம் தேதிக்கு முன்னர்'' என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம்.

21. முதன்மைச் சட்டவாக்கத்தின் 73 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1அ) என்னும் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) அவ்வுட்பிரிவின் (iv) ஆம் பந்தியில் ''ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்தாறாம் ஆண்டு ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்கும் வரி மதிப்பீட்டாண்டு எதற்கும் இருபத்தேழாயிரம் ரூபாவையும்'' என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, ''ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்தாறாம் ஆண்டு ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர், ஆனால் 1992 ஏப்பிறில் 1 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்கும் வரி மதிப்பீட்டாண்டு எதற்கும் இருபத்தேழாயிரம் ரூபாவையும்; அத்துடன்'' என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அவ்வுட்பிரிவின் (iv) ஆம் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்தியைச் சேர்ப்பதன் மூலமும்:—

''(v) 1992 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டிற்கு நாற்பத்திரண்டாயிரம் ரூபாவையும்.''.

22. முதன்மைச் சட்டவாக்கத்தின் 84அ என்னும் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவுக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுக—

''(1) இரண்டாம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட எவரேனும் ஆள் அல்லது ஏதேனும் பங்குடைமை, (2) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட அவரது அல்லது அதன் வருமானம் தொடர்பில் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டிற்கு இலங்கையில் வருமான வரியையும் நேரொத்த காலப் பகுதிக்கு வேறு ஏதேனும் நாட்டில் வருமான வரியையும் செலுத்தியுள்ளாரென அல்லது செலுத்தியுள்ளதென அல்லது செலுத்த ஆளாகியுள்ளாரெனச் செலுத்த ஆளாகியுள்ளதென ஆணையாளர் தலைமையதிபதி திருப்தியுறும் வகையில் எண்பிக்குமிடத்து, அப்போது அத்தகைய ஆள் அல்லது பங்குடைமை, அத்தகைய ஆளினால் அல்லது பங்குடைமையால் இலங்கையில் செலுத்தப்படற்பாலதான வருமான வரியிலிருந்து, அத்தகைய காலப் பகுதிக்கு அத்தகைய வேறு நாட்டில் அவரால் அல்லது பங்குடைமையால் செலுத்தப்படற்பாலதான வருமானவரிக்கு மேலாக அத்தகைய வருமானம் தொடர்பில் (இச்சட்டத்தின் கீழ் ஏதேனும் நிவாரணம் வழங்கப்படுவதற்கு முன்னர்) அத்தகைய ஆளினால் அல்லது பங்குடைமை

யினால் இலங்கையில் செலுத்தப்படற்பாலதான வருமான வரியின் மிகை ஏதும் இருப்பின் அதற்குச் சமமான தொகையைக் கொண்ட நிவாரணத்திற்கு உரித்துடையவராதல் வேண்டும்'' என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவுக்குப் பதிலாகப் பின்வரும் உட்பந்தியை இடுவதன் மூலமும்:—

''(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள்—

(அ) (i) கசெற்றில் வெளியிடப்படும் அறிவித்தல் மூலம் ஆணையாளர் தலைமையதிபதியால் குறித்துரைக்கப்பட்ட துறைகளில் ஆலோசனைச் சேவையை வழங்குகின்ற வருமான அல்லது வழங்குவதுமான ஆளொருவராக வுள்ள வதிவற்ற எவரேனும் ஆளுக்கு அல்லது இலங்கைக்கு வெளியே பதிவு செய்யப்பட்ட ஏதேனும் பங்குடைமைக்கு; அல்லது

(ii) 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க மா கொழும்பு பொருளாதார ஆணைக் குழுச் சட்டத்தின் 17 ஆம் பிரிவின் கீழ் எந்தக் கம்பனியுடன் மா கொழும்புப் பொருளாதார ஆணைக் குழு உடன்படிக்கையொன்றைச் செய்து கொண்டுள்ளதோ அந்தக் கம்பனியொன்றாக இருப்பதுமான ஏதேனும் வதிவற்ற கம்பனிக்கு இலங்கையில் கட்டிடக் கலை சார்ந்த, பொறியியல், கணிய மதிப்பீடு அல்லது நிர்மாண முகாமைத்துவ சேவைகளையும் அத்துடன் அவற்றிற்குத் துணை நிலையாகக் கூடியவாறான அத்தகைய வேறு சேவைகளையும் வழங்குபவரும் அல்லது வழங்குவதுமான அத்தகைய உடன்படிக்கைக்கு இணங்க அத்தகைய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட காலப் பகுதிக்குள்:—

(அ) கொள்வனவு செய்யப்பட்ட அல்லது நிர்மாணிக்கப்பட்ட ஏதேனும் கட்டிடத்தினதும் அத்துடன் கொள்வனவு செய்யப்பட்ட ஏதேனும் காணியின், பொறியின், பொறித் தொகுதியின் அல்லது தளபாடங்களின்; அல்லது

(ஆ) பொறுப்பு முயற்சியின் உபயோகத்திற்கென (அ) என்னும் பந்தியில் உட்படுத்தப்படாத ஏதேனும் சொத்தைக் கொள்வதற்குமான

செலவை ஈடுசெய்வதற்கு ஐம்பது மில்லியனுக்குக் குறையாத ஐக்கிய அமெரிக்க இராச்சிய டொலர்களை அல்லது அதற்குச் சமமானதான வேறு ஏதேனும் வெளிநாட்டு நாணயத்தினை இலங்கையில் முதலீடு செய்துள்ள அல்லது முத

வீடு செய்ய உடன்பட்டுள்ள எவரேனும் வதி வற்ற ஆளுக்கும் அல்லது இலங்கைக்கு வெளியே பதிவு செய்யப்பட்டுள்ள ஏதேனும் பங்குடமைக் கும்

(ஆ) (i) 1991 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் (அ) என்னும் பந்தியின் (1) ஆம் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்படும் சேவைகளை வழங்குவதினி ன்று

அந்த உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்படும் எவ ரேனும் ஆளினால் அல்லது ஏதேனும் பங்குடைமை யால்

அல்லது

(ii) 1992 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் (அ) என்னும் பந்தியின் (ii) ஆம் உட் பந்தியில் குறிப்பீடு செய்யப்படும் ஏதேனும் சேவையை வழங்குவதினின்று

அந்த உட்பந்தியினால் குறிப்பீடு செய்யப்படும் எவரேனும் ஆளினால் அல்லது ஏதேனும் பங்குடைமை யால்

இலங்கையில் எழுகின்ற அல்லது இலங்கையிலிருந்து பெறப்படுகின்ற இலாபங்களிலும் வருமானத்தின தும் தொடர்பிலும்

ஏற்புடையதாதல் வேண்டும்.''.

23. முதன்மைச் சட்டவாக்கத்தின் 92 ஆம் பிரிவு அப்பிரிவின் (2அ) என்னும் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:—

''(2அஅ) 1992 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப்பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டிற்கு (1) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட தேதியன்று அல்லது அதற்கு முன்னர் வருமானத்தின் அல்லது செல்வத்தின் விவரத் திரட் டொன்றைக் கொடுத்துதவும் எவரேனும் ஆள் (2அ) என்னும் உட்பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் வருமானத்தின் அல்லது செல்வத் தின் விவரத் திரட்டு ஒன்றைக் கொடுத்துதவவில்லையெனக் கருதப்படுமிடத்து, வரி மதிப்பீட்டாளர் ஒருவர், அந்த வரி மதிப் பீட்டாண்டை உடனடுத்துறும் வரி மதிப்பீட்டாண்டின் முடிவி லிருந்து முப்பது நாட்களுக்குள் அத்தகைய ஆளினால் கொடுத் துதவப்பட்ட விவரத் திரட்டு, ஆணையாளர் தலைமையதிபதி யினால் குறித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய படிவத்தில்

இல்லை என அல்லது அத்தகைய விவரங்களைக் கொண்டிருக்க வில்லையென அத்தகைய ஆளுக்கு எழுத்தில் அறிவித்தல் வேண்டும்.''.

24. முதன்மைச் சட்டவாக்கத்தின் 92அ என்னும் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் அத்தகைய உட்பிரிவிற்கான காப்பு வாசகத்திற்குப் பதிலாகப் பின்வரும் காப்பு வாசகத்தை இடுவதன் மூலமும்:—

''ஆயினும்—

(அ) அத்தகைய வர்த்தகம், வியாபாரம், உயர் தொழில் அல்லது வாழ்க்கைத் தொழில் ஏதேனும் கம்பனியால் கொண்டு நடாத்தப் படுமிடத்து அல்லது பிரயோகிக்கப்படுமிடத்து அத்தகைய கம்பனியானது, இப்பிரிவின் கீழ் அறிவித்தலொன்று அதற்குக் கொடுக்கப்பட்டிருக்கவில்லை என்பது எவ்வாறிருப்பினும், 1992 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்கும் வரி மதிப்பீட்டாண்டு ஒவ்வொன்றுக்கும் அல்லது வேறு எந்தக் காலப் பகுதி தொடர்பில் அந்த வரி மதிப்பீட்டாண்டிற்கான நியதிச் சட்ட வருமானம் கணிக்கப்படுகின்றதோ அந்த வேறு ஏதேனும் காலப் பகுதிக்கு ஆணையாளர் தலைமையதிபதியால் கசெற்றில் வெளியிடப்படும் அறிவித்தல் மூலம் குறித்துரைக்கப் படக்கூடியவாறான அத்தகைய கூற்றுக்களையும் அத்தகைய அட்டவணைகளையும் கொடுத்துதவுதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) அத்தகைய வர்த்தகம், வியாபாரம், உயர் தொழில் அல்லது வாழ்க்கைத் தொழில், ஏதேனும் பங்குடைமையால் அல்லது ஏதேனும் கம்பனியல்லாத வேறு எவரேனும் ஆளினால் கொண்டு நடாத்தப்படுமிடத்தும் பிரயோகிக்கப்படுமிடத்தும் அத்துடன், 1991 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டிற்கு அல்லது வேறு எந்தக் காலப் பகுதி தொடர்பில் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டிற்கான நியதிச் சட்ட வருமானம் கணிக்கப்படுகின்றதோ அந்த வேறு ஏதேனும் காலப் பகுதிக்கு அத்தகைய வர்த்தகத்தின், வியாபாரத்தின், உயர் தொழிலின் அல்லது வாழ்க்கைத் தொழிலின் மொத்த விற்பனை வரவு ஐந்து மில்லியன் ரூபாவை விஞ்சுகின்றவிடத்தும், அத்தகைய பங்காளர் அல்லது அத்தகைய ஆள், இப்பிரிவின் கீழ் அறிவித்தலொன்று அவருக்குக் கொடுக்கப்பட்டிருக்கவில்லை என்பது எவ்வாறிருப்பினும் விடயத்திற்கேற்ப அத்தகைய வரி மதிப்பீட்டாண்டிற்கு அல்லது அத்தகைய காலப் பகுதிக்கு ஆணையாளர் தலைமையதிபதியால் கசெற்றில் வெளியிடப்படும் அறிவித்தல் மூலம் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய கூற்றுக்களை அல்லது அட்டவணைகளைக் கொடுத்துதவுதல் வேண்டும்.''.

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில்

(அ) அவ்வுட்பிரிவிற்கான காப்பு வாசகத்தில், ''1991 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டிற்கு'' என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, ''1991 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று தொடங்கும் வரி மதிப்பீட்டாண்டிற்கு'' என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(ஆ) அவ்வுட்பிரிவிற்கான காப்பு வாசகத்தை உடனடுத்து மேலும் பின்வரும் காப்பு வாசகத்தைச் சேர்ப்பதன் மூலமும்:—

''ஆயினும் மேலும், 1992 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டிற்கு அல்லது வேறு எந்தக் காலப் பகுதி தொடர்பில் அந்த வரி மதிப்பீட்டாண்டிற்கான வருமானம் கணிக்கப்படுகின்றதோ அந்த வேறு ஏதேனும் காலப் பகுதிக்குரிய வருமான விவரத் திரட்டொன்றுக்கு ஆதாரமாக—

(i) ஏதேனும் கம்பனியால் கொண்டு நடாத்தப்படும் அல்லது பிரயோகிக்கப்படும் ஏதேனும் வர்த்தகம், வியாபாரம், உயர் தொழில் அல்லது வாழ்க்கைத் தொழில் அத்தகைய கம்பனியால் கொடுத்துதவப்பட்ட; அல்லது

(ii) ஏதேனும் பங்குடமையின் எவரேனும் பங்காளரால் அல்லது கம்பனியொன்றல்லாத எவரேனும் ஆளினால் கொண்டு நடாத்தப்படும் அல்லது பிரயோகிக்கப்படும் ஏதேனும் வர்த்தகம், வியாபாரம், உயர் தொழில் அல்லது வாழ்க்கைத் தொழில் தொடர்பில் அத்தகைய பங்குடைமையால் அல்லது அத்தகைய ஆளினால் கொடுத்துதவப்பட்ட கணக்குக் கூற்றொன்றானது, அத்தகைய வர்த்தகத்தின், வியாபாரத்தின், உயர் தொழிலின் அல்லது வாழ்க்கைத் தொழிலின் மொத்த விற்பனை வரவு அந்த வரி மதிப்பீட்டாண்டிற்கு அல்லது அக்காலப் பகுதிக்கு ஐந்து மில்லியன் ரூபாவை விஞ்சுகின்றவிடத்து

அங்கீகரிக்கப்பட்ட கணக்காளர் ஒருவரால் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வொன்றின் அடிப்படையில் தயாரிக்கப்படுதல் வேண்டும்.''.

25. முதன்மைச் சட்டவாக்கத்தின் 96 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:—

''விவரத்திரட்டொன்றைக் கொடுத்துதவத் தவறிமைக்காகத் தண்டம் விதிப்பதற்கு ஆணையாளர் தலைமையதிபதிக்குள்ள தத்துவம்.

96. (1) ஆளெவரும்—

(i) அவரது வருமானம், செல்வம் அல்லது கொடை பற்றியும் அத்துடன் அவருக்கு ஒரு பிள்ளையிருப்பின் அத்தகைய பிள்ளையின் வருமானம் அல்லது செல்வம் பற்றியும் ஒரு விவரத் திரட்டைக் கொடுத்

துதவுமாறு அவரைத் தேவைப்படுத்தி 92 (2) ஆம் பிரிவின் கீழ் அவருக்கு வரி மதிப்பீட்டாளரொரு வரால் எழுத்துமூலமாகக் கொடுக்கப்பட்ட எழுத்தி லான அறிவித்தலொன்றுக்கு இணங்கியொழுகத் தவறுமிடத்து, அல்லது

(ii) அவர் 92 (1) ஆம் பிரிவின் கீழ்க் கொடுத்துதவும் படி தேவைப்படுத்தப்பட்ட விவரத்திரட்டொ ன்றை அப்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட காலத்திற் குள் கொடுத்துதவத் தவறுகின்றவிடத்து, அல்லது

(iii) எவரேனும் தொழில் தருநர் 103 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் ஏதேனும் தேவைப்பாட்டிற்கு இண ங்கியொழுகத் தவறுகின்றவிடத்து,

ஆணையாளர் தலைமையதிபதி—

(அ) அத்தகைய ஆளின்மீது அல்லது அத்தகைய தொழில் தருநர் மீது ஐம்பதினாயிரம் ரூபாவை விஞ்சாதவொரு பணத்தொகையிலான ஒரு தண்டத்தை விதிக்கலாம் என் பதுடன் அத்தகைய தண்ட விதிப்பனவு பற்றிய எழுத்தி லான அறிவித்தலையும் அத்தகைய ஆளுக்கு அல்லது தொழில் தருநருக்குக் கொடுக்கலாம்; அத்துடன்

(ஆ) எழுத்திலான அறிவித்தல் மூலம் அத்தகைய அறிவித்த வில் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய காலப் பகுதிக்குள்—

(i) அத்தகைய தண்டத்தைக் கொடுக்கும்படியும்; அத் துடன்

(ii) அத்தகைய விவரத் திரட்டு கொடுத்துதவப்பட் டிராதவிடத்து அத்தகைய விவரத் திரட்டைக் கொடுத்துதவுமாறும் அல்லது அத்தகைய தேவைப் பாடு இணங்கியொழுகப்பட்டிராதவிடத்து அத் தகைய தேவைப்பாட்டிற்கு இணங்கியொழுகுமா றும்

அத்தகைய ஆளை அல்லது அத்தகைய தொழில் தருநரைத் தேவைப்படுத்தலாம்.

(2) விடயத்திற்கேற்ப எவரேனும் ஆள் அல்லது எவரேனும் தொழில் தருநர் அவரது கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட சூழ் நிலைகளின் காரணமாகவே விடயத்திற்கேற்ப அத்தகைய விவரத் திரட்டைக் கொடுத்துதவ அல்லது அத்தகைய தேவைப்பாட்டிற்கு இணங்கியொழுகத் தவறினாரெனவும், விடயத்திற்கேற்ப அத் தகைய விவரத் திரட்டைக் கொடுத்துதவியுள்ளார் அல்லது அத் தகைய தேவைப்பாட்டிற்கு இணங்கியொழுகியுள்ளார் என ஆணையாளர் தலைமையதிபதி திருப்தியுறும் வகையில் எண்பிப்

பாராயின் இப்பிரிவின் கீழ் ஆணையாளர் தலைமையதிபதி, விடயத்திற்கேற்ப அத்தகைய ஆளின்மீது அல்லது அத்தகைய தொழில் தருநர்மீது விதிக்கப்பட்ட தண்டத்தைக் குறைக்கலாம் அல்லது விட்டுவிடலாம்.

(3) ஓராம் உட்பிரிவின் கீழ் எவரேனும் ஆளின் மீது அல்லது தொழில் தருநர்மீது தண்டமொன்று விதிக்கப்படு[illegible]. அத்தகைய ஆள் அல்லது அத்தகைய தொழில் தருநர் அவ்வறிவித்தல் அல்லது தேவைப்பாடு தொடர்பில் 151 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் கீழ் அல்லது (ஈ) என்னும் பந்தியின் கீழ் அல்லது 151 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (iii) ஆம் பந்தியின் கீழ் ஏதேனும் தவறுக்கு வழக்குத் தொடரப் படுவதற்கு ஆளாதல் ஆகாது.''.

26. முதன்மைச் சட்டவாக்கத்தின் 110 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:—

தவறுகைக்கான தண்டம்

110. இவ்வத்தியாயத்தின் ஏற்பாடுகளின் கீழ் தொழில் தருநர் ஒருவரினால் ஏதேனும் கொடுப்பனவுக் காலப் பகுதிக்குக் கொடுபடற்பாலதான வருமான வரி எதுவும் தவணை தவறுகைக் குள்ளாகுமிடத்து அத்தகைய தொழில் தருநர்—

(அ) அத்தகைய கொடுப்பனவுக் காலப் பகுதியானது 1992 மார்ச் 31 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் முடிவடையும் ஏதேனும் கொடுப்பனவு காலப் பகுதியாக இருக்குமிடத்து அத்தகைய வரிக்கு மேலதிகமாக—

(i) அத்தகைய வரியின் பத்துச் சதவீதத்துக்குச் சமமான தொகையொன்றைத் தண்டமாகவும்; அத்துடன்

(ii) தவணை தவறுகைக்குள்ளாகத் தொடங்கியுள்ள தன் பின்னர் ஆறு மாதங்கள் முடிவடையு முன்னர் அத்தகைய வரி கொடுக்கப்படாதவிடத்து அத்தகைய வரியின் பதினைந்து சதவீதத்துக்குச் சமமான தொகையொன்றை மேலதிகத் தண்டமாகவும்; அத்துடன்

(ஆ) அத்தகைய கொடுப்பனவுக் காலப் பகுதியானது, 1992 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் கொடுப்பனவுக் காலப் பகுதியாக இருக்குமிடத்து, அத்தகைய வரிக்கு மேலதிகமாக—

(i) தண்டமாக அத்தகைய வரியின் பத்துச் சத வீதத்துக்குச் சமமான தொகையொன்றையும்; அத்துடன்

(ii) தவணை தவறுகைக்குள்ளாகத் தொடங்கியுள்ள தன் பின்னர் முப்பது நாட்கள் முடிவடையுமுன்னர் அத்தகைய வரி கொடுக்கப்படாதவிடத்து, அது தவணை தவறுகைக்கு உள்ளாகியிருக்கும் முப்பது நாட்களைக் கொண்ட மேலதிகக் காலப் பகுதி அல்லது அதன் பாகம் ஒவ்வொன்று தொடர்பிலும் ஒரு மேலதிகத் தண்டமாகவும் தவறுகையிலுள்ள வரியின் இரண்டு சத வீதத்துக்குச் சமமான ஒரு தொகையையும்

செலுத்துதல் வேண்டும்:

ஆயினும்—

(அ) எவரேனும் தொழில் தருநர் அவ்வாறு செலுத்தத் தவறியமை, அவரது கட்டுப்பாட்டுக்கப்பாற்பட்ட சூழ்நிலைகளினால் ஏற்பட்டதெனவும், தவணை தவறுகைக்குள்ளான வரித் தொகையினைத் தாம் செலுத்தியுள்ளாரெனவும் அத்தகைய கொடுப்பனவைச் செய்யும் நேரத்தில் கொடுத்துதவுமாறு தேவைப்படுத்தப்பட்ட வெளிப்படுத்துகையைக் கொடுத்துதவியுள்ளாரெனவும் ஆணையாளர் தலைமையதிபதி திருப்தியுறுமளவுக்கு எண்பிப்பாராயின், ஆணையாளர் தலைமையதிபதி, அத்தகைய தொழில் தருநரால் செலுத்தப்படற்பாலதான ஏதேனும் அத்தகைய தண்டத் தொகையை விட்டுவிடலாம் அல்லது குறைக்கலாம்;

(ஆ) 1992 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் கொடுப்பனவுக் காலப் பகுதிக்குத் தவணை தவறுகையிலுள்ள வரி தொடர்பில் இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளின் கீழ்த் தண்டமாகச் செலுத்தப்படற்பாலதான மொத்தத் தொகை, தவணை தவறுகையிலுள்ள வரியின் ஐம்பது சத வீதத்தினை விஞ்சுதல் ஆகாது''.

27. முதன்மைச் சட்டவாக்கத்தின் 113அ என்னும் பிரிவு அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) அவ்வுட்பிரிவில் ''இச்சட்டத்தின் கீழ் வருமானவரி விதிக்கப்படுவதற்குரியவராயிருந்து கொண்டு அவரது சொந்தப் பெயரில் அல்லது வேறெவரேனும் ஆளின் பெயரில் அதில் வைப்பிலிட்ட பணத்தொகை மீது 1986 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரி மதிப்பிட்டாண்டில் அதனால் கொடுபடற்பாலதான வட்டியிலிருந்து அவ்வாறு கொடுபடற்பாலதான வட்டியின் இருபது சதவீதம் என்ற வீதப்படி வருமான வரியைக் கழித்தல் வேண்டும்'' என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாகப் பின்வரும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்:—

''இச்சட்டத்தின் கீழ் வருமான வரி விதிக்கப்படுவதற்குரியவரா யிருக்கும் ஆளொருவரால், அவரது சொந்தப் பெயரில் அல்லது, வேறெவரேனும் ஆளின் பெயரில் அதில் வைப்பிலிடப்பட்ட ஏதேனும் பணத்தொகைமீது ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டில்

(i) அத்தகைய வரி மதிப்பீட்டாண்டு, 1986 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர், ஆனால் 1992 ஏப்றில் 1 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்கும் வரி மதிப்பீட்டாண்டாக இருக்குமிடத்து அவ்வாறு கொடுக்கப்படற்பாலதான வட்டியின் இருபது சதவீதம் என்ற வீதப்படியும், அத்துடன்

(ii) அத்தகைய வரி மதிப்பீட்டாண்டு, 1992 ஏப்றில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டாக இருக்குமிடத்து அவ்வாறு கொடுக்கப் படற் பாலதான வட்டியின் பதினைந்து சதவீதம் என்ற வீதப் படியும்

வருமான வரியைக் கழித்தல் வேண்டும்;''.

(2) அவ்வுட்பிரிவிற்கான காப்பு வாசகத்தில் ''20 சதவீதம்'' என்னும் சொல்லுக்கும் எண்ணுக்கும் பதிலாக, அக்காப்பு வாசகத்தில் அச் சொல்லும் எண்ணும் எங்கெங்கு காணப்படுகின்றனவோ அங்கங்கெல் லாம் ''15 சதவீதம்'' என்னும் சொல்லையும், எண்ணையும் இடுவதன் மூலமும்.

28. முதன்மைச் சட்டவாக்கத்தின் 113ஏ என்னும் பிரிவு இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:—

'தவறுகைக்கான தண்டம்.

113ஏ. இவ்வத்தியாயத்தின் ஏற்பாடுகளின் கீழ் ஒரு வங்கி யால் அல்லது நிதி நிறுவனத்தினால் கொடுபடற்பாலதான வரு மான வரி எதுவும் தவறை தவறுகைக்குள்ளாகியிருக்குமிடத்து அத்தகைய வங்கி அல்லது நிதி நிறுவனம்—

(அ) அத்தகைய வரி மதிப்பீட்டாண்டு, 1992 மார்ச் 31 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் முடிவடையும் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டாக இருக்குமிடத்து, அத் தகைய வரியோடு மேலதிகமாக—

(i) ஒரு தண்டமாக, அத்தகைய வரியின் பத்துச் சத வீதத்துக்குச் சமமான பணத் தொகையொன்றை யும்;

(ii) அத்தகைய வரி, அது தவணை தவறுகையில் இருக் கத் தொடங்கியுள்ளதன் பின்னர் ஆறு மாதங்கள் கழியுமுன் செலுத்தப்படாதிருக்குமிடத்து ஒரு மேல திகத் தண்டமாக அத்தகைய வரியின் பதினைந்து சத வீதத்திற்குச் சமமான பணத்தொகையொன் றையும்,

செலுத்துதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) அத்தகைய வரி மதிப்பீட்டாண்டு, 1992 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டாக இருக்குமிடத்து, அத்தகைய வரியுடன் மேலதிகமாக—

(i) தண்டமொன்றாக அத்தகைய வரியின் பத்துச் சத வீதத்துக்குச் சமமான பணத்தொகையொன்றையும்,

(ii) அத்தகைய வரி, அது தவணை தவறுகையில் இருக்கத் தொடங்கியுள்ளதன் பின்னர் முப்பது நாட்கள் கழியு முன்னர் செலுத்தப்படாதிருக்குமிடத்து ஒரு மேலதிகத் தண்டமாக, அது தவணை தவறுகைக்குள்ளாகியிருக்கும் முப்பது நாட்களைக் கொண்ட மேலதிக காலப் பகுதி அல்லது அதன் பாகம் ஒவ்வொன்று தொடர்பிலும் தவணை தவறுகையிலுள்ள வரியின் இரண்டு சதவீதத்துக்குச் சமமான ஒரு தொகையையும்

செலுத்துதல் வேண்டும்;:

ஆயினும்—

(அ) அத்தகைய வங்கி அல்லது நிதி நிறுவனம் அதன் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட சூழ்நிலைகளினாலேயே செலுத்தத் தவறியதெனவும் அத்தகைய கொடுப்பனவின் நேரத்தில் கொடுத்துதவப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட வெளிப்படுத்துகையைக் கொடுத்துதவியுள்ளதெனவும் ஆணையாளர் தலைமையதிபதி திருப்தியுறும் அளவுக்கு எண்பிக்குமாயின் ஆணையாளர் தலைமையதிபதி அத்தகைய வங்கியால் அல்லது நிதி நிறுவனத்தினால் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் அத்தகைய தண்டத்தை விட்டுவிடலாம் அல்லது குறைக்கலாம், அத்துடன்

(ஆ) 1992 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டிற்கான வரி தொடர்பில் இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளின் கீழ்த் தண்டமாகக் கொடுக்கப்படற்பாலதான மொத்தத் தொகையானது, தவணை தவறுகையிலுள்ள வரியின் ஐம்பது சத வீதத்தை விஞ்சுதலாகாது.''.

29. முதன்மைச் சட்டவாக்கத்தின் 113ஒ என்னும் பிரிவு ''வைப்புவாயிலாகப் பணத்தை ஏற்றுக் கொள்வதனையும், அத்துடன் அதன் மீதான வட்டிக் கொடுப்பனவையும்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''வைப்புவாயிலாக அல்லது தொகுதிக் கடன், முறி என்ற வகையில் அல்லது வேறு

ஏதேனும் வகையில் கடன் வாயிலாகப் பணத்தை ஏற்றுக் கொள்வதனையும் அத்துடன் அதன் மீதான வட்டிக் கொடுப்பனவையும்'' என்னும் சொற்களை இடுவதன் மூலம்.

30. அத்தியாயம் XVஅ என்பதனை உடனடுத்துப் பின்வரும் அத்தியாயம் இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன் அது முதன்மைச் சட்டவாக்கத்தின் அத்தியாயம் XVஆ என்றாற்போன்று பயனுறுதலும் வேண்டும்:—

அத்தியாயம் XVஆ

குறித்துரைக்கப்பட்ட ஆட்களினால் செலுத்தப்பட்ட குறித்துரைக்கப்பட்ட கட்டணங்களிலிருந்து வருமான வரியைக் கழித்தல்.

குறித்துரைக்கப் பட்ட ஆட்கள் குறித் துரைக்கப்பட்ட கட்ட ணங்களிலிருந்து வருமான வரியைக் கழித்தல்.

113ஒ. (1) குறித்துரைக்கப்பட்ட ஒவ்வோராளும் இவ்வத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கமைய, ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட கட்டணம் செலுத்தப்படும் நேரத்தில் 1992 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டில் எவரேனும் ஆளுக்கு அல்லது ஏதேனும் பங்குடைமைக்குச் செலுத்தப்படற்பாலதான அத்தகைய குறித்துரைக்கப்பட்ட கட்டணத்திலிருந்து அத்தகைய குறித்துரைக்கப்பட்ட கட்டணத்தின் மூன்று சதவீதம் வீதப்படி வருமான வரியைக் கழித்தல் வேண்டும்.

(2) உட்பிரிவு (1) இன் நோக்கங்களுக்காக

(அ) ''குறித்துரைக்கப்பட்ட ஆள்'' என்பது ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டு தொடர்பில்

(i) வேறு எவரேனும் ஆளுக்கு அல்லது வேறு ஏதேனும் பங்குடைமைக்கு முப்பதினாயிரம் ரூபாவுக்குக் குறையாமல் கூட்டு மொத்தமாகத் திரளும் குறித்துரைக்கப்பட்ட ஒரு கட்டணத்தை அல்லது கட்டணங்களை; அல்லது

(ii) இரண்டு இலட்சத்து ஐம்பதினாயிரம் ரூபாவுக்குக் குறையாமல் கூட்டு மொத்தமாகத் திரளும் குறித்துரைக்கப்பட்ட கட்டணங்களை

அவரது சொந்தச் சார்பில் அல்லது அதன் சொந்தச் சார்பில் அல்லது வேறு எவரேனும் ஆளின் அல்லது பங்குடைமையின் சார்பில் அந்த வரி மதிப்பீட்டாண்டில் செலுத்தும் அல்லது வரவு வைக்கும் சாத்தியமுள்ள அல்லது அந்த வரி மதிப்பீட்டாண்டிற்கு நேர் முந்திய வரி மதிப்பீட்டாண்டில் அதனைச் செலுத்தியுள்ள அல்லது வரவு வைத்துள்ள எவரேனும் ஆள், அல்லது ஏதேனும் பங்குடைமை அல்லது ஆட்கள் குழு என்று பொருள்படும்; அத்துடன்

(ஆ) ''குறித்துரைக்கப்பட்ட கட்டணம்'' என்பது விடயத்திற்கேற்ப எவரேனும் ஆளினால் அல்லது ஏதேனும் பங்குடைமையால் சுயேச்சையான ஒரு தன்மையில் கொண்டு நடாத்தப்படும் அல்லது பிரயோகிக்கப்படும் ஏதேனும் உயர் தொழிலின் அல்லது வாழ்க்கைத் தொழிலின் அல்லது வேறு நடவடிக்கைகளின் நெறிமுறையின் போது விடயத்திற்கேற்ப அத்தகைய ஆளினால் அல்லது பங்குடைமையால் ஆற்றப்படும் சேவைகளுக்குக் கிரயமாகக் குறித்துரைக்கப்பட்ட ஆளெவராலும் செலுத்தப்படற்பாலதான ஏதேனும் பணத் தொகை என்று பொருள்படும் என்பதுடன் அத்தகைய குறித்துரைக்கப்பட்ட ஆளினால் செலுத்தப்படற்பாலதான ஏதேனும் தரகையும் தரகுக் கூலியையும் அல்லது இதனையொத்த இயல்பினதான வேறு பணத் தொகைகளையும் உள்ளடக்கும் ஆனால் அத்தகைய குறித்துரைக்கப்பட்ட ஆளின் கீழ் தொழில் நெறிமுறையின்போது அத்தகைய குறித்துரைக்கப்பட்ட, எவரேனும் ஆளின் ஊழியருக்கு அத்தகைய குறித்துரைக்கப்பட்ட ஆளினால் செலுத்தப் படற்பாலதான ஏதேனும் பணத்தொகையை உள்ளடக்கமாட்டாது.

*அத்தியாயம் XVஅ என்பதன் ஏற்பாடுகள் இவ்வத்தியாயத்தின் கீழ் குறித்துரைக்கப்பட்ட கட்டணங்களிலிருந்து வருமான வரியைக் கழித்தல் தொடர்பில் ஏற்புடையனவாதல்.*

*113*ஔ. வங்கிகளாலும், நிதி நிறுவனங்களாலும் செலுத்தப்பட்ட வட்டியிலிருந்து வருமான வரிக் கழிப்பனவு, அவ்வாறு கழிப்பனவு செய்யப்பட்ட வருமான வரிக்கான வரவு, வங்கிகளினதும் நிதி நிறுவனங்களினதும் தீர்வைகள், வருமான வரிக் கழிப்பனவில் தவணை தவறுகை, வங்கிகள் மீதும் நிதி நிறுவனங்கள் மீதும் வரி மதிப்பீடுகள் வழங்கல், மேன்முறையீடுகள், தவணை தவறுகைக்கான தண்டம் என்பன தொடர்பில் அத்தியாயம் XVஅ என்பதன் ஏற்பாடுகள், குறித்துரைக்கப்பட்ட ஆட்களினால்குறித்துரைக்கப்பட்ட கட்டணங்களிலிருந்து வருமான வரிக் கழிப்பனவுக்கும் அவ்வாறு கழிப்பனவு செய்யப்பட்ட வருமான வரிக்கான வரவுக்கும், பணிப்புரை வழங்குதல், குறித்துரைக்கப்பட்ட ஆட்களின் தீர்வை, வருமான வரிக் கழிப்பனவில் தவணை தவறுகை, குறித்துரைக்கப்பட்ட ஆட்களின் மீது வரி மதிப்பீடுகள் வழங்குதல்; மேன்முறையீடுகள், இவ்வத்தியாயத்தின் கீழ்த் தவணை தவறுகைக்கான தண்டம் என்பவற்றுக்கும் அத்தியாயம் XVஅ என்பதில் ''வங்கிகளும் நிதி நிறுவனங்களும்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''குறித்துரைக்கப்பட்ட ஆட்கள்'' என்னும் சொற்களும் ''வட்டி'' என்னும் சொல்லுக்குப் பதிலாக, ''குறித்துரைக்கப்பட்ட சட்டணம்'' என்னும் சொற்களும் அவை அவ்வத்தியாயத்தில் எங்கெங்கு காணப்படுகின்றனவோ அங்கெல்லாம் இடப்பட்டாற்போன்றும், ஆயினும் ஏதேனும் பங்குடைமைக்கு ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட கட்டணத்திலிருந்து எவரேனும் குறித்துரைக்கப்பட்ட ஆளினால் இவ்வத்தியாயத்தின் ஏற்பாடுகளின் கீழ்க் கழிப்பனவு செய்யப்பட்ட வருமான வரிக்கான வரவு, அத்தகைய பங்குடைமையின் பங்காளர்கள் இருவயினொத்த உடன்படிக்கையின் மூலம் வேறு வசையாகத் தீர்மானித்தாலன்றி அத்தகைய பங்காளர்களிடையே அத்தகைய பங்குடை

மையின் இலாபங்களை அல்லது நட்டங்களை அத்தகைய பங்காளர்கள் எந்த விகிதாசாரத்தில் பங்கிட்டுக் கொள்கின்றார்களோ அந்த விகிதாசாரத்தில் பகிர்ந்து கொள்ளப்பட வேண்டும் என்ற திரிபுபடுத்தலுக்கமைய ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.''.

*31.* முதன்மைச் சட்டவாக்கத்தின் *122* ஆம் பிரிவு அப்பிரிவின் *(1)* ஆம் உட்பிரிவிற்கான காப்பு வாசகத்தில் ''ஐம்பது ரூபாக் கட்டணத்துடன்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''ஆயிரத்து ஐந்நூறு ரூபாக் கட்டணத்துடன்'' என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*32.* முதன்மைச் சட்டவாக்கத்தின் *125* ஆம் பிரிவு, அப்பிரிவின் *(2)* ஆம் உட்பிரிவில் ''ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டுக்கு'' என்பதிலிருந்து ''ஐந்து சத வீதத்துக்குச் சமமான மேலுமொரு தொகை'' என்பது வரையிலான சொற்களுக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:—

''எவரேனும் ஆளினால் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டிற்குக் கொடுபடற் பாலதான ஏதேனும் வரியானது தவணை தவறியதாயிருக்குமிடத்து, தவணை தவறியவர்—

(அ) அத்தகைய வரி மதிப்பீட்டாண்டு *1992* மார்ச் *31* ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் முடிவடையும் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டாக இருக்குமிடத்துத் தவணை தவறியதாயிருக்கும் வரியுடன் சேர்த்து மேலதிகமாக—

(i) தண்டமொன்றாகத் தவணை தவறியதாயிருக்கும் தொகையின் ஐந்து சதவீதத்துக்குச் சமமான பணத்தொகையொன்றையும்;

(ii) தவணை தவறியதாயிருக்கும் ஏதேனும் தொகை தவணை தவறியதாயிருக்கத் தொடங்கியுள்ளதன் பின்னர் முப்பது நாட்களுக்குள் செலுத்தப்படாதவிடத்து அது தவணை தவறியதாயிருக்கும் மூன்று மாதங்களைக் கொண்ட மேலும் காலப் பகுதி அல்லது அதன் பாகம் ஒவ்வொன்று தொடர்பிலும் தவணை தவறியதாயுள்ள தொகையின் ஐந்து சத வீதத்துக்குச் சமமான மேலதிகப் பணத் தொகையொன்றையும்; அத்துடன்

(ஆ) அத்தகைய வரி மதிப்பீட்டாண்டு *1992* மார்ச் *31* ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டாக இருக்குமிடத்துத் தவணை தவறியதாயிருக்கும் வரிக்கு மேலதிகமாக—

(i) தண்டமொன்றாக அத்தகைய வரியின் பத்துச் சத வீதத்துக்குச் சமமான பணத்தொகையொன்றையும்; அத்துடன்

(ii) அத்தகைய வரி, தவணை தவறியதாக இருக்கத் தொடங்கியுள்ள பின்னர் முப்பது நாட்கள் கழியுமுன்னர் செலுத்தப்படாதிருக்குமிடத்து மேலதிகத் தண்டமாக அது தவணை தவறிய

தாயிருக்கும் மூன்று மாதங்களைக் கொண்ட மேலும் காலப் பகுதி அல்லது அதன் பாகம் ஒவ்வொன்று தொடர்பிலும் தவணை தவறியதாயிருக்கும் இரண்டு சத வீதத்துக்குச் சமமான பணத் தொகையொன்றையும் வரியின் இரண்டு சத வீதத்துக்குச் சம மான பணத்தொகையொன்றையும்,

செலுத்துதல் வேண்டும்.

33. முதன்மைச் சட்டவாக்கத்தின் 151 ஆம் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், ''அவ்வுட்பிரிவின் (iii) ஆம் பந்தியில் 101 (2) ஆம் பிரிவின் அல்லது 102 ஆம் பிரிவின் (அ), (ஆ) அல்லது (இ) என்னும் பந்திகளின்'' என்னும் சொற்களுக்கும், எண்களுக்கும் பதிலாக, ''96 (1) ஆம் பிரிவின் அல்லது 101 (2) ஆம் பிரிவின் அல்லது 102 ஆம் பிரிவின் (அ), (ஆ) அல்லது (இ) என்னும் பந்தி யின்'' என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம், இத்தால் திருத்தப்படுகின்றது.

34. முதன்மைச் சட்டவாக்கத்தின் 157 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் ''சிரேட்ட உண்ணாட்டு அரசிறை வரி மதிப்பீட்டாளர்களும், உண் ணாட்டு அரசிறை வரி மதிப்பீட்டாளர்களும்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''சிரேட்ட உண்ணாட்டு அரசிறை வரி மதிப்பீட்டாளர்களும் உண்ணாட்டு அரசிறை வரி மதிப்பீட்டாளர்களும் உண்ணாட்டு அரசிறை வரி அலுவலர்களும்' என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

35. முதன்மைச் சட்டவாக்கத்தின் 158 ஆம் பிரிவு, அப்பிரிவின் (12) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் உட்பிரிவைச் சேர்ப்பதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:—

''(13) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளிலுள்ள எதுவும் இலங்கை அரசாங்கத்திற்கும் வேறு ஏதேனும் ஆட்புலத்தின் அரசாங்கத்திற்கும் இடை யில் செய்து கொள்ளப்பட்டதும் இச்சட்டத்தின் 82 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்படுவதுமான ஏதேனும் உடன்படிக்கையைப் பின்பற்றித் தகவல் பரிவர்த்தனை ஊடாக ஆணையாளர் தலைமையதிபதியின் அறிவுக்கு எட் டக் கூடியவாறான எவரேனும் ஆளின் விவகாரங்கள் தொடர்பிலான அத்தகைய தகவல்களை வரி மதிப்பீட்டில் அல்லது வரி திரட்டலில் அல்லது வலுவுக்கிடுதலில் அல்லது அவ்வுடன்படிக்கையின் விடயமாகிய வரிகள் தொடர்பில் ஏதேனும் தவறு சம்பந்தமாக வழக்குத் தொடுத்தலில் ஈடுபட் டுள்ள எவரேனும் ஆளுக்கு அல்லது அதிகார சபைக்கு வெளிவிடுமாறு அவரைத் தேவைப்படுத்துவதாக வாசித்துப் பொருள் கொள்ளப்படுதல் ஆகாது.''.

36. முதன்மைச் சட்டவாக்கத்திற்கான முதலாம் அட்டவணை இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) அந்த அட்டவணையின் 11ஈ என்னும் பாகத்தில் ''1988 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டிற்கான வருமான வரி வீதங்கள் பின்வருமாறு இருத்தல் வேண்டும்:—'' என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, ''1988 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர்

தொடங்குகின்றதும் ஆனால் 1992 ஏப்பிறில் 1 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்குகின்றதுமான ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டிற்கான வருமான வரி வீதங்கள் பின்வருமாறு இருத்தல் வேண்டும்:—''

(2) அந்த அட்டவணையின் 11ஈ என்னும் பாகத்தை உடனடுத்துப் பின்வரும் பாகத்தை உட்புகுத்துவதன் மூலம்:—

''பாகம் IIஉ

1992 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டிற்கான வருமான வரி வீதங்கள் பின்வருமாறு இருத்தல் வேண்டும்:—

| | |
|---|---|
| வரிவிதிக்கற்பாலதான வருமானத்தின் முதல் 21,000 ரூபா மீது | 10 சத வீதம் |
| வரிவிதிக்கற்பாலதான வருமானத்தின் அடுத்த 24,000 ரூபா மீது | 20 சத வீதம் |
| வரிவிதிக்கற்பாலதான வருமானத்தின் அடுத்த 24,000 ரூபா மீது | 30 சத வீதம் |
| வரிவிதிக்கற்பாலதான வருமானத்தின் மிகுதியின் மீது | 35 சத வீதம்''. |

37. முதன்மைச் சட்டவாக்கத்திற்கான இரண்டாம் அட்டவணை இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) அந்த அட்டவணையின் பாகம் 1 என்பதற்குப் பதிலாகப் பின்வரும் பாகத்தை இடுவதன் மூலம்:—

''பாகம் I

பாகம் II, அல்லது பாகம் III, அல்லது பாகம் IV, அல்லது பாகம் IVஅ அல்லது பாகம் V, அல்லது பாகம் Vஅ, அல்லது பாகம் Vஆ அல்லது பாகம் VI, அல்லது பாகம் VIII அல்லது பாகம் IX அல்லது பாகம் X என்பவற்றில் குறிப்பீடு செய்யப்பட்ட ஒரு கம்பனி தவிர்ந்த இலங்கையில் வதிவுள்ள கம்பனி.

1979 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர், ஆனால் 1992 ஏப்பிறில் 1 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்கும் ஒவ்வொரு வரி மதிப்பீட்டாண்டிற்கும் வருமான வரி வீதம்:—

கம்பனியின் வரி விதிக்கற்பாலதான வருமானத்தின் மீது 50 சதவீதம்; 1992 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஒவ்வொரு வரி மதிப்பீட்டாண்டிற்கும் வருமான வரி வீதம்—

கம்பனியின் வரி விதிக்கற்பாலதான வருமானத்தின்மீது 45 சதவீதம்'';

(2) அந்த அட்டவணையின் IVஅ என்னும் பாகத்தில் ''1988 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும்'' என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, ''1988 ஏப்பிறில் 1 ஆம்

தேதியன்று அல்லது அதன் பின்னர் ஆனால் 1992 ஏப்பிறில் 1 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்கும்'' என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம்;

(3) அந்த அட்டவணையின் IVஅ என்னும் பாகத்தை உடனடுத்துப் பின்வரும் பாகத்தை உட்புகுத்துவதன் மூலம்:—

''பாகம் IVஆ

சிறிய கம்பனி

1992 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஒவ்வொரு வரி மதிப்ட்டாண்டிற்கும் வருமான வரி வீதம்.

(1) கம்பனியின் வரி விதிக்கற்பாலதான வருமானம் இரண்டு இலட்சத்து ஐம்பதினாயிரம் ரூபாவை விஞ்சாததாயின்: $33\frac{1}{3}$ சத வீதம்.

(2) கம்பனியின் வரி விதிக்கற்பாலதான வருமானம் இரண்டு இலட்சத்து ஐம்பதினாயிரம் ரூபாவை விஞ்சுவதும் மூன்று இலட்சத்து மூவாயிரத்து முப்பது ரூபாவை விஞ்சாததுமாயின், வரியானது—

(i) இரண்டு இலட்சத்து ஐம்பதினாயிரம் ரூபாவின் $33\frac{1}{3}$ சதவீதத்துக்குச் சமமான தொகையொன்றினதும், அத்துடன்

(ii) கம்பனியின் வரி விதிக்கற்பாலதான வருமானம் அந்த வரி மதிப்பீட்டாண்டிற்கு எந்தத் தொகையால் இரண்டு இலட்சத்து ஐம்பதினாயிரம் ரூபாவை விஞ்சுகின்றதோ அந்தத் தொகையினதும்

கூட்டு மொத்தமாதல் வேண்டும்.''.

(4) அந்த அட்டவணையின் பாகம் VII என்பதற்குப் பதிலாகப் பின்வரும் பாகத்தை இடுவதன் மூலம்:—

''பாகம் VII

(பிரிவு 34)

இலங்கையில் வதிவற்ற கம்பனி

1979 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் ஆனால் 1992 ஏப்பிறில் 1 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்கும் ஒவ்வொரு வரி மதிப்பீட்டாண்டிற்கும்—

கம்பனியின் வரி விதிக்கற்பாலதான வருமானத்தின் மீது 50 சதவீதம்

1992 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஒவ்வொரு வரி மதிப்பீட்டாண்டிற்கும் வருமான வரி வீதம். கம்பனியின் வரி விதிக்கற்பாலதான வருமானத்தின் மீது 45 சத வீதம்;''.

(5) அந்த அட்டவணையின் பாகம் IX என்பதற்குப் பதிலாகப் பின்வரும் பாகத்தை இடுவதன் மூலம்:—

''பாகம் IX

**(இலங்கை மத்திய வங்கியைத் தவிர்ந்த பகிரங்கக் கூட்டுத்தாபனங்கள்)**

1989 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் ஆனால் 1992 ஏப்பிறில் 1 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்கும் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டிற்கு வருமான வரி வீதம்—

பகிரங்கக் கூட்டுத்தாபனத்தின் வரி விதிக்கற்பாலதான வருமானத்தின் மீது — 50 சத வீதம்

1992 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டிற்கு வருமான வரி வீதம்.

பகிரங்கக் கூட்டுத்தாபனத்தின் வரி விதிக்கற்பாலதான வருமானத்தின் மீது — 45 சத வீதம்;''.

(6) அந்த அட்டவணையின் பாகம் X என்பதற்குப் பதிலாகப் பின்வரும் பாகத்தை இடுவதன் மூலம்:—

''பாகம் X

கூறு நம்பிக்கைப் பொறுப்பு அல்லது பரஸ்பர நிதியம் முறையே 1990 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்றும் 1991 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று தொடங்கும் வரி மதிப்பீட்டாண்டுகளுக்கு வருமான வரி வீதம்:—

கூறு நம்பிக்கைப் பொறுப்பின் அல்லது பரஸ்பர நிதியத்தின் வரி விதிக்கற்பாலதான வருமானத்தின் மீது — 50 சத வீதம்

1992 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஒவ்வொரு வரி மதிப்பீட்டாண்டிற்கும் வருமான வரி வீதம்:—

நம்பிக்கைக் கூறின் அல்லது பரஸ்பர நிதியத்தின் வரி விதிக்கற்பாலதான வருமானத்தின் மீது — 45 சத வீதம்.''.

38. முதன்மைச் சட்டவாக்கத்திற்கான மூன்றாம் அட்டவணை இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) அந்த அட்டவணையின் 1 ஆம் பந்தியில் ''1986 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று தொடங்கும் வரி மதிப்பீட்டாண்டிற்கும்'' என்பதிலிருந்து ''50 சதவீதம்'' என்பது வரையிலான எல்லாச் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:—

''1986 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் ஆனால் 1992 ஏப்பிறில் 1 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்கும் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டிற்கு:—

வரி விதிக்கற்பாலதான வருமானத்தின் முதல் 25,000 ரூபா மீது 30 சத வீதம்.

வரி விதிக்கற்பாலதான வருமானத்தின் அடுத்த 25,000 ரூபா மீது 40 சத வீதம்.

வரி விதிக்கற்பாலதான வருமானத்தின் மிகுதியின் மீது 50 சத வீதம்.

1992 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டிற்கு—

வரி விதிக்கற்பாலதான வருமானத்தின் முதல் 25,000 ரூபா மீது 30 சத வீதம்.

வரி விதிக்கற்பாலதான வருமானத்தின் அடுத்த 25,000 ரூபா மீது 40 சத வீதம்.

வரி விதிக்கற்பாலதான வருமானத்தின் மிகுதியின் மீது 45 சத வீதம்'';

(2) அந்த அட்டவணையின் 3 ஆம் பந்தியில்—

(அ) அப்பந்தியில் (ii) ஆம் உட்பந்தியில் ''ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்தைந்தாம் ஆண்டு ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற'' என்ற சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, ''1985 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் ஆனால் 1992 ஏப்பிறில் 1 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற'' என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(ஆ) அப்பந்தியின் (ii) ஆம் உட்பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன் மூலமும்:—

''(iii) 1992 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டிற்கு 35 சதவீதம்''.

(3) அந்த அட்டவணையின் 4 ஆம் பந்தியில் ''1986 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்கும் வரி மதிப்பீட்டாண்டு எதற்கும் எல்லா நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் மீதும் 50 சதவீதம்'' என்னும் சொல்லமைப்பிற்குப் பதிலாக ''1986 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் ஆனால் 1992

ஏப்பிறில் 1 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்கும் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டிற்கு எல்லா நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் மீதும் 50 சத வீதம்.

1992 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டிற்கு எல்லா நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் மீதும் 35 சதவீதம்'' என்னும் சொல்லமைப்பை இடுவதன் மூலமும்.

(4) அந்த அட்டவணையின் 5 ஆம் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலம்:—

''பங்குடைமைகள்

1992 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் தொடங்கும் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டிற்கு—

பங்குடைமையின் வரி விதிக்கற்பாலதான வருமானத்தின் மீது 50 சத வீதம்.

1992 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டிற்கு—

பங்குடைமையின் வரி விதிக்கற்பாலதான வருமானத்தின் மீது 35 சத வீதம்'';

(5) அந்த அட்டவணையின் 11 ஆம் பந்தியில்—

(i) அப்பந்தியின் (ஆ) என்னும் பந்தியில் ''1986 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும்'' என்னும் சொல்லமைப்பிற்குப் பதிலாக, ''1986 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் ஆனால் 1992 ஏப்பிறில் 1 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்கும்'' என்னும் சொல்லமைப்பை இடுவதன் மூலமும்;

(ii) அப்பந்தியின் (ஆ) என்னும் உட்பந்தியை உடனடுத்துப் பின் வரும் உட்பந்தியைச் சேர்ப்பதன் மூலமும்:—

''(இ) 1992 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டிற்கு—

(i) வரி விதிக்கற்பாலதான வருமானத்தின் மீது 45 சத வீதம்.

(ii) இலாபங்களின் மிகுதியின் மீது அதினின்று (1) ஆம் பந்தியின் கீழ்ச் செலுத்தற்பாலதான வரிக் கழிப்பனவின் பின்னர் 25 சத வீதம்'';

(6) அந்த அட்டவணையின் 13 ஆம் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும்:—

''13. ஊழியர்களால் மட்டும் உதவுதொகைகள் செலுத்தப்படும் 23 (1) (ண) என்னும் பிரிவின் நோக்கங்களுக்காக அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் சிக்கன சேமிப்பு அல்லது கட்டிடச் சங்கம் அல்லது நலன்புரி நிதியம்—

1992 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டிற்குச் சங்கத்தினது அல்லது நிதியத்தினது வரி விதிக்கற்பாலதான வருமானத்தின் மீது 10 சத வீதம்;''

(7) அந்த அட்டவணையின் 13 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும்:—

''14. மேலே முதலாம், இரண்டாம் அட்டவணைகளில் குறிப்பீடு செய்யப்படுபவர்களைத் தவிர்ந்த ஆட்கள்—

ஆளின் வரி விதிக்கற்பாலதான வருமானத்தின் மீது 20 சதவீதம்''.

39. முதன்மைச் சட்டவாக்கத்திற்கான ஏழாம் அட்டவணை இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் அட்டவணை இடப்படுகின்றது:—

''ஏழாம் அட்டவணை

(பிரிவு 33அ (1))

1988 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் ஆனால் 1992 ஏப்பிறல் 1 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்கும் ஒவ்வொரு மதிப்பீட்டாண்டிற்கும் முற்பணக் கம்பனி வரி வீதங்கள் பின்வருவனவாதல் வேண்டும்:—

(i) சிறிய கம்பனியொன்றால் செய்யப்படும் தகைமைபெறும் பகிர்வு ஒவ்வொன்றினதும் தொகைக்குச் சமமான தொகையின்மீது
25 சதவீதம்.

(ii) விலை கோரிப் பெறப்பட்ட பகிரங்கக் கம்பனியொன்றால் அல்லது மக்கள் கம்பனியொன்றால் செய்யப்படும் தகைமை பெறும் பகிர்வு ஒவ்வொன்றினதும் தொகைக்குச் சமமான தொகை மீது
$33\frac{1}{3}$ சதவீதம்.

(iii) கூறு நம்பிக்கைப் பொறுப்பு ஒன்றினால் அல்லது பரஸ்பர நிதியத்தால் அல்லது சிறு கம்பனி ஒன்றைத் தவிர்ந்த வேறு கம்பனி ஒன்றினால் அல்லது விலை கோரிப் பெறப்பட்ட பகிரங்கக் கம்பனி ஒன்றினால் அல்லது மக்கள் கம்பனி ஒன்றினால் செய்யப்பட்ட தகைமைபெறும் பகிர்வு ஒவ்வொன்றினதும் தொகைக்குச் சமமான தொகைமீது
50 சதவீதம்.

1992 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஒவ்வொரு வரி மதிப்பீட்டாண்டிற்கும் முற்பணக் கம்பனி வரி வீதங்கள் வருமாறு:—

(i) சிறிய கம்பனி ஒன்றினால் செய்யப்பட்ட தகைமைபெறும் பகிர்வு ஒவ்வொன்றினதும் தொகைக்குச் சமமான தொகைமீது
25 சதவீதம்.

(ii) விலை கோரிப் பெறப்பட்ட பகிரங்கக் கம்பனி ஒன்றினால் அல்லது மக்கள் கம்பனி ஒன்றினால் செய்யப்பட்ட தகைமைபெறும் பகிர்வு ஒவ்வொன்றினதும் தொகைக்குச் சமமான தொகைமீது
$33\frac{1}{3}$ சதவீதம்.

(iii) கூறு நம்பிக்கைப் பொறுப்பு ஒன்றினால் அல்லது பரஸ்பர நிதியத்தால் அல்லது சிறிய கம்பனி ஒன்றைத் தவிர்ந்த வேறு கம்பனி ஒன்றினால் அல்லது விலை கோரிப் பெறப்பட்ட பகிரங்கக் கம்பனி ஒன்றினால் அல்லது மக்கள் கம்பனி ஒன்றினால் செய்யப்பட்ட தகைமைபெறும் பகிர்வு ஒவ்வொன்றினதும் தொகைக்குச் சமமான தொகைமீது
50 சதவீதம்''.

40. (1) முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவிற்கு இச்சட்டத்தின் 5 ஆம் பிரிவால் செய்யப்பட்ட திருத்தங்கள் எல்லா நோக்கங்களுக்காகவும் 1992 ஆகஸ்ட் 26 ஆம் தேதியன்று வலுவுக்கு வந்திருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவிற்கு இச்சட்டத்தின் 6 ஆம் பிரிவால் செய்யப்பட்ட திருத்தங்கள் எல்லா நோக்கங்களுக்காகவும் 1992 ஆகஸ்ட் 26 ஆம் தேதியன்று வலுவுக்கு வந்திருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(3) முதன்மைச் சட்டவாக்கத்தின் 17இ என்னும் பிரிவுக்கு இச்சட்டத்தின் 9 (2) (இ) என்னும் பிரிவால் செய்யப்பட்ட திருத்தம் எல்லா நோக்கங்களுக்காகவும் 1990 நவெம்பர் 29 ஆம் தேதியன்று வலுவுக்கு வந்திருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் 17இ என்னும் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியின் (IV) ஆம் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்படும் ஏதேனும் பொறுப்பு முயற்சியைக் கொண்டு நடாத்துவதில் மட்டும் ஈடுபட்டுள்ளதும் இச்சட்டத்தின் தொடக்கத்திலிருந்து ஒரு மாதத்திற்குள் அமைச்சரால் கசெற்றில் வெளியிடப்படும் அறிவித்தல் மூலம் அங்கீகரிக்கப்பட்டதுமான ஏதேனும் கம்பனியானது எல்லா நோக்கங்களுக்காகவும் 1992 ஏப்பிறில் 1 ஆம் தேதிக்கு முன்னர் அமைச்சரால் கசெற்றில் வெளியிடப்படும் அறிவித்தல் மூலம் அங்கீகரிக்கப்பட்டுள்ளதாகக் கருதப்படுதலும் வேண்டும்.

(4) முதன்மைச் சட்டவாக்கத்தின் 22ஈஈஈ என்னும் பிரிவுக்கு இச்சட்டத்தின் 10 ஆம் பிரிவால் செய்யப்பட்ட திருத்தம் எல்லா நோக்கங்களுக்காகவும் 1991 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று வலுவுக்கு வந்திருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) முதன்மைச் சட்டவாக்கத்தின் 23 (1) ஆம் பிரிவுக்கு இச்சட்டத்தின் 12 (2) ஆம் பிரிவால் செய்யப்பட்ட திருத்தம் எல்லா நோக்கங்களுக்காகவும்

1992 சனவரி 1 ஆம் தேதியன்று வலுவுக்கு வந்திருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(6) முதன்மைச் சட்டவாக்கத்தின் 31 (5ஈ) என்னும் பிரிவுக்கு இச்சட்டத்தின் 15 (2) ஆம் பிரிவால் செய்யப்பட்ட திருத்தம் எல்லா நோக்கங்களுக்காகவும் 1990 நவெம்பர் 29 ஆம் தேதியன்று வலுவுக்கு வந்திருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(7) முதன்மைச் சட்டவாக்கத்தின் 32 ஆம் பிரிவிற்கு இச்சட்டத்தின் 16 (3) ஆம் பிரிவினால் செய்யப்பட்ட திருத்தம் எல்லா நோக்கங்களுக்காகவும் 1992 ஆகஸ்ட் 26 ஆம் தேதியன்று வலுவுக்கு வந்திருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(8) முதன்மைச் சட்டவாக்கத்தின் 38 (4) ஆம் பிரிவுக்கு இச்சட்டத்தின் 19 ஆம் பிரிவால் செய்யப்பட்ட திருத்தம் எல்லா நோக்கங்களுக்காகவும் 1988 செப்டெம்பர் 8 ஆம் தேதியன்று வலுவுக்கு வந்திருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(9) முதன்மைச் சட்டவாக்கத்தின் 113அ என்னும் பிரிவுக்கு இச்சட்டத்தின் 24 (2) ஆம் பிரிவால் செய்யப்பட்ட திருத்தம் எல்லா நோக்கங்களுக்காகவும் 1922 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று வலுவுக்கு வந்திருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(10) முதன்மைச் சட்டவாக்கத்தின் 113அ ஆம் பிரிவிற்கு இச்சட்டத்தின் 27 (2) ஆம் பிரிவினால் செய்யப்பட்ட திருத்தம் எல்லா நோக்கங்களுக்காகவும் 1992 ஏப்பிரில் 1 ஆம் தேதியன்று வலுவுக்கு வந்திருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.''.

41. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்குமிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

**1992 ஆம் ஆண்டின் 66 ஆம் இலக்க, பாதுகாப்பு அறவீட்டு (திருத்தச்) சட்டம்.**

*[1992, திசெம்பர் மாதம் 24 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

**1991 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, பாதுகாப்பு அறவீட்டுச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.**

1. இச்சட்டம், 1992 ஆம் ஆண்டின் 66 ஆம் இலக்க, பாதுகாப்பு அறவீட்டு (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

2. (இதனகத்துப் பின்னர் ''முதன்மைச் சட்டவாக்கம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1991 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, பாதுகாப்பு அறவீட்டுச் சட்டத்தினது விரிவுப்பெயர், அதில், ''1992 சனவரி 1 ஆம் தேதியன்று தொடங்கும் ஆண்டிற்கு'' எனவுள்ள சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, ''1992 சனவரி 1 ஆம் தேதியன்றும் அத்துடன் 1993 சனவரி 1 ஆம் தேதியன்றும் முறையே தொடங்கும் ஆண்டுகளுக்குப்'' என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் ''1992 சனவரி 1 ஆம் தேதியன்று தொடங்கும் ஆண்டின் ஒவ்வொரு காலாண்டிற்கும்'' எனவுள்ள சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, ''1992 சனவரி 1 ஆம் தேதியன்றும், அத்துடன் 1993 சனவரி 1 ஆம் தேதியன்றும் முறையே தொடங்கும் ஒவ்வொரு காலாண்டுகளுக்கும்'' என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

4. (1992 ஆம் ஆண்டின் 66 ஆம் இலக்க, பாதுகாப்பு அறவீட்டு (திருத்தச்) சட்டத்தின் மூலம் உட்புகுத்தப்பட்டதான) முதன்மைச் சட்டவாக்கத்துக்கான அட்டவணை, அதில் ''1992 சனவரி 1 ஆம் தேதியன்றும் 1992 ஒற்றோபர் 1 ஆம் தேதியன்றும் முறையே தொடங்கும் காலாண்டுகளுக்கும்'' எனவுள்ள சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, ''1992 யூலை 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர், ஆனால் 1994 சனவரி 1 ஆம் தேதிக்கு முன்னதாகத் தொடங்கும் ஒவ்வொரு காலாண்டிற்கும்'' என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

5. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும், தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

# 1992 ஆம் ஆண்டின் 67 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டம்

*[1992, திசெம்பர் மாதம் 24 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

**1993 ஆம் நிதியாண்டின் சேவைக்கு ஏற்பாடு செய்வதற்கும் அத்தகைய சேவையின் நோக்கத்திற்காக இலங்கையிலோ அல்லது இலங்கைக்கு வெளியிலோ கடன்களைத் திரட்டுவதற்கு அதிகாரமளிப்பதற்கும், அந்நிதியாண்டின் போது அரசாங்கத்தின் குறித்த சில முயற்சிகள் தொடர்பில் நிதிகள் ஏற்பாடு செய்வதற்கும், அத்தகைய முயற்சிகளின் செலவினத்திற்கு அந்நிதியாண்டின்போது தேவைப்படும் பணங்களைத் திரட்டுநிதியத்திலிருந்து அல்லது அரசாங்கத்திற்குச் சேர்ந்த அல்லது அதனிடமுள்ள வேறெதேனும் நிதியத்திலிருந்து அல்லது பணங்களிலிருந்து முற்பணமாகக் கொடுப்பதை இயலச்செய்வதற்கும், திரட்டு நிதியத்திற்கு அத்தகைய பணங்களை மீளளிப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கும், அத்துடன் மேற்சொல்லப்பட்ட கருமங்களுடன் தொடர்பான அல்லது அவற்றின் இடை நேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.**

1. இச்சட்டம் 1992 ஆம் ஆண்டின் 67 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

2. (1) இச்சட்டத்தில், ''நிதியாண்டான 1993 ஆம் ஆண்டு'' எனக் குறிப்பீடு செய்யப்படுவதும், 1993 சனவரி 01 ஆம் தேதி தொடங்கி 1993 திசெம்பர் 31 ஆம் தேதியன்று முடிவடைவதுமான காலப் பகுதிக்கான சேவைக்காகப் பதிநாலாயிரத்து முன்நூற்றி நாற்பதுகோடி முப்பத்தெட்டு இலட்சத்து பதின்மூவாயிரம் ரூபாவென மதிப்பிடப்படும் அரசாங்கத்தின் செலவினத் தொகையானது, செலவினம் எதற்கும் அதிகாரமளிக்கும் வேறு சட்டமெதற்கும் பங்கமின்றி—

(அ) திரட்டு நிதியத்திலிருந்து அல்லது அரசாங்கத்தின் அல்லது அதனிடமுள்ள வேறேதேனும் நிதியத்திலிருந்து அல்லது பணங்களிலிருந்து வழங்கப்பட வேண்டுமென இத்தால் அதிகாரமளிக்கப்பட்டுள்ள கொடுப்பனவுகளிலிருந்தும்; அத்துடன்

(ஆ) அரசாங்கத்துக்காகவும் அதன் சார்பிலும் இலங்கையிலோ வெளிநாட்டிலோ திரட்டப்பட வேண்டுமென இத்தால், அதிகாரமளிக்கப்பட்டுள்ள கடன்களின் வரும்படியிலிருந்தும்

ஆகவே, எவ்வாறாயினும் அத்தகைய வரும்படியின் கூட்டு மொத்தத் தொகையானது ஒன்பதினாயிரத்து பத்துக் கோடி ரூபாவினை விஞ்சுதலாகாது என்பதற்கமையப் பெறப்படல் வேண்டும்.

இதன்கண் முன்னர் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள பதினாலாயிரத்து முன்நூற்று நாற்பது கோடி முப்பத்தெட்டு இலட்சத்துப் பதின்மூவாயிரம் ரூபா கொண்ட பணத் தொகை இச்சட்டத்திற்கான முதலாம் அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறு செலவிடப்படலாம்.

(2) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் அரசாங்கத்துக்காகவும், அதன் சார்பிலும் கடன் திரட்டுவதற்கு அதிகாரமளிக்கும் எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்குப் பங்கமின்றிப் பயனுடையனவாதல் வேண்டும்.

3. (1) நிதியாண்டான 1993 ஆம் ஆண்டின்போது, இச்சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையின் I ஆம் நிரையிற் குறித்துரைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு முயற்சியிலிருந்தும் அரசாங்கம் பெறும் பெறுகைகளுள், அத்தகைய முயற்சிகளின் கணக்கில் வரவு வைக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், அவ்வாறு வரவு வைக்கப்படும் பெறுகைகளின் கூட்டு மொத்தத் தொகையானது அந்த அட்டவணையின் III ஆம் நிரையில் உள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆகக் குறைந்த எல்லையிலும் பார்க்கக் குறைந்ததாக இருத்தலுமாகாது. அத்தகைய முயற்சியின் தேறிய மேன்மிகை ஏதேனுமிருப்பின் அத்தேறிய மேன்மிகையானது நிதியாண்டான 1993 ஆம் ஆண்டு முடிவுற்ற பின்னர் ஆறு மாதங்கள் முடிவடைவதற்கு முன்னர் திரட்டு நிதியத்திற்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழான தேறிய மேன்மிகையைத் தீர்மானிக்கும் நோக்கத்துக்காகப் பின்வரும் கட்டணங்கள், அவையாவன:—

(அ) முயற்சியினது வருமானத்திற்கு முறைப்படி பொறுப்பாக்கப்படற்பாலனவான, கொடுக்கப்பட்டனவாயினுஞ்சரி, அல்லது சேர்மானமானவையாயினுஞ்சரி முயற்சியினது தொழிற்பாட்டு, தாபன, மற்றும் ஏனைய செலவுகள்; அத்துடன்

(ஆ) முயற்சியினது அசைவுள்ளனவும் அசைவற்றனவுமான சொத்தினது தேய்மானத்தை மேவுவதற்கான ஏற்பாடு,

ஒவ்வொரு முயற்சியின் வருமானத்திலும் எதிரீடு செய்யப்படல் வேண்டும்.

(3) நிதியாண்டான 1993 ஆம் ஆண்டின்போது, இச்சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையின் I ஆம் நிரையிற் குறித்துரைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு முயற்சியின்பேரிலும், அரசாங்கத்தால் உறப்படும் செலவினம் அந்த நிதி ஆண்டின் போது அத்தகைய முயற்சியிலிருந்து அரசாங்கம் பெறும் வரவுகளிலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும். ஆனால், அத்தகைய செலவினம் அந்த அட்டவணையின் II ஆம் நிரையிலுள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய எல்லையை விஞ்சுதலாகாது.

(4) நிதியாண்டான 1993 ஆம் ஆண்டின் முடிவில், இச்சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையின் I ஆம் நிரையிற் குறித்துரைக்கப்பட்டுள்ள ஏதேனும் முயற்சியிலிருந்து நிலுவையாகவுள்ள பற்று மீதி, அந்த அட்டவணையின் IV ஆம் நிரையிலுள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய எல்லையை விஞ்சுதலாகாது. அத்துடன் அந்த நிதியாண்டின் முடிவில் அந்த முயற்சியின் மொத்தப் பொறுப்புகள், அந்த அட்டவணையின் V ஆம் நிரையிலுள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய எல்லையை விஞ்சுதலாகாது.

4. நிதியாண்டான 1993 ஆம் ஆண்டின்போது எப்போதாயினும் இச் சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையின் 1 ஆம் நிரையிற் குறித்துரைக்கப்

பட்டுள்ள ஏதேனும் முயற்சியிலிருந்து அரசாங்கம் பெறும் வரவுகள், அத்தகைய முயற்சியின்மீது அரசாங்கத்தினால் உறப்பட்ட செலவினங்களைச் சமாளிப்பதற்குப் போதியனவாயிராவிடின், அமைச்சர், அத்தகைய செலவினத்திற்கு அவசியமென அவர் கருதும் அத்தகைய தொகைகள் முற்பணங்களாகத் திரட்டு நிதியத்திலிருந்து அல்லது அரசாங்கத்துக்குச் சேர்ந்த அல்லது அதனிடமுள்ள வேறேதேனும் நிதியத்திலிருந்து அல்லது பணங்களிலிருந்து கொடுக்கப்படற்பாலதாதல் வேண்டுமெனக் காலத்துக்குக் காலம் கட்டளை மூலம் பணிக்கலாம். எவ்வாறாயினும், அவ்வாறு முற்பணமாகக் கொடுக்கப்படும் பணத்தொகைகளின் கூட்டு மொத்தத் தொகை, அந்த அட்டவணையின் II ஆம் நிரையிலுள்ள அதன் நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள செலவினங்களின் ஆகக்கூடிய எல்லையை விஞ்சாதிருத்தல் வேண்டும். அத்தகைய முயற்சி சம்பந்தமாக அவ்வாறு முற்பணமாகக் கொடுக்கப்பட்ட ஏதேனும் பணத்தொகை அமைச்சரால் கட்டளைமூலம் பணிக்கப்படக்கூடிய அத்தகைய முறையில் திரட்டு நிதியத்துக்கு மீண்டும் மீளளிக்கப்படுதல் வேண்டும்.

5. (1) இச்சட்டத்திற்கான முதலாம் அட்டவணையின் ஏற்பாடுகளின் பயனைக் கொண்டு, அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள எந்தத் தலைப்பின்கீழும் தோன்றும் எந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழும், மீண்டுவருஞ் செலவினத்திற்குக் குறித்தொதுக்கப்பட்டிருந்து, ஆனால் செலவு செய்யப்படாமலும் அல்லது செலவு செய்யப்படுதல் சாத்தியமில்லாமலும் இருக்கும் எவையேனும் பணங்கள், திறைசேரிச் செயலாளரின் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட வேறெவரேனும் அலுவலரின் கட்டளைமூலம் அந்நிகழ்ச்சித் திட்டத்திற்குட்பட்ட ஆக்கப்பொருட் செலவினத்திற்கெனச் செய்யும் குறித்தொதுக்கலுக்கு அல்லது அத்தலைப்பிற்குட்பட்ட வேறேதேனும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழான மீண்டுவருஞ் செலவினத்தின் அல்லது மூலதனச் செலவினத்தின் குறித்தொதுக்குகளுக்கு மாற்றப்படலாம்.

(2) இச்சட்டத்திற்கான முதலாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் தலைப்பின் கீழுள்ள நிகழ்ச்சித் திட்டமெதன் கீழும் மூலதனச் செலவினத்துக்கென ஒதுக்கப்பட்டுள்ள பணங்களெவையும் அக்குறித்தொதுக்கலிலிருந்து மாற்றப்படல் ஆகாது.

6. (1) வரிகளிலிருந்தும் வேறு மூலங்களிலிருந்தும் பெறப்படும் பெறுகைகள், அதிகாரமளிக்கப்பட்ட செலவினங்களுக்கு நிதி வசதியளிப்பதற்கு என எதிர்பார்க்கப்பட்ட பணத் தொகைகளையும் விடக் குறைவாயிருக்குமென; அல்லது

(2) ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்கு அல்லது நோக்கங்களுக்கு முதலில் ஒதுக்கப்பட்ட பணத்தொகைகள் மேலும் தேவைப்பட மாட்டாவென,

அமைச்சர் திருப்திப்படுமிடத்து, திரட்டு நிதியத்திலிருந்து அல்லது அரசாங்கத்திற்குச் சேர்ந்த அல்லது அதனிடமுள்ள வேறேதேனும் நிதியத்திலிருந்து அல்லது பணங்களிலிருந்து அவரால் வழங்கப்பட்ட ஆணைப் பத்திரத்தின் அகாரத்தின் கீழான செலவினத்திற்காக முன்னர் வழங்கப்பட்ட எவையேனும் பணத்தொகைகளை அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் முழுமையாக அல்லது பகுதியளவில் அவர் மீளப் பெறலாம்.

7. அமைச்சரானவர்—

(அ) இச்சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையின் II ஆம் நிரையிலும் IV ஆம் நிரையிலும் V ஆம் நிரையிலும் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆகக் கூடிய எல்லைகளுள் எதனையும்.

(ஆ) இச்சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையின் III ஆம் நிரையில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆகக் குறைந்த எல்லைகளுள் எதனையும்.

அரசாங்கத்தின் அங்கீகாரத்தோடு 1994 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆந் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் கட்டளை மூலம் வேறுபடுத்தலாம் அல்லது மாற்றலாம்.

இப்பிரிவின் கீழ் ஆக்கப்படும் கட்டளை எதுவும், பாராளுமன்றத்தினாலான தீர்மானத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்டிருந்தாலன்றிப் பயனுடையதாதலாகாது.

அத்தகைய கட்டளை எதுவும், அதன்கண் அவ்விதம் கூறப்பட்டிருந்தால், அதன்கண் குறித்துரைக்கப்பட்டிருக்கக் கூடியதும் அத்தகைய கட்டளை ஆக்கப்பட்ட தேதிக்கு முந்தியதுமான அத்தகைய தேதியிலிருந்து பயனுடையதாயிருந்ததாகக் கருதப்படல் வேண்டும்.

8. பாராளுமன்றமானது, தீர்மானத்தின் மூலம் இச்சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையை, அட்டவணையின் தோதான நிரைகளுக்கு ஏதேனும் முயற்சியையும், அத்துடன்

(அ) அத்தகைய முயற்சி தொடர்பிலான எல்லா ஆகக்கூடிய எல்லைகளையும் அல்லது அவற்றுள் எவற்றையும்;

(ஆ) அத்தகைய முயற்சிகள் தொடர்பிலான ஆகக் குறைந்த எல்லையையும்;

சேர்ப்பதன் மூலம் திருத்தலாம்.

9. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையில் ஏதேனும் ஒவ்வாமை இருக்கும் சந்தர்ப்பத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

**பணச் சட்டத்தினைத் திருத்துவதற்காகப் பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்கு விதி**

*[1992, பெப்புருவரி 28 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

## ஒழுங்குவிதி

இந்த ஒழுங்குவிதிகள் வலுவில் தொடர்ந்திருக்கும்பொழுது (422 ஆம் அத்தியாயமான) பணச் சட்டமானது அச்சட்டத்தின் 32உ என்னும் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகள் உட்புகுத்தப்பட்டாற்போன்று பயனுறுதல் வேண்டும்:—

''32ஊ. (1) பணச் சபையானது, வர்த்தக வங்கிகள் அல்லாத வேறு வங்கித் தொழில் நிறுவனங்களுக்கு அல்லது அத்தகைய நிறுவனங்களின் ஏதேனும் பிரிவிற்கு அல்லது குழுவுக்கு அதன் தொழிலின் ஏதேனும் அம்சம் நடாத்தப்பட வேண்டிய விதமும் முறையும் தொடர்பாக, பணிப்புரைகள் வழங்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவினால் அளிக்கப்பட்ட தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றி, சபையால் அத்தகைய நிறுவனங்களுக்கு அல்லது அத்தகைய நிறுவனங்களின் ஏதேனும் குழுவுக்கு அல்லது பிரிவுக்கு:—

(அ) கணக்குப் புத்தகங்கள் அல்லது வேறு பதிவேடுகள் அல்லது ஆவணங்கள் பேணப்பட வேண்டிய விதமும் முறையும்;

(ஆ) அத்தகைய நிறுவனங்களினால் எந்த நியதி நிபந்தனைகளின் கீழ் முதலீடுகள் செய்யப்படக்கூடுமோ அந்த நியதி நிபந்தனைகள்;

(இ) அத்தகைய நிறுவனத்தின் மூலதனம், அத்தகைய நிறுவனங்களின் மொத்த வைப்புப் பொறுப்புகளுக்கு அல்லது ஆபத்துக்குரிய சொத்துக்களுக்கு எந்த விகிதாசாரத்தைக் கொண்டிருக்க வேண்டுமோ அந்த ஆகக் குறைந்த விகிதாசாரம்;

(ஈ) அத்தகைய நிறுவனங்களின் திரவச் சொத்துக்கள், அத்தகைய நிறுவனங்களின் மொத்தப் பொறுப்புகளுக்கு எந்த விகிதாசாரத்தைக் கொண்டிருக்க வேண்டுமோ அந்த ஆகக் குறைந்த விகிதாசாரமும் அத்தகைய விகிதாசாரத்தைக் கணிப்பிடுகையில் கணக்கிற்கு எடுத்துக்

கொள்ளப்பட வேண்டிய திரவச் சொத்துக்களின் வகுதிகளும்; ஆகக் குறைந்த விகிதாசாரம்;

(உ) செலுத்தப்பட்ட மூலதனம், ஒதுக்குகள், வேறு இயைபான விடயங்களையும் கருத்திற் கொண்டு, அத்தகைய நிறுவனங்களால் ஏதேனும் ஒரு கம்பெனிக்குப் பகிரங்கக் கூட்டுத்தாபனத்திற்கு, குழுமத்திற்கு, ஆட்களின் அல்லது தனியாட்களின் கழகத்திற்கு அல்லது கூட்டு மொத்தத்தில் தனியாளொருவருக்கு, அவரது நெருங்கிய உறவினர்களுக்கு அல்லது அவர் கணிசமாக அக்கறை கொண்டுள்ள ஒரு கம்பனிக்கு அல்லது குழுமத்திற்கு அத்தகைய நிறுவனங்களினால் செய்யப்படக் கூடிய கடனுதவியின் ஆகக் கூடிய தொகை,

என்பன தொடர்பில் பணிப்புரைகள் வழங்கப்படலாம்.

இப்பிரிவின் நோக்கங்களுக்கு ''கடனுதவி'', ''நெருங்கிய உறவினர்'', ''செலுத்தப்பட்ட மூலதனம்'' அத்துடன் ''கணிசமான அக்கறை'' என்பன 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித் தொழிற் சட்டத்திலுள்ள அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

## 1992 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க அவசரகால (பணச்சட்ட) ஒழுங்குவிதி

*[1992, செத்தெம்பர் மாதம் 7 ஆம் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

### ஒழுங்குவிதி

1. இவ்வொழுங்குவிதிகள், 1992 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, அவசர கால (பணச்சட்ட) ஒழுங்குவிதி என எடுத்துக் காட்டப்படலாம்.

2. (422 ஆம் அத்தியாயமான) பணச் சட்டத்தின் 93 ஆம் பிரிவு, அதன் (2) ஆம் உட்பிரிவுக்கான காப்பு வாசகத்தை உடனடுத்துப் பின்வரும் காப்பு வாசகம் உட்புகுத்தப்பட்டாற்போன்று, இவ்வொழுங்குவிதி வலுவிலிருக்கும் வரையிலும் அத்துடன் வலுவிலிருக்கும் வரையில் மட்டுமே பயனுடையதாக விருத்தல் வேண்டும்:—

''ஆயின், மேலும், பணச் சபையானது, தேசிய பொருளாதாரத்தின் நலன்களைக் கவனத்திற் கொண்டு அது போதுமானதெனக் கருதும் காரணங்களுக்காக, ஏதேனும் வர்த்தக வங்கியை, பணச்சபை குறித்துரைக்கக் கூடிய வாறான அத்தகைய [illegible] பகுதிக்கு மத்திய வங்கியிலான ரூபாய் வைப்புகள் அல்லாத வேறு சொத்துக்களின் வடிவத்தில் தேவைப்பட்ட ஒதுக்குகளின் ஏதேனும் பாகத்தைப் பேணுவதற்கு அனுமதிக்கலாம்.''.